# தொகுப்புத் திருக்குறள்

## மூலமும் உரையும்

4 JUN 1975



திருவள்ளுவர்

TNSDA
04815

தொகுப்பு ஆசிரியர்

**R. N. கல்யாணசுந்தரம்**

சித்திர கவி-கவிசூடாமணி.

2ஆம் உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
1340
கலைக்காட்சிக் குழு
சென்னை

உ

கடவுள் துணை.

# தொகுப்புத் திருக்குறளும்

பரிமேலழகர்
உரையைத் தழுவிய

## கருத்துரையும்.

இஃது

கோ. தா. செட்டிபாளையம்
சித்திர கவி — கவி சூடாமணி
**ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டரால்**
தொகுக்கப்பெற்று,

சைவத் திருவாளர், வெள்ளக்கிணர்
**வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்களால்**
பதிப்பிக்கப்பட்டது.

1955–ஞ

முதற் பதிப்பு 1955.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
4815
4 JUN 1975
M.D.(S), M...

வேளாள அச்சுக்கூடம்,
கோயமுத்தூர்.

894-8111C9
தில்

உ

கணபதி துணை.

# தொகுப்புத் திருக்குறளின்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | i — iii |
| 2 | பாராட்டுரை | iii — xvi |
| 3 | சாற்றுக் கவிகள் | |
| 4 | சித்திர அகராதி | 1 — 9 |
| 5 | இயல்கள் | 9 — 10 |
| 6 | ஆசிரியர் பெயர் | — 10 |
| 7 | நூலின் பெயர் | — 10 |
| 8 | உரையாசிரியர்கள் | — 10 |
| 9 | உரைச் சிறப்பு | — 11 |
| 10 | மொழிபெயர்ப்பு | — 11 |
| 11 | தற்கால உரை ஆசிரியர்கள் | — 11 |
| 12 | அகராதித் தொகுப்பு | 12 — 13 |
| 13 | ஈற்றுச்சீர் தலைப்பு அகராதி | 14 — 20 |
| 13-a | காப்பு | ——— |
| 14 | மூலமும் கருத்துரையும் | 1 —189 |
| 15 | சித்திர அகராதியின் பிற்சேர்க்கை | க — உ |
| 16 | பிழை திருத்தம் | ங — ரு |



தொகுப்பு ஆசிரியர்

R. N. கல்யாணசுந்தரம்

சித்திர கவி–கவிசூடாமணி.

ஓம் முருகா.

# முகவுரை.

இந்நூலைத் தொகுத்து எழுதுவான் துணிந்த காரணம் பற்பல நூல்களைப் படித்துத் தெளிந்தபின் பன்னிரு திருமுறைகளை முறையே பாராயணம் செய்துவருங்கால் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் கூறிய ‘கடலிற் பெரிது, மலையிற் பெரிது, உலகிற் பெரிது எது?’ என்ற திருக்குறளைத் தெரிந்தபின் இத்திருக்குறளில் இன்னும் என்ன அதிசய சித்திரங்கள் இருக்கின்றன என ஆராயப்புகுந்த நிமித்தம் திருக்குறளின் ஈற்றடியை எடுத்துத் தொகுத்தால் இதுவும் உலகிற்குப் பயன்படும் என எண்ணம் தோன்றியது. அதுமுதல் தொகுத்துக்கொண்டுவந்து 1949 மார்ச்சு மாதம் முடிவடைந்தது.

பின் நண்பர், **பி. ஆவுடையப்பன் செட்டியாருக்கு** காண்பிக்க அவர் அதில் சில பகுதிகளைப் பின்பற்றிச் சில குறள்களை அச்சிடுவித்தார்கள். முழுவதும் அச்சிடப்பெருததால் அச்சிட விரும்பி பலநாள் முயற்சி செய்தும் பயன் படாது நீட்டிக்கொண்டே வந்தது. அதன் பயன், ‘பொது நூலாராய்ச்சி புலவர்க்குக் காட்சி — திருக்குறள் பழக்கம் செய்யும் நல்லொழுக்கம் - வள்ளுவர் வாய்மொழி மக்கட்குத் தாய்மொழி — வள்ளுவரடிகள் வான்வழிப் படிகள்’ என்ற நீதிப் பழமொழிகளையும்,

சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து — முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனூர்
பன்னிய வின்குறள் வெண்பா.

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால் — வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங் குணத்தைக் கொண்டு

என்பதனையும் ஓதித் தெளிந்த நமது கொங்கு மண்டல வேளாள குலதிலகரும், ஸ்ரீ ஞானம்பிகை மில் சொந்தக் காரரும் ஆகிய ஸ்ரீமான் சைவத்திருவாளர், வெள்ளக்கிணர், **வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்கள்** இத்தொகுப்புத் திருக் குறளைப் பார்த்து மனமகிழ்ச்சியெய்தி, கருத்துரை வேண்டும் என்று கேட்டதால் ஒருவாறு பரிமேலழகர் கருத்துக்கிணங்க கருத்துரை சேர்த்தினபின் ஷியார் அவர்களால் அச்சிடுவிக்க ஊக்கம் காட்டி 1955-வருஷத்தில் அச்சிடுவித்தார்கள். அவருக்கும், உடன் உதவியாக அவ்வப்பொழுது பிழை திருத்தி உதவிசெய்த திருநெல்வேலி காருகுறிச்சி, அடுக்குமொழி **பி. ஆவுடையப்பன் செட்டியார்** அவர்களுக்கும் பெரிதும் நன்றி செலுத்துவதுடன் அபிப்பிராயம் கொடுத்த பல நண்பர்கள் அவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றி.

**இதன் முக்கியமான தொகுப்புகள் :—**

தெய்வம், மரம், அளபெடை, ஆய்தம், அடுக்கு, உவமை, வல்லினம், மெல்லினம், இடையினம், பண்டமாற்று, முற்றுமோனை, மாச்சீர், காய்ச்சீர், நிரோட்டகம், கிரகணம், ஒற்றிலாதது, முற்றெற்று, கேள்வி, ஆதியந்தம், தோற்றுவாய், பாவி, மயிர், அலகை, பிணம், பதமுத்தி, பரமுத்தி, ழகரம், ளகரம், யானை, யாழ், கலம், காவடி, குன்றி, உப்பு, பாவை எண்கள் முதலிய திருக்குறள்களும், இயல்கள், ஆசிரியர் பெயர், நூலின் பெயர், உரையாசிரியர்கள், உரைச் சிறப்பு, மொழிபெயர்ப்பு, தற்கால உரையாசிரியர்களும், அதிகாரத் தொகுப்பில் உடைமை, உரைத்தல், உறுத்தல், தெரிந்து, அறிதல், ஆமை, ஆண்மை, நட்பு, அச்சம், தல், வு, மை, மாட்சி, வகை, இரங்கல் முதலிய தொகுப்புக்களும், ஈற்றுச் சீர் தலைப்பு அகராதியும், குறள் மூலமும், பரிமேலழகர் உரையைத் தழுவிய கருத்துரையும்

**கவிகளின் முதலில்** வரிசை எண்ணும், **கவிகளுக்குப் பின்னால் குறளின் எண்ணும் அதிகார எண்ணம், அதிகாரத்தில் கவிகளின் எண்ணும், பிற்சேர்க்கையில்** பாம்பு, தீ, கேள்வி,

சர்ப்பம், தாழ்ப்பாள், மான், தாய், விளக்கு, தும்மல், பெரியார், அலகை, அமிழ்தம் என்னும் திருக்குறள்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இத்தொகுப்புத் திருக்குறள் நூலானது கற்றறிந்த பெரியோர்களுக்கும், கவிவாணர்களுக்கும், கதா பிரசங்கக்காரர்களுக்கும், கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் அதிகம் பயன்படும் என்று பல பெரியோர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையினுல் உலகம் கைக்கொள்ளுமாக.

அருளளிக்கும் ஞானம் அளிக்கும்முப் பாலாய்ப்
பொருளளித்த தெய்வப் புலவர் — திருவடியைப்
பூசிப்போர், வாழ்க பொருந்தும் பொருளுணர்ந்து
வாசிப்போர் வாழ்க மகிழ்ந்து.

நலம், நலம், நலம்.

இங்ஙனம்,

**செட்டிபாளையம்,**
கோயமுத்தூர்.

**ரா. ந . கல்யாணசுந்தரம்.**
சித்திர கவி - கவி சூடா மணி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

***கோயமுத்தூர், உயர் சைவத் திருவாளர்,***
***பெரியபுராண ஆராய்ச்சி விரிவுரையாசிரியரும்,***
***வழக்கறிஞரும் ஆகிய***

**சிவக்கவிமணி C. K. சுப்ரமண்ய முதலியார் B. A. அவர்கள்**

## புனைந்துரை.

செட்டிபாளையம் சித்திரகவி – கவிசூடாமணி வித்வான் திரு. **ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டர்** அவர்கள் இயற்றிய **தொகுப்புத் திருக்குறள்** என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன். திருக்குறளுள் நுழைந்து அவரது அருமையான நுணுகிய ஆராய்ச்சியும் ஆர்வமும் புலப்படுசிறது.

இந்நூல் இதுவரை எவருமே செய்திராத பல அரிய வேலைகள் இதில் விளங்குகின்றன. திருக்குறளை எழுத்தெண்ணிப் படித்தவர் என்றால் இவருக்கே தகும். அன்றியும் இவரது ஆராய்ச்சிகளும் தொகுப்புக்களும் அறிவுக்கு இனிமையும் புதுமையும் பயக்கின்றன. சித்திர அகராதி உண்மையில் சித்திரமாகவே அமைந்துள்ளது. அதிலிருந்து இவரது ஆராய்ச்சி எங்கெங்கு நூதன வழிகளில் சேர்ந்திருக்கின்றதென்பது புலனாகும்.

உதாரணமாக மரத்திருக்குறள், காவடித் திருக்குறள், உப்புத் திருக்குறள், பாம்புத் திருக்குறள், தீ என்ற திருக்குறள் என்பவை முதலியவற்றையும் பார்க்கலாம். எண்ணுத் திருக்குறள் என்னும் தலைப்பில் ஒன்று முதல் பல கோடி அடுக்கிய கோடி வரை தொகுத்துள்ளது மிக அருமைப்பாடுடையது.

ஈற்றுச்சீர்களைத் தொகுத்து அவற்றை 354 பிரிவுகளாகப் பகுத்து அவற்றுள் திருக்குறள் முழுதும் கருத்துரையுடன் காண அமைத்தது நூதனமாகவும் ஆசிரியரது புலமைத் திரத்தைக் காட்டுவதாகவும் உள்ளது.

திருக்குறளைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று இங்கு என் நினைவுக்கு வருகின்றது. அஃதாவது திருவள்ளுவர் ஒரு சங்கப் புலவர் ஒருவரிடம் தம் நூலுக்குச் சாற்றுக்கவி கேட்டார். அதற்கு அவர் உமது நூலில் என்ன இருக்கிறது என்று கேட்க, அவர் எல்லாமிருக்கிறது என்றார். அப்போது அந்தப் புலவர், துணி தோய்த்துக் கொண்டிருந்தவர், துணி தோய்க்கும் கல்லைக் காட்டி, இந்தக் கல் உமது நூலில் உண்டா என்று கேட்டார். ஆம்,

இருக்கிறது **"வாழ்நாள் வழியடைக்கும் கல்"** என்றார் என்பது. அதேபோல், இத்திருக்குறள் தொகுப்பில் எல்லாப் பொருள்களும் இருக்கின்றன என்றால் அது உண்மையே யாகும். வேண்டிய திருக்குறளை இலகுவில் எடுத்துக் காட்டுவதற்கு இந்நூல் பெரிதும் துணை செய்கிறது.

நீண்டநாள் அரிதின் முயன்று இந்நூலை ஆக்கித்தந்த ஆசிரியர்பால் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. தமிழ் உலகம் இதனை நன்கு போற்றி ஆதரிப்பதாக.

இதுபோன்ற இன்னும் பல நூல்கள் இயற்றித் தருவதற்கு இதன் ஆசிரியர் வாழ்க, இந்நூல் வாழ்க.

**சேக்கிழார் நிலையம்,**
**கோவை.**

**C. K. சுப்ரமண்ய முதலியார்.**

---

உயர்திருவாளர்

## தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ. அவர்கள்,

***தனித்துணைவர், கலெக்டருக்கு, கோவை.***

***(பர்சனல் கலெக்டர்)***

## அணிந்துரை.

இறைவன் திருவடியைத் தொழுது எழுவதே, கற்றதனால் ஆயபயன் என்றார் வள்ளுவர். அவரது திருக்குறளைக் கற்பதனால் நாம் பெறும் பயன் வையத்துள் வாழ்வாங்கு வாழத் தெரிந்துகொள்ளுதலேயாம்,

இருந்தாலும் தெய்வத் திருக்குறளை எப்படி எப்படி எல்லாமோ கற்க, கற்பிக்க முயலுகிறார்கள். புலவர்கள் சித்திரகவி – கவி சூடாமணி. திரு. **ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டர்** அவர்களுக்கு, திருக்குறளை, அதில் வரும் சொல்லாட்சி, உவமை நலம், அளபெடை, முதலிய அடிப்படையில் தொகுத்துப்பார்க்கவேண்டும் என்று ஆசை தோன்றியிருக்கிறது. அதன்காரணமாகத்தான் இந்தத் **தொகுப்புத் திருக்குறள் சித்திர அகராதியுடன்** உருவாகி இருக்கின்றது.

வள்ளுவர் குறளை வகைப்படுத்திக் கற்பார்க்கு மிக்க துணையாக இருக்கும் கவிஞரது முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியதே. அவர்களுக்குப் புலவர் குழாம் கடமைப்பட்டுள்ளது.

**தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,**
**கோவை.**

திருச்சிற்றம்பலம்.

*உயர் சைவத் திருவாளர்,*

**பண்டித, அ. கந்தசாமி பிள்ளை, அவர்கள்.**

**பேரூர்.**

# மதிப்புரை.

---

நமது அரிய நண்பர், கவிஞர் திலகம், சொன்மழை பொழியும் கொண்மூ, கட்டுரை வரையும் கற்பகம், தமிழர் தலைமகனார், சீரிய, கூரிய பேரறிஞர், சைவ சிகாமணி, தன்னலங் கருதாத சான்றோர், நல்லொழுக்கத்தின் எடுத்துக் காட்டு, புலவரைச் சுற்றமாகக் கொள்ளும் அருங்கலை விநோதர், வேளாண் வாழ்க்கைத் தாளாண்மையினர், உற்றுழியுதவும் பெற்றி வண்மையர், ஆகிய உயர்திரு. **ரா. ந. கலியாணசுந்தரக் கவுண்டர்** அவர்களை முதன்முதல் அடியேன் சந்தித்தது சற்றேறக்குறைய நாற்பது ஆண்டு களுக்கு முன். அப்பொழுது அவர் இயற்றிக் காட்டிய நூல் **"நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு"** என்பது. அதன் பின் ஒன்றன்பின் ஒன்றாய்க் **'கந்தன் சித்திரபந்தன பாமாலை' கந்தன் ஓரெதுகை நேரிசை வெண்பா** முதலிய பல நூல்கள் எழுதித் தமிழணங்கை அணிபுனைந்து உவந்துவருகிறார்கள். இப்பெருந்தகையார் இதுபோழ்து **"தொகுப்புத் திருக்குறள்"** என்னும் அரிய இவ்வாராய்ச்சி நூலை —, நேரினமணியை, நிரல்பட அழுத்திய மாற்றறியாத செழும்பசும்பொன் அணியை நம் தமிழணங்கின் முடி அணியாக அணிகின்றனர்.

இப்பணி அறிஞருலகெங்கும் ஒளி பரப்பி அக இருள் கெடுத்து விளங்கி நிலவும் என்பது திண்ணம். நமது நண்பர் அவர்கள் இன்னும் இன்னபல நற்பணி புரிந்து நீடுவாழ்வார்களாக.

சிவகாம சுந்தரியார் உடனாகிய அரசம்பலவாணப் பெருமானார் திருவருள் பெரிதும் புரிவாராக.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

*கோவை சிட்டி முனிசிபல் உயர்நிலைப் பள்ளி*
*தலைமைத் தமிழ் ஆசிரியர்,*
*திருவாளர், கவியரசு,*

## வித்வான், கு. நடேச கவுண்டர் P. O. L. அவர்களின்

# பாராட்டு உரை.

---

ஒருநாள் காலையில் ரகுவம்சம் என்னும் வடமொழிக் காவியத்தின் ஆருவது சருக்கம் நாற்பத்தொன்ருவது சுலோகத்தைப் படித்தேன். அதன்கண் – ' திருமகள், தான் சேர்ந்திருக்கப்பெற்றவர்களின் குற்றத்தால், இயல்பாக ஓரிடத்தில் நிலையில்லாதவள் என்னும் வசை பெற்ருள். அவ்வசை ப்ரதீபன் என்ற மன்னனுல் நீங்கிற்று ' என்னும் அரிய கருத்தில் என் உள்ளம் ஆழ்ந்தது. அதன்பயனுக, அறம் தவறியவரை விட்டுத் திருமகள் அகல்கின்ருள்; ப்ரதீப மன்னன் சிறிதும் அறம் வழுவாதவனுதலின், திருமகள், இமைப்பொழுதும் அவனைவிட்டு நீங்ககிற்றிலள் என்ற நுண்ணிய கருத்து வெளிப்பட்டது. இக்கருத்து நமது செந்தமிழ் நூல்கள் எதனுள்ளேனும் வந்துள்ளதோ எனை நினைந்து பார்த்தேன். கவிதா சார்வ பௌமர் ஆகிய துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த பிரபுலிங்க லீலையில் உள்ள

" பொறைக் கயிற்றிற் புகழையின் சொல்லெனும்
விறற் கயிற்றின் விருந்தைக் குரவர் சொல்
மறைக் கயிற்றின் மனத்தைத் திருவை நல்
அறக் கயிற்றின் அசைப்பவர் எங்குமே "

என்ற அருமைத் திருப்பாடல் நினைவுக்கு வந்தது. வடமொழி மகா கவியாகிய காளிதாசரும் தென்மொழி மகா கவியாகிய சிவப்பிரகாசரும் எத்தனை கருத்தொற்றுமையுடையர் எனப் பெரிதும் வியந்தேன்.

" எல்லாப்பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் "

என்று சான்றோர் சான்று கூறிய திருக்குறளில் இக்கருத்து எங்ஙனம் கூறப்பட்டுள்ளது என்று நினைவோடிற்று. திருவைப் பற்றிக் கூறும் திருக்குறள்கள் யாவை என நினைத்தபோது, அந்தக் குறட்பாக்கள் எளிதில் என் உள்ளத்தில் தோன்ற வில்லை. திருதிரு என்று விழித்தேன். பின்னர்ப் புத்தகத்தைப் பார்த்துத் தேடிக் கண்டுபிடிக்கலாம் எனத் தவணைவைத்து, வேறு அலுவல்களில் நுழைந்தேன்.

இரண்டொரு மணி நேரம் கழிந்தபின், திருவாளர், சித்திரகவி. **ரா. ந. கலியாணசுந்தர கவுண்டரவர்கள்** எங்கள் குடிலுக்குப் போந்தனர். அவர்களை 'திரு'வினைப்பற்றிக் கூறும் குறட்பாக்கள் உங்கள் நினைவிலிருக்கின்றனவா? என வினவினேன். அவர்கள் உடனே தம் கைப்பையிலிருந்து "**தொகுப்புக் குறள்**" புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்து, பின்வரும் தலைப்புள்ள குறட்பாக்களைக் கூறினார்கள். அவையாவன :— (1) அறனறிந்து, (2) ஊருணி நீர், (3) நல்லார்கட்பட்ட, (4) வினைக்கண், (5) இனத்தாற்றி, என்ற குறள்கள் ஒருவாறு என் விருப்பத்துக்குத் துணை செய்தன. பின்னர், 'அவ்வித்தழுக்காறு', அழுக்காறென ஒருபாவி', மடியுளாள் மாமுகடி', 'இருமனப் பெண்டிரும்' என்பன போன்ற பல குறட்பாக்களை எடுத்துக்காட்டினார்கள்.

எனவே, தத்தமக்குரிய அற நெறியில் நில்லாதவரை விட்டுத் திருமகள் நீங்குவாள் என்ற கருத்தைத் திருவள்ளுவர் பல குறட்பாக்களில் கூறியருளியதை உணர்ந்து மகிழ்ந்தேன்.

மேலே காட்டியுள்ள பிரபுலிங்க லீலைச் செய்யுளில் 'திருவை அறக்கயிற்றில் அசைப்பவர்' என்றது போன்ற சொல்லாட்சி திருக்குறளில் உண்டோ? எனத் திருவாளர் கவுண்டரவர்களை வினவினேன். உடனே அவர் தம் புத்தகத்தின் துணைகொண்டு,

"பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்கும் கயிறு"

என்ற திருக்குறளை எளிதிற் கூறினர்கள்.

இவ்வாறு, நினைந்தவுடன் திருக்குறட் கருத்துக்களையும் சொற்றொடர்களையும் பாக்களையும் கண்டு இன்புறுதற்கு ஏற்ற கருவியான நூல்கள் பல தோன்றின் தமிழ் பயிலுவோருக்கு பெரிதும் துணையாகும் என்ற உண்மையை யான் அனுபவித்து அத்தகைய நூல்களின் தேவையை உணர்ந்தேன்.

**திரு. கவுண்டரவர்கள்** தொகுத்து அச்சிட்ட "**தொகுப்புத் திருக்குறள்**" என்ற புத்தகம் நம் தேவையை பெரிதும் நிறைவேற்றுகின்றமை அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். சொற்களின் தொகுப்பு இந்நூலில் நன்கு அமைந்துள்ளது. பொருள்களின் தொகுப்பும் இதனைத் தொடர்ந்து வரும் என நம்புகின்றேன்.

பல ஆண்டுகளாக அரிதின் உழைத்து இவ்வரும் பெறல் தொகுப்பினையுதவிய **திரு. கவுண்டர்** அவர்கள்பால் தமிழர் பெரிதும் நன்றி பாராட்டற்குறியர் என்பது என் கருத்து.

தமிழன்பர்கள் இந்நூலை நன்கு பயன்படுத்தி மகிழ்வாராக.

**கு. நடேச கவுண்டர்,**

***கோவை.***

உ

இணையிலான் துணை.

# சாற்றுக் கவி

*முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல்*

**திருவாளர், புரிசை, சு. முருகேச முதலியார்** அவர்கள்,

19, குமரன் கோவில் தெரு,

**திருவண்ணாமலை.**

*வள்ளுவர் வாய்மை வகைபலவாச் செய்துலகர்*
*உள்ளுவதற் கேற்ப உதவினன் — தெள்ளுதமிழ்க்*
***கல்யாண சுந்தரன்*** *பட் டீசன் கழல் மறவா*
*வல்லாளன் வாழ்க வினிதே.*

---

**திருவாளர், S. அம்பிகைபாகன் B. A** அவர்கள்,

பிரின்ஸ்பால்,

ராமகிருஷ்ண மிஷின் வைத்தீஸ்வர வித்யாலயம்,

**யாழ்ப்பாணம், சிலோன்.**

கதிர்காம யாத்திரை செய்துவிட்டு ஊர் திரும்பும் மார்க்கத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த பெரியார் திருவாளர், **ரா. ந. கல்யாண சுந்தர கவுண்டர்** அவர்களைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. அவருடன் நான் அளவளாவிய நேரம் மிகவும் சொற்பமாயிருந்தபோதிலும் அந்நேரத்துக்குள் அவர், கற்று அடங்கிய சான்றோர் என்பதை அறியக் கூடியதாயிருந்தது.

அவர் ஈற்றுச்சீரை வைத்துக்கொண்டு **தொகுத்த திருக்குறட்** பதிப்பை நான் பார்வையிட்டேன். இந்நூல் ஆராய்ச்சியாளருக்கு மிகவும் உதவியாயிருக்கும் என்பது திண்ணம். திருக்குறள்களில் வரும் சீர், தொடை ஆதியவற்றையும் தொகுத்துக் கூறியிருப்பது, யாப்பமைதியை ஆராய விரும்புவோர்க்கு உதவியாயிருக்கும். பரிமேலழகர் உரையை ஒட்டி இவர்கள் கொடுத்திருக்கும் கருத்துரை மாணவர்களுக்கும் இந்நூலைப் பிரயோசனமுள்ளதாகச் செய்துள்ளது.

இந்நூலை தமிழ் மக்கள் வரவேற்று ஆசிரியரை ஊக்கப் படுத்துவார்களாக.

***ச. அம்பிகைபாகன்,***

திருநெல்வேலி ஜில்லா, காருக்குறிச்சி, மாணவர் படிப்பகம்
திருவாளர், அடுக்குமொழி, இயலிசைப் பிரகாசர்,
ஜோதிட திலகம்,

# பி. ஆவுடையப்பன் செட்டியார் அவர்கள்

## பாராட்டுப் பாடல்கள்.

---

கற்பார் பயனடையக் கல்யாண சுந்தரனார்
எப்பா வலருமெச்சும் இன்னமுதாய் — முப்பால்
வகுப்பாய்ச்சொல் வாரி வழங்கினர் யார்க்கும்
தொகுப்புக் குறளே துணை. (1)

சித்திரக விப்புலவர் சேர்த்த திருக்குறள் நூல்
புத்திமிகு மக்களுக்கோர் புண்ணிய நூல்—வித்துவத்தின்
சொல்லோ ரொழுங்காய்த் தொகுத்தநூல் ஈதறிஞர்
எல்லோர்க்கும் செய்யும் இதம். (2)

ஊட்டுபா லன்னை யுதவிபோல் ஓர்ந்துதமிழ்
பாட்டுயர்வாம் வள்ளுவர்முப் பால்நூலில் - காட்டுகின்ற
துள்ளுமொழி சேர்த்த தொகுப்புத் திருக்குறட்கு
விள்ளுவதெந் நூலே வியந்து. (3)

அகத்தென் றெடுத்தோ ரணியா யடுக்கித்
தொகுத்த குறளின் துணையாய் — மிகுத்த
அருத்தம் விளக்கி யளித்தார் சுவைச்சொற்
கருத்துரையெ னுஞ்சர்க் கரை. (4)

அவைக்கண் வியக்கும் அறிவும் சிறக்கும்
உவக்குங் கருத்துரையுள் ளோர்ந்தால் — எவர்க்கும்
மயக்கம் விளக்கும் மதியை விளக்கும்
பயக்கும் சொல்லின்பப் பயன். (5)

முப்பாற் பனுவல் முடிவின் மொழியடுக்கித்
தப்பாதே தக்கவுரை தான் விளக்கி — நட்பாகக்
கற்பாற் குதவினன் கல்யாண சுந்தரனார்
நற்பாதை காட்டும் நலம், (6)

***ஸ்ரீ திருப்பேரூர், சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் மடாதிபதியும் ஷி அடிகளார் தமிழ்க்கல்லூரி துணைத்தலைவர் அவர்களுமாகிய உயர்திரு. வித்வான்***

## இராமசாமியடிகள்.

கல் தோன்றி மண் தோன்ருக் காலந்தொட்டு வளந்தது தமிழகப் பண்பாடு. அப்பண்பாட்டை மக்களினத்துக்கு வழங்கும் கருவூலம் திருக்குறள். திருக்குறள் நெறியைப் பின்பற்றுவோர் எளிதில் உணர, ஒரு சொல்லால் முடிந்த குறள்களை ஒருங்கே தொகுப்பின் ஆய்வார்களுக்கும் உணர் வோர்களுக்கும் பெரிதும் பயன்படுமென்பது எனது நெடு நாள் விழைவு.

இம்முறையை முதுபெரும் புலவரும், நாற்கவிச் செம்மலுமாகிய எங்கள் பெரியார், சைவத்திரு. **R. N. கல்யாண சுந்தர கவுண்டரவர்கள்** தொகுத்தமை கண்டு பேருவகை எய்தினேன். இவர்கள் தொகுத்துள்ள முறை, இதுவரை எவரும் வகுத்துக்கொள்ளாததொரு சிறந்த முறையாகும். வல்லின மெல்லின, அளபெடை, ஆய்தம், உவமை யாதிய பற்றிய குறக்களும் தொகுத்துள்ள முறை மிகப் போற்றற் குரியதாகும். இந்நூல் இம்முறையில் வெளிவருவது மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் மற்றவர்கட்கும் பெரிதும் பயன்படும்.

---

### திருவாளர், **P. S. சுப்பையா பிள்ளை** அவர்கள்,

தலைமையாசிரியர். **முத்தமிழ்க் கல்லூரி, காருகுறிச்சி.**

***திருநெல்வேலி ஜில்லா.***

### பாலென்றெடுத்து தேனென்று முடித்த பாராட்டு வெண்பா,

பால்மூன் றுடைய பனுவல் தொகுப்பொன்று
போல் மொழியைச் சேர்த்துப் புதுவழியாய்—நூல்முறையாய்
சித்திரக விச்செல்வர் செய்தவுரை சிந்திப்பார்
சித்தத்துள் தித்திக்கும் தேன்.

முன்னயமாம் வள்ளுவரின் முப்பால் தொகுப்புடனே
சொன்னயமாம் **கல்யாண சுந்தரனார்** சொன்னவுரை
யெண்ணும் பெரும்புலவர் எல்லாரும் பாலினுற்ற
வெண்ணையென்றே சொல்வார் வியந்து.

## உயர்திருவாளர். P. கந்த நரசிம்ம செட்டியார் B. A., B. L.,

*ஜில்லா நீதிபதி,*

டாடாபேட், கோயமுத்தூர்.

## பாராட்டுரை.

உலகின் ஒப்பற்ற நூல்களுள் ஒன்ருகிய திருக்குறளே அறிந்து அதில் நெஞ்சம் தோய்ந்தாலே தமிழனின் இதயத்தில் ஒரு இன்பம் எழும். அந்த அறிவுக் கடலில் மூழ்கி அதில் அமைந்திருக்கும் அரும்பெரும் ரத்தினங்களின் (பொருள்) அழகையும், (ஞான) ஒளியையும் உணரும்போது இன்னும் அதிக இன்பம். கேட்போர் மனம் கவரும்படியோ - படிப்போர் ரசிக்கும்படியோ - உரைசெய்வோருக்குத் திருக்குறள் ஒரு சாதனமாக அமைந்து அவருடைய கல்வி, அறிவு, அநுபவத்தைப் பிறர் அறியப் பயன்படுகின்றது.

ஈத்துவக்கும் பேறும் பெற்றியுமுள்ள பேரறிவாளர்கள் திருக்குறளின் பலவித நயங்களேப் பலமுறைகளிலே பல்லாயிரக்கணக்கானவர்களுக்குப் பயன்பட எடுத்துரைப்பார்கள் அல்லது எழுதுவார்கள்.

அம்மேதாவிகளுள் ஒருவர் எனப் புலவரும் பாராட்டுதற்குரிய திருவாளர், சித்திர கவி - கவி சூடாமணி **ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டர்** அவர்கள் தங்கள் நுட்ப ஆராய்ச்சித் திறமை நிறைந்த **"தொகுப்புத் திருக்குறள்"** என்னும் இந்நூலே ஒரு தனிச்சித்திரம் என்னும்படி இயற்றியிருக்கிருர்கள்.

ஆங்கிலத்தில் (Dictionary of Thoughts) சிந்தனேகளின் அகராதியைப்போல் இது நன்ருக அமைந்திருக்கிறது.

இந்நூலின் தொகுப்பின் போக்கைக் கண்டால், தற்காலம் புது நாகரிக (Buffet Dinner) விருந்து முறை ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு சிறு நிகழ்ச்சியின் மூலமாக அதைச் சுருக்கமாகச் சொல்லுவேன்.

செட்டி நாட்டில் கல்வியும் செல்வமும் கருணையும் மிக்க ஒரு பெரியவர், பெரிய விருந்து நடத்தினுர். விருந்தாளிகள் எல்லோருக்கும் சமமான உபசரிப்பும் சுதந்திரமும் கலந்த ஒன்ருக அவ்விருந்து விளங்கிற்று. விருந்து நடக்கும் மாளிகையில் ஒரு பெரிய ஹால்; அதற்குள் செல்லும் வாயிலின் இரு புறத்திலும் இருவர் நின்ருர்கள். ஒருவரிடம் வெள்ளித் தட்டுகள்; மற்ருெருவரிடம் சிறு கரண்டிகள் (ஸ்பூன்கள்). அந்த ஹாலில் ஒவ்வொருவரும் ஒரு தட்டையும் ஒரு சிறு கரண்டியையும் பெற்றுக்கொண்டு உள்ளே சென்ருர்கள். சென்று உள்ளே பார்த்தால், ஒருபக்கம் மேஜையின்மேல் தட்டுகளில் லட்டு, ஹல்வா முதலான பலவித இனிப்புத் தின் பண்டங்களும் இன்னெருபக்கம் மேசையின் மேல் தட்டுகளில் கார ருசியுள்ள பதார்த்தங்களும் அன்ன தினுசுகளும் இன்னுமொருபக்கம் பழ தினுசுகளும் இன்னுமொருபக்கம் பாயசம் நிறைந்த டம்ளர்களும் குங்குமப்பூ கலந்த குளிர்ந்த நீருள்ள டம்ளர்களும் இருந்தன. ஒரு தட்டையும் ஒரு சிறு கரண்டியையும் வாங்கிக்கொண்டு உள்ளே சென்ற ஒவ்வொருவரும் அவரவருக்கு இஷ்டமான இனிப்பு அல்லது கார பதார்த்தங்களைப் போதியஅளவு எடுத்துத் தங்கள் தட்டுகளில் வைத்துக்கொண்டு ஆர அமர்ந்து உண்டுகளித்தார்கள்; எல்லோரும் சுதந்திரத்தோடு இஷ்டமான பதார்த்தத்தை விரைவில் உண்டு இன்பம் பெற்ருர்கள். கால தாமதமின்றி தங்கள் இஷ்டப்படி உண்டு அனுபவித்தது போலவே, (**இந்தத் தொகுப்புத் திருக்குறளில்**) ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய அதிகாரத்தில் உள்ள குறளையோ, ஈற்றுச் சீர் ஞாபகங்கொண்டு அச்சீர் கொண்ட குறளையோ விரைவிலே,

வீண் சிரமம் இல்லாமல் எடுத்துப் படித்து அதன் உரையையும் அறிந்துகொள்ளலாம்.

பரீட்கைஷக்குச் செல்லும் மாணவர், மாணவிகளுக்கும், சொற்பொழிவாற்றுவோர்களுக்கும் இத் **தொகுப்புத் திருக்குறள்** பெரிதும் துணை செய்யும். புத்தம் புதிய முறையிலே திருக்குறளைத்தொகுத்த இந்த ஆசிரியர் அவர்களுக்குத் தமிழ் அன்பரின் நன்றி உரித்தாகும்.

**கந்தநரசிம்மன்.**

*உடுமலை, தமிழ் வித்வான், கர்ணாமிர்தம், கணித சோதிடம்,*

## திருவாளர், வெ. ரா. கந்தசாமியடிகள் இயற்றிய

## நல்லுரை.

---

கோ. தா. செட்டிபாளையம் சித்திர கவிப் புலவர், கவி சூடாமணி, **ரா. ந. கல்யாணசுந்தரனார்** அவர்கள் இயற்றிய **" தொகுப்புத் திருக்குறள் "** என்னும் நூலைக் கண்ணுற்றேன். 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்னும் இலக்கியத்திற்கு இலக்கியமாய், மனக்கண் கொண்டு காணுந்தோறும் வியப்பும் ஆனந்தமளிப்பதாய், 'அரியவற்றுளெல்லாம் அரிதே' என்னும் திருமறைக்கு எடுத்துக்காட்டாய், கற்ற புலவர்களது உள்ளக்கருத்தை தெள்ளத் தெளிவிப்பதாய், மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவதாய், உபந்யாசகர்களுக்கு 'இழுக்க லுடையுளி ஊற்றுக்கோல்' போல்வதாய் திகழ்கின்றது. இத்தகைய நூலொன்று இதுகாறும் யாவராலும் இயற்றிலது, தமிழ் நிலத்திற்கு கருவூலமாய்த் திகழ்வது, ஆகிய இந்நூலியற்றிய பெரியார் நீடு வாழ்கவெனவும், இந்நூல் தமிழ் நிலமெங்கணும் பறந்து சென்று சிறந்து விளங்கவெனவும் எல்லாம் வல்ல இறைவனை முழுமனதுடன் போற்றுவம்.

**வெ. ரா. கந்தசாமியடிகள்.**

உ

சிவமயம்.

திருமதி சி. ந. குழந்தையம்மாள் அவர்கள்,

***தமிழ் விரிவுரையாளர்,***

**நிர்மலா கல்லூரி,**

**கோவை.**

தமிழன்பர்களுடைய மனோவேகத்தையறிந்த **தொகுப்புத் திருக்குறள்** ஆசிரியர் அவர்கள் திருக்குறள் அறிவை எளிதிலும், மகிழ்வுடனும் படிக்க வழிகாட்டியுள்ளார். வகைப் படுத்தித் திருக்குறளைப் படித்த மாணவர்கள் மற்ற தலைசிறந்த தமிழ் நூல்களையும் இம்முறையில் படிக்க முற்படுவர் என்பது திண்ணம். பல நாட்கள் அரும்பாடு பட்டுத் தொகுத்துத் தந்த ஆசிரியர் அவர்களுக்கு தமிழுலகம் உள்ளளவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அன்னாருக்கு நீண்ட ஆயுளும் பன்னலமும் பெருக இறைவன் திருவருள் பெருகுவதாக!

**சி. ந. குழந்தையம்மாள்.**

**THE YOGA-VEDANTA FOREST UNIVERSITY**

P. O. SIVANANDA NAGAR, Rishikesh (Himalayas) 26—12—55.

Sri R. N. Kalyanasundara Gownder,
CHETTIPALAYAM.

Blessed Self,

Om Namo Narayanaya. salutations.

I am in receipt of the book ''Tirukkural'' you have so Lovingly sent to me. The same will be used by the students of the Yoga Vedanta Forest University. Many thanks for it.

Contentment is the richest treasure. Peace of mind is the rarest jewel. Truthfulness is the best friend.

May God bless you with Health, Peace and Bliss Eternal!

Thy own Self,

SSm.

*Sivanandamaharaj.*

---

டாக்டர் : **மா. இராசமாணிக்கனார்,** 36, மஞ்சனக்காரத் தெரு,
எம். ஏ. எல். டி. எம். ஓ. எல்.
**கலைமுதுபுலவர்.** B. N. T. **மதுரை,**
சென்னை பல்கலைக்கழகம் தமிழ்பாடப்
புத்தக குழுஉறுப்பினர். **23—12—55.**

அன்புள்ள ஐயா, நீங்கள் அன்புடன் அனுப்பிய தொகுப்புத் திருக்குறள் வந்துற்றது. இவ்வாறு ஒரு பதிப்பு வரவேண்டுவது அவசியமே, உங்கள் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது தமிழ்த்தாயின் ஆசி உங்களுக்கு உரியது.

உங்கள் நல்வாழ்வை விரும்பும்,

***மா. இராசமாணிக்கம்.***

**A. C. PAUL NADAR, B.A., B.L.,** SOUNDARA VILAS,
TUTICORIN.

சித்திரகவி–கவிசூடாமணி

உயர்திரு, **R. N. கல்யாணசுந்தரம்** அவர்களுக்கு,

அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய தங்களின் தொகுப்புத் திருக்குறள் வரப்பெற்றேன் தங்களுக்கு நன்றி பல.

திருக்குறளின் ஈற்றடியை எடுத்துத் தொகுத்திருக்கிறீர்கள் ஈற்றடியில் அமைந்துள்ள பொருள் செறிந்த சொற்களைத் தாங்கள் நிரல்படுத்தி எளிய உரையுடன் வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது தங்களுடைய சீரிய உழைப்பைப் பாராட்டுகின்றேன். குறளில் அமைந்துள்ள எல்லாச் சொற்களையுமே தாங்கள் இவ்வாறு தொகுத்து வெளியிடுதல் பல்வகையிலும், பயன்தரத்தக்கதாகும்.

அன்பர்,

**A. C. பால் நாடார்.**

---

சேலம் ஜில்லா, இடைப்பாடி ஞான இன்பவெளி ஆசிரியர்
அருளார் முனிவர் கலைஞர், ஞானியார் சமரச சன்மார்க்க
குருமணி ஸ்ரீ **கோ. வை. சின்னஆறுமுக சுவாமிகள்**
அருளிய அன்புரை.

---

நந்தலில் நலமார் செந்தமிழ் பெரும்புலமை தழைத்தொளிர்பெரியீர் தாங்கள் அன்புடன் அனுப்பிய தொகுப்புத் திருக்குறள் கிடைக்கப் பெற்று முற்றும் படித்துப்பார்த்தேன் மகிழ்ந்து இன்புற்றேன் கற்றோர் உள்ளம் களிக்கும் வண்ணம் அதிக சிரமப்பட்டு பல்நெடுநாள் தொகுத்து வெளியிட்டிருப்பதானது நமது தமிழ்நாடு செய்த தவப்பயனேயாகும் என்று உறுதியுடன் கூறலாம்.

உலகிற்கு அவரால் என்னபயன் என்பதை ஆராயும் போதுதான் அவருடைய அழியாத புகழுடம்பு உருவங்கொண்டு உயிர்த்தெழுந்து நிலைத்து நிலவுலாவும், என்பதற்குச்சான்று தொகுப்புத்திருக்குறளும் முன்னர் அச்சிட்டு வெளியிட்ட இராமகிருஷ்ணபரமஹம்சர் உபதேசமொழி

வெண்பா மாலையுமே போதுமானதாகும். அன்பர் திரு. கோவை. செட்டிபாளையம், **ரா. ந. கல்யாணசுந்தரனார்** அவர்கள் துவைத, அத்வைத, ஞானாமிர்தமாக சுமார் 25 நூல்கள் உலகமக்களுக்கு ஞானதியான விருந்தாக அளித்துள்ளார்கள் என்பதும் உலகமறிந்ததே,

நற்றிறல் கெழுமிய சொற்றிற நாவலீர் செயற்கருஞ் செயல்புரி செம்புலப்பெரியீர் அயர்ச்சியில் முயற்சியால் அருங்குணமுடையீர் தண்டமிழ் அன்னையின் தவப்பெரும் புலவீர் தந்நலம் கருதா தமிழ்நலம் கருதும் பெருந்தகை போற்றத்தக்கதே. கருத்துணர்ந்து கற்றறிந்த கவி-சூடாமணியே அம்பலத்தில் ஆடுகின்ற அரன் திருவருளால் சீரும் சிறப்பும் பேரும் புகழும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று இனிதுவாழவேண்டுமென்று என்னகத்தே இடையறாது இன்ப சொரூபமாய்த் திகழும் அன்புவடிவத்தை அழுத்தமாய் வழுத்துகின்றேன்.

தங்கள் அன்பன்,

**குருமணி, கோ. வை. சின்னஆறுமுகசுவாமி.**

---

*தொகுப்பு ஆசிரியர்:— சித்திரக்கவி, கவி சூடாமணி*

***உயர்திரு ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டர் அவர்கள்***

*செட்டிபாளையம் P. O. போத்தனூர் வழி*
*கோவை தாலூக்கா.*

---

*இந்நூல் ஒவ்வொரு சொற்பொழிவாளர்களிடத்திலும் இருக்கவேண்டிய சிறந்த நூல். தமிழகத்தின் புகழ்பெற்ற பல பெரும் புலவர்களின் வாழ்த்துரைகளையும் பாராட்டுரைகளையும் கொண்டது. ஒவ்வொரு குறளுக்கும், விளக்கமான சுருக்க உரையுடன் அழகான சித்திர மலர்களாக தொகுத்து இம்மாபெரும் பணியையாற்றின, அருட்கலா ஞானப் பெரியார் கொங்கு நாட்டு ரா. ந. கல்யாணசுந்தரனார் அவர்களுக்கு தமிழ மக்களின் நன்றி உரித்தாகுக.*

*25—2—56 தேதி பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ் கல்லூரியில் இப்பெரியாருக்கு பொன்னாடை போர்த்து விழா நடைபெற்றது.* ஆசிரியர்: ***அருள் முரசு.***

*25—2—56 அருள்முரசு. கோவை.*

உ

திருச்சிற்றம்பலம்.

திருவாளர், **அ. பெ. அழகராயபிள்ளை**, தமிழறிஞர்
தாரமங்கலம் P. O. சேலம் மாவட்டம், 23—12—55.

அறுசீர்கழில் நெடில்,

**சீர்மேவு கல்வியொடு செல்வமலி குடிதுவன்றி செழிக்க வோங்கும்
ஏர்மேவு செட்டிபா ளையமென்னும் எழில்நகரி லியற்ற மிழ்தேர்
பார்மேவு திருக்குறளைத் தொகுப்புநூற் குறளாகப் பரிவிற் றந்த
பேர்மேவு கல்யாண சுந்தரனுர் நெடுநிலத்திற் பிறங்க மாதோ.**

---

திருவாளர். **P. A. ராஜு செட்டியார்**, கோயமுத்தூர்.
அன்புமிக்க திருவாளர். **ரா. ந. கல்யாணசுந்தர கவுண்டர்**
அவர்களுக்கு வணக்கம்

தாங்கள் என் நினைவுகொண்டு அன்பளிப்பாகத் தந்த தொகுப்புத் திருக்குறள் பெற்று மகிழ்ந்தேன். தங்களது நூலில் சிலபகுதிகளைப் பார்வையிட்டதில் வள்ளுவர் திருக்குறளுக்கு உரைகண்ட புலவர்கள் பலருள் தாங்கள் சித்திரக்கவிஞரெனத் திகழ்ந்து குறளென்னும் செந்தமிழ்த் தேனினை வடித்தெடுத்து மக்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் வண்ணம் தொகுத்திருக்கும் கருத்து மிகத் தெளிவாகவும், கற்றோர்க்கும், கற்போருக்கும் துணையாகவும் மற்றையோர்கட்கு அறிவின் திறவுகோலாகவும், பள்ளி மாணவிகளுக்கு சன்மார்க்கப் பாதையாகவும் அமைத்துள்ளீர்கள்.

தங்களைப்போன்றவர்கள் இத்தகைய அறநூல்களை ஆராய்ந்து அவ்வப்போதுவெளியிட்டு வருவதால்தான் மக்கள் மனதில் மதப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் உண்டாகிறது அதுவுமன்றித் தமிழ்த்தாயும் சிறப்புடன் வளர்ச்சிபெற ஏதுவாகிறது.

ஆகவே தாங்கள் மேலும் பன்னெடுங்காலம் வாழ்ந்து பல காவிய ரத்தினங்களை வெளியிட்டு உயர்வு பெற்றுவாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம். இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
**ப. அ. இராசு செட்டியார்.**

ஓம் சிவம்.

விளாங்குறிச்சி, ஆராய்ச்சிமணி.

*திருவாளர், வி. நா. மருதாசலக் கவுண்டர் இயற்றியவை,*

நேரிசை வெண்பாக்கள்.

**தெய்வத் திருக்குறட் பாடற் பலவகையை
மெய்வைத்த வுட்கருத்தை வீறுபெறச்—செய்வதற்குச்
சிந்தாமணியாந் தொகுப்புத் திருக்குறள் நூல்
நந்தா மணிவிக்காம் நன்கு.**

**தென்சோ லணங்கின் சிரோமகுட மாமணிபோல்
இன்சொல் பொதிந்தொளிரு மிந்நூலைத்—தன்செயலால்
ஆக்குங் கவிப்பெரிய ஞன மணவழகன்
தேக்கும் புகழ்வாழி சீர்ந்து.**

---

**தொகுப்புத் திருக்குறள் மூலமும் உரையும்:-**

தொகுப்பு ஆசிரியர் செட்டிபாளையம் 'சித்திரக்கவி' கவிசூடாமணி **ரா. ந. கல்யாணசுந்தரக் கவுண்டர்**

*பழமைச்சிறப்பைக் கிழமையோடு உணர்ந்து கடைப் பிடிக்கும் பண்பாடுடைய இவ்வாசிரியர், திருக்குறளின் மேன் மையைப் புலப்படுத்த இந்நூலைத் தந்துள்ளாரென்று சொல்லுவ தோடு எண்ணற்ற பல தலைப்புகளில் வைத்துக்காணத்தக்க உட்கிடைகளை உடையது திருக்குறளெனும் பேருண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படுத்திவிட்டாரென்றும் கூறுதல் வேண்டும். ஆசிரியரது அறிவாராய்ச்சித் திறத்தினையும் பள்ளி மாணவர் முதல் பலருக்கும் பயன்படத்தக்க நற்செயலில் ஈடுபட்ட பண்பினையும் தமிழுலகம் பெரிதும் பாராட்டுமென் பதில் ஐயமில்லை.*

தருமபுர ஆதீனம் பாலகவி **வைநாகரம்**
**இராமநாதஞ் செட்டியார்,**
செட்டிநாடு ஆசிரியர்,
**தேவகோட்டை.**

ஓம்

கடவுள் துணை.

கா. குப்புசாமி கவுண்டர்,
குறளும் கீதையின் ஆசிரியர்.
மானுப்பட்டி P. O.
உடுமலை.

# தொகுப்புத் திருக்குறளின் பாராட்டுரை.

கல்லாதவறிவு மேற்கேளாத கேள்வி கருணை சிறிதேதுமில்லாக் காட்சி முதலான பலனற்ற செயல்களினால் மக்களின் அரிதான வாழ்நாள் பாழ்படுகின்றன வெனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார் நம் தாயுமானப் பெருந்தகையார் இதையே "வீழ்நாள்படாமை நன்றாற்றினஃதொருவன் வாழ்நாள் வழியடைக்குங்கல்" ஒருவன் தனது வாழ்நாளை வீணாக்காமல் நன்மையான அறமார்க்கத்தில் பயன்படுத்துவானாயின் அது அவனது பிறப்பிற்குக் காரணமாகிய வழியை மறித்து பிறவிப் பிணியை அகற்றுகிறது என்பது தெய்வப்புலவரின் அறிவுறையாகும். இவ்வுண்மை நெறிகளைக் கைக்கொள்ளாமல் புலன்வசத்தராய் உலக வேடிக்கை விநோதங்களிலேயே வாழ்நாளை வீணாக்குபவர்களின் கதியானது "பிறப்பதே தொழிலாகி இறக்கின்றாரே" என்ற அப்பரின் வாக்குப்படி அடிக்கடி பிறப்பதையும் இறப்பதையும் தவிற யாதொரு நன்மையையும் அடைவதில்லை என்பது நம் மூதாதையராகிய தீர்க்கதரிசிகளின் அறிவுரையாகும்.

அவ்வாறாக வாழ்நாளை வீணாகக்கெடுத்துவிடாமல் ஒருவன் உலக மக்களின் நன்மைக்காகவும் இறைவன் கருணைக்குப்பிரீதியாகவும் உள்ள நன்மையான காரியங்களை நூறு வருடங்கள், அல்லது ஆயுளுள்ளவரையிலும் செய்துகொண்டிருப்பினும் அவ்வுத்தமனை உலகம் போற்றுகிறது கடவுளுக்கும் உகந்தவனாகிறான் அவனைக் கருமங்கள் பந்தப்படுத்துவதில்லை என்பது (ஈசாவாஸ்ய உபநிடதம்) இரண்டாவது மந்திரவாக்கியத்தின் உபதேசமாகும் அவனையே (கிருத கிருத்தியன்) செய்யவேண்டுவ

தனைத்தும் செய்துமுடித்தவன் எனக்கீதை பாராட்டு கிறது. இவ்வாறு பல தெய்வ நூற்களில் கூறும் பல பாராட்டுகளுக்கும் சான்ருக விளங்குபவர் நமது சித்திரக் கவிப்பெரும் புலவர் கவி சூடாமணி செட்டிபாளையம் **ரா. ந. கலியாணசுந்தரக் கவுண்டரவர்களேயாவர்** அவர் முதிர்ந்த வயதாகியும் கல்விப் பெருக்கில் வாலிபத் தன்மையுடனேயே தோற்றமளிக்கிருர். அவர் பல பக்திச் சுவையான பாடல்களையும ஞானமார்க்கத்திற்குறிய பல கவிகளையும் இயற்றி அச்சிட்டு எல்லா மக்களும் ஈசுவர கிருபைக்குப் பாத்திரமாம் வண்ணம் “யான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்” என்ற பரந்த நோக்குடன் ஓய்வு ஒழிவு இன்றி கல்வியறிவுப்பணியாற்றி வருகிருர் என்பது தெற்றெற்ன விளங்குகிறது.

மற்றும் நுண்மாண் நுழைபுலம் அமைந்த சித்திர கவிப் பெரியார், தற்போது பெறும் ஆராய்ச்சியான தெய்வப்புலவரின் அறிவுறையமுதை தொகுப்புக்குறள் என்ற புனைப்பெயரமைத்து தேவாமிர்தத்தையே உலக மக்களுக்கு அருளியுள்ளார் எனின் அதுமிகையாகாது.

எவ்வாறெனின் அமுதத்தைச் சுவைப்படுத்த வேண்டுவதில்லை எனக்கம்பநாட்டாழ்வார் இராமகாவியத் தில் கூறுகிருர் அவ்வமுதச் சுவையை உலகோர் கண்டது மில்லை என்ருலும், வள்ளுவரருளிய திருக்குறள் என்ற அமுதமானது எல்லா மக்களுக்கும் இனிய சொற்சுவை பொருட்சுவைகளை உண்டாக்குவதாகும். அவ்விதமான சுவை நூலையும் வகுத்துத் தொகுத்து வேண்டுவார் வேண்டியபடியாக இலகுவில் உணர்ந்து பயனடையும் வண்ணம் அமுதச்சுவைக்கும் ஓர் புதிய சுவையை இந் நூலின் மூலமாக உண்டாக்கியிருக்கிருர் என்பது புலமிக்க வர்க்கே புலனுகும். இதை,

> புலமிக் கவரைப் புலமை தெரிதல்
> புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
> பூம்புனலூர பொது மக்கட் காகாதே
> பாம்பறியும் பம்பினகால்.

என்னும் பழமொழி மூல நூலின் வெண்பாவாலேயே வெளியாகிறது.

மேலும், ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளை யும் எவ்வளவு காலமாக ஆராய்ந்துணர்ந்தாரோ என்பதும் எவ்வித ஆழ்ந்த சிந்தனையில் தம் அறிவைப் பயன்படுத் தினாரோ வென்பதும் அவர் தொகுப்பின் பகுப்பை யுணரின் புலவர்களின் மனம் பெருவியப்பெய்தும் என்ப தில் யாதொரு தடையும் இருக்கமுடியாது இத்தொகுப் பின் மூலம் குறளுக்கே ஒரு பெரு மதிப்பையும் அதன் உட்கருத்தையும் உலகமக்களுக்கு வெளியாக்கியுள்ளார் எனபதை எண்ணிப் பெருமகிழ்வெய்த வேண்டியவர்களா கிறோம்.

அன்னாரின் ஆயுள் நீடிக்கவும் இன்னும் இது போன்ற பல தெய்வ நூற்களைப் பாகுபடுத்தி சாதாரண மக்களும் கற்றுணரும் வண்ணம் உலகிற்கு உதவிபுரிய வும அதற்காதாரமாக குறைவிலாச் செல்வவளம் பெருக வும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியுமாறு வேண்டு கிறேன் நலம். சுபம். இங்ஙனம்,

கா. குப்புசாமிக் கவுண்டர்.

---

ஓம்.

சிவமயம்

விளாங்குறிச்சி, "ஆராய்ச்சிமணி"

வி. நா. மருதாசலக் கவுண்டர் இயற்றியவை

கட்டளைக் கலித்துறை.

பகர்கவி சூடா மணிசித் திரகவிப் பட்டமிரண்
டிகமதிக் கப்பெறுங் கல்யாண சுந்தர வேந்தனுக்குத்
தகவொளிர் பொன்னுடை போர்த்து விழாவினுற் றண்டமிழ்தான்
சகமதிலோங்கி மறுமலர்ச் சிப்பாற் றழைத்திடுமே (க)

நேரிசை வெண்பாக்கள்.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டென்—றருள்கூர்ந்த
பாட்டுக் கிலக்கியமாச் சித்ரகவி பாடினன்சொற்
றேட்டு மணவழகன் தேர்ந்து (உ)

முத்தமிழுஞ் செல்வமெனும் முத்தமிழுஞ் செல்வமெனும்
சித்திரப்பா டற்செலவன் செட்டிநகர்—வித்வ
மண வழகன் பொன்னுடை போர்த்தூழி வாழி!
குண வழக ருச்சமெச்சக் கூர்ந்து (ங)

உ

ஆதிபகவன் துணை.

பாராட்டுப்பாடல்.

கு. வெங்கடசாமி,
மானுப்பட்டி போஸ்ட்,
உடுமலை தாலுக்கா.

வெண்பா

1. ஆதி யகரமும்பின் அந்தம் னகரமெய்யா
ஓது குறட்பாவின் உட்பொருளை—மேதினியோர்
கற்க இனிதாகக் காட்டித் தொகுத்தான்செஞ்
சொற்கலைக்கல் யாணசுந்தரன்

2. தெள்ளத் தெளிந்த திருக்குறள் நூல் தொகுப்பென்
றுள்ளற் கெளிதா உரைத்திட்டான்—வெள்ளைக்
கலைவாணி போற்றுங் கவிஞரே ருகுங்
கலியாண சுந்தரனுங் காண்

3. ஆய்ந்து பலநாள் அரிதின் முயன்றுமனந்
தோய்ந்து தொகுத்த திருக்குறளில்—ஏய்ந்தபொருள்
எல்லாம் விளங்க இயம்பினன் சித்திரக்கவி
வல்லான் கல்யாணசுந்த ரன்

4. பொய்யா மொழிக்குப் புதுமுறையி லேதொகுப்புச்
செய்யா மொழிந்ததிருச் செட்டிநகர்—ஐயாநீர்
செய்தநன்றி யார்மறப்பார் சிந்தை செவிநாவிற்
கெய்தும் அமுதாகும் இது.

(நேரிசை யகவற்பா)

தெய்வம் மரபு அளபு ஆய்தம் அடுக்கு
உவமை மூவினம் பண்டமாற்று
முற்றுத் நிறைந்த மோவனையோடு
மா காய்ச் சீர் உதடொட்டா கிரகணம்
ஒற்றிலாதது முற்றுெற்றுக் கேள்வி
ஆதி அந்தம் தோற்றுவாய் பாவி
மயிர் அலகை பிணம் பதம் பர முத்தி
உப்பு பாவை பாம்பு தீ எண்
அறம் பொருள் இன்பம் அதிகாரத்தொகுப்பு
ஈற்றுச் சீர்த்தலைப்பு இவையுள காட்டியும்
மொழிப்புரை யின்றிய பொழிப்புரை யொன்றும்
செவியூடு அமுதெனச் செப்பினன் கற்பார்
கவி சூடாமணிக் கல்விக் களஞ்சியம்
செந்திலார் கந்தனுர் செம்பதங் கைதொழும்
புந்தியார் யாரெனிற் புகலுதுஞ் செட்டியூர்
கல்யாண சுந்தர கவுண்டர்
நல்யாணர் மிகுத்து நலம் பெற வாழ்கவே

இங்ஙனம்
உயர்திரு, சேற்றூர் சமஸ்தான வித்வான்,
அ. கணபதிக்கவிராயர் மாணவன்,
கு. வெங்கடசாமி

உ

# தவத்திரு பேரூர் சாந்தலிங்க அடிகளார் 40-வது ஆண்டு குருபூசை விழா

## 25—2—1956 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு பொன்னுடை போர்த்ததுல்.

---

தலைவர்: குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம், திருப்பெருந்திரு தெய்வசிகாமணி **அருணாசலதேசிக அடிகளார்**

செயலாளர்: சிவக்கவிமணி **C. K. சுப்ரமண்ய முதலியார் B. A.,** பெரியபுராண விரிவுரை ஆசிரியர்

பொன்னுடைபோர்த்துக்கொள்பவர்: தமிழ்ப்பெரியார் சித்திரக்கவி கவிசூடாமணி, செட்டிபாளையம், **ரா. ந. கல்யாணசுந்தரக் கவுண்டர் அவர்கள்**

பாராட்டுவோர்கள்:

1. **திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.,B.L.**
2. கவியரசு **கு. நடேசக் கவுண்டர்,** கோவை.
3. **வி. நா. மருதாசலக் கவுண்டர்,** விழாங்குறிச்சி.
4. **A. C. பழனியப்ப செட்டியார்,** செயலாளர், அருள்நெறி. வார வழிபாட்டுக் கூட்டம், திருப்பூர்.
5. **S. நடராஜ பிள்ளை, B.A.,L.T.,** ஹெட்மாஸ்டர், கோவை
6. **சி. குழந்தையம்மாள்** நிர்மலாகல்லூரி பண்டிதை, கோவை
7. **V. செல்லம்மாள்,** கவுன்சிலர், திருப்பூர்.
8. **வெ. சி. சுப்பைய கவுண்டர்,** அவர்கள் வெள்ளக்கிணர்
9. **R. கிருஷ்ணசாமி,** கணபதி.
10. **திரிகோணமலை, வள்ளலார் சத்சங்கம் (தந்தி)**

**விழாக்குழுவினர்கள்.**

# TELEGRAM.

O KI TRINCOMALEE 25 17 RAMSAMY ADIGAL
SANTHALINGA SWAMIGAL THIRUMADAM
PERUR COIMBATORE

KAVISOODAMANI KALIYANASUNTHARAM
PUVIYINUL SEIPANI YAVUM POLIVUTTU-
VILANGUGA
VALLALAR SATSANGAM

---

திருச்சிற்றம்பலம்.

பல்யாணர் வளமிகுந்த செட்டிபாளைய நகரில் பண்பார் கொங்குத்
தொல்யாணர்க் குலத்தவத்தால் பிறந்தொளிருங் கல்யாண சுந்தரப்பேர்
நல்யாணர்ச் சித்திரவின் கவிப்புலவன் தமிழ்க்கியற்று நலம்பாராட்டி
எல்லாரும் பொன்னாடை போர்த்தவனைச் சிறப்பித்தே இன்பார்வோமே.

காவலவர் நறும்புலமைத் திறனறிந்து பாராட்டாக் காலமீதால்
ஆவலினாற் புலவர்திற மறிந்தவரைப் போற்றல்நமக் கழகதாகும்
நாவலவர் புகழ்கின்ற கல்யாண சுந்தரற்கு நவிலம்பொன்
பாவிலுறு பொன்னாடை சாத்திமிகு பல்லாண்டு பாடுவோமே

சிறியசில புன்புலவர்க் கியல்பாகும் அழுக்காறும் செருக்குமில்லான்
வெறியசெயல் புகுத்திவிடும் அரசியலில் நுழையாதான் மேதைதானென்
அறிவுகுறைந் திறைவனிலை யெண்ணாதார் தமைமதியான் அன்பாலென்றும்
பிறைமதிசூடிய பெருமான் திருவடியே மெய்ப்பொருளாப் பேணுந்-
தொண்டன் (க)

மாந்தர்தமிற் சிறந்தவர் நல்லறநெறி நிற்போரவரின் மாண்புமிக்கோர்
பூந்துணர்நற் கொன்றையந்தார்ப் புண்ணியன்மெய்த் தொண்டரெனப்
புகல்வர்சான்றோர்
வாய்ந்தபுகழ்க் கல்யாண சுந்தரநல் லறநெறி யுமாதேவன்றாள்
ஏந்திமல ரிதயமுங் கொண்டினியகவி புனைவதனா லிவன்மேலோனே (உ)

கு. நடேச கவுண்டர்.
கோவை.

உ

கடவுள் துணை.

25—2—1956. மன்மத ஆண்டு மாசி மீ 13 உ

மகம்.

கலித்துறை.

1. அருளுடைப் பேரூர் குரு சாந்த லிங்கர் அணிமடத்தே
திருவளர் குன்றக் குடிவா ழடிகள் திருமுன்பாய்
பொருளுடைச் சுப்பிர மண்ணியர் பொன்னுடை-
போர்த்துதற்கு
வருபுகழ்க் கல்யாணசுந்தரா! நீ முன்செய் மாதவமே.

2. தவத்தி லுயர்ந்தா ரருட்சாந்த லிங்கரின் தன்மடத்தே
தவத்தெய்வ நூலுட் கருத்தைத் தொகுத்தினி தாயளித்த
தவத்திரு மாலாங் கலியாண சுந்தர சற்குணனே
தவத்தோர் திருமுன் பொன்னுடை போர்த்தல-
தகுமுனக்கே.

3. மிகுத்த தவத்தருட் பேரூர்ப்பட் டிப்பிரான் மெய்யருளால்
மிகுத்த பொன்னுடை தரித்திட மேலோர் விதித்தநன்னுள்
மகத்துவ மிக்க நலத்தைச்செய் மாசி மதியிலுற்ற
மகத்தினில் வாய்த்தது முன்புதாம் செய்திட்ட மாதவமே.

4. தொன்னூல் திருக்குறள் ஆராய்ந்து தந்த தொகுப்பதற்கு
அந்நாள் தருமிக் களித்த பொற் காசுபோ லாயிரத்து
முந்நூற்று முப்பது பொன்கா சுயர்ந்தோர் முடிப்புதவ
எந்நாளும் போற்றும் இறைவன் பாதம் இறைஞ்சுவனே.

வள்ளுவர் வாய்மை வாழ்க.

அடுக்கு மொழி,

**பி. ஆவுடையப்பன் செட்டியார்,**

**காருகுறிச்சி.**



பதிப்பாளர்

வெ. சி. சுப்பைய கவுண்டர்

வெள்ளக்கிணர்.

உ

ஆதிபகவன் துணை.

# தொகுப்புத் திருக்குறளின் சித்திர அகராதி.

---

## தெய்வத் திருக்குறள் – 5

417 குடிசெய்வல்
619 ஐயப்படா
764 தெய்வத்தா
1004 வையத்துள்
1194 தெய்வம்தொழா

---

## மரத் திருக்குறள் – 8

99 மண்ணொடு
127 அரம்போலும்
176 அன்பகத்தில்லா
194 நச்சப்படா
222 இளை தாக
999 பயன்மரம்
1000 மருந்தாகி
1329 உரம்ஒருவற்

---

## அளபெடைத் திருக்குறள் – 81

8 நலத்தகை
23 ஓஓவினிதே
48 பாத்தூண்
71 துன்புறூஉம்
73 பற்றிவிடா
106 முறைப்படச்
108 ஓஓதல்
135 யாமும்உளேம்
143 எச்சம்என்று
168 சென்றவிட
186 சலத்தால்
190 பொருட்பெண்டிர்
191 வேண்டற்க
195 களித்தானை
205 நாநலம்
208 குணம் நலம்
264 நல்லினத்தின்
273 திறனறிந்து
283 கொடுப்பதூஉம்
292 வீழ்வாரின்
296 நீங்கில்
315 நனவினால்
336 கரப்பிலா
357 சிறப்பீனும்
365 இழத்தொறூஉம்
366 கரப்பவர்க்கு
387 குடிதழீஇ
392 கெடாஅ
409 உரன்நசையி
415 பேதைபெருங்
420 பரியது
425 அறத்தாற்றின்
437 கற்றதனாலாய
441 வேலன்று
445 வீழப்படுவார்
459 உறின் நட்டு
471 மடியிலா
488 கடாஅஉரு
496 சாதலின்
555 ஏரின்உழாஅர்
559 உடுப்பதூஉம்
567 செறூஅச்
576 கொடுப்பது
600 இரவுஉள்ள
602 அறத்தினூஉங்கு
611 உற்றநோய்
619 ஐயப்படாஅது

649 புல்லாது
655 பொருள்கெடுத்து
661 அழிவதூஉம்
679 கெடுவல்யான்
707 நசைஇயார்
719 இன்சொலால்
772 கல்லாத
821 கடாஅக்
855 எனைத்தும்
876 இலம்என்று
879 அசைஇயற்கு
880 அறனழீஇ
946 உறாஅதோ
962 உறாஅதவர்க் கண்ட
963 பெறாஅமை
976 ஏவவும்
984 குற்றமே
1031 முகத்தின்
1035 உருளாயம
1042 உறாதவர்
1084 அனிச்சப்பூ
1109 அன்பொரீஇ
1111 ஒண்ணுதற்கு
1115 கழாஅக்கால்
1143 உண்ணாமை
1193 கெடுப்பதூஉங்
1194 தெய்வந்
1233 இன்பம்
1241 தூஉய்மை
1243 அவாவில்லார்க்கு
1272 ஊதியம்
1274 பகைநட்பாம்
1304 அவாவென்ப

---

**ஆய்தத் திருக்குறள் – 38**

24 தொடிநோக்கி
86 சிற்றின்பம்
216 அற்றால்

256 அழுக்கற்று
272 இடுக்கண்
276 செய்க
282 வைத்தான்
410 அற்றார்
432 ஒளிஒருவர்க்கு
460 பேராண்மை
464 மனநலத்தின்
475 மன்னர்க்கு
537 வீழ்நாள்
542 அறிவுடையார்
548 இலமென்று
577 அருள்வெஃகி
630 தவமும்
681 அஃகியகன்ற
696 இறலீனும்
738 ஒப்புரவினால்
750 நடுவின்றி
811 அறனறிந்து
828 அறத்திற்கே
829 பரிந்தோம்பி
832 கற்றிலனாயினும்
830 நல்லாற்றான்
902 அறனெனப்
941 நோக்கினாள்
1067 வேண்டற்க
1142 விழுப்பேற்றின்
1174 கண்ணோட்ட
1178 உழுவார்
1213 மறைப்பேன்
1221 ஓர்ந்து
1243 அவாவில்லார்க்கு
1256 நோதல்
1293 நுனிக்கொம்பர்
1329 உரம்ஒருவற்கு

---

**அடுக்குத் திருக்குறள் – 49**

20 இன்மையின்
24 தொடிநோக்கி

39 முற்றுற்றி
72 கூற்றம்
91 நோய்எல்லாம்
104 இடும்பைக்கு
121 பொருள்
126 மேலிருந்தும்
160 சொல்லுக
187 வினையான்
242 அற்றவர்
247 யாதனின்
338 நோக்கினுள்
385 எள்ளாத
393 அறிவு இன்மை
445 வீழப்படுவார்
451 யாரின்
469 உறுப்பு ஒத்தல்
542 அறிவுடையார்
572 இன்பம்
573 இன்பத்துள்
582 செய்தக்க
600 இரவுஉள்ள
610 அறனறிந்து
675 நோய்நாடி
692 நிழல் நீரும்
693 குன்றின்
723 சொல்லுக
731 கற்றுருள்
740 பிறர்நாண
831 இறந்தார்
859 அஞ்சுவது
889 முகநக நட்பது
911 பொய்யாமை
950 காதல காதல்
973 சார்புணர்ந்து
1062 நலம்வேண்டின்
1090 இன்னாது
1146 உள்ளியது
1148 எண்ணிய
1189 இருநோக்கு
1192 துப்பார்க்கு
1240 வேண்டுங்கால்
1244 மனந்தூய்மை
1257 துறைவன்
1262 காணாதான்
1282 பற்றுக
1296 உள்ளம்
1321 தூங்குக

---

## உவமைத் திருக்குறள் - 127

9 புலத்தலில்
14 சமன்செய்து
33 அறிவற்றம்
67 வாழ்வார்க்கு
78 வாளொடென்
94 விலங்கொடு
99 மண்ணோடி
112 பகையகத்துச்
123 துஞ்சினார்
127 அரம்போலும்
151 என்பிலதனை
153 தெருளாதான்
167 தொட்டனைத்தூ
173 நிலத்தியல்
175 துறந்தார்
176 அன்பகத்தில்லா
177 இனியஉளவாக
178 தீயவை
179 வலியின்
180 தவமறைந்து
181 சினத்தைப்
182 கூத்தாட்ட
183 கல்லாதான்
184 நுண்மாண்
185 அளவளாவில்
186 சலத்தால்
187 வினையான்
188 உணர்வது

189 உடம்பாடு
190 பொருட்பெண்டிர்
191 வேண்டற்க
192 பண்பிலான்
193 அற்றார்க்கு
194 நச்சப்படா
195 களித்தானை
196 நாண் அகத்து
197 இரப்பாரை
198 கண்டது
199 ஊடியவரை
200 துனியும்
212 பொச்சாப்பு
221 கொக்கொக்க
222 இளை தாக
224 எழுதுங்கால்
234 வேலொடு
302 ஆற்றின்
312 களித்தொறும்
313 ஒருதலையான்
317 உணலினும்
328 புறங்குன்றி
332 மடுத்தவாய்
333 உருவுகண்டு
349 மணியில்
350 முகைமொக்குள்
353 அழுக்காறு
354 வெள்ளத்து
356 குடிப்பிறந்தார்
363 துளியின்மை
373 இணரூழ்த்து
404 காக்கை
430 பயனில்சொல்
433 நெய்யால்
461 ஒருமையுள்
481 அகலாது
482 எரியாற்
513 பண் என்னும்
532 அளவறிந்தார்
541 உளரென்னும்
546 சிதைவிட
560 வானோக்கி
561 செப்பின்
562 அரம்பொருத
579 வருமுன்னர்
594 தாளாண்மை
596 ஒலித்தக்கால்
605 எட்பகவு
606 குழலினிது
608 கணைகொடிது
609 அரங்கின்றி
619 ஐயப்படாஅது
622 அங்கணத்து
673 கூற்றத்தை
724 இழுக்கல்
727 நிலத்தில்
729 உரனென்னும்
737 ஊக்கமுடையான்
785 அகழ்வாரை
812 ஊருணி
817 பொருளாட்சி
831 இறந்தார்
832 கற்றிலனாயினும்
847 வினைபகை
848 உட்பகை
852 நவில்தொறும்
856 வாள்போல்
887 குடம்பை
891 உடுக்கை
901 அச்சம்
925 தினைத்துணையாம்
932 முதலிலார்
942 பாலொடு
969 கொலையிற்
982 சுடச்சுடரும்
993 விளக்கற்றம்
999 பயன்மரம்
1000 மருந்தாகி

1014 புறந்தூய்மை
1030 இனம்போன்
1098 நெடும்புனலுள்
1104 உறங்குவது
1115 கழாக்கால்
1124 உய்த்தல்
1151 மையலொருவன்
1158 ஒறுத்தாரை
1169 பகல்வெல்லும்
1178 உழுவார்
1199 படைகொண்டார்
1207 அறிதோறு
1213 மறைப்பேன்
1215 அறுவாய்
1216 அடுத்ததுகாட்டும்
1219 தம்மில்இருந்து
1227 சொல்வணக்கம்
1232 மயிர்நீப்பின்
1280 உப்பமைந்த
1281 அலந்தாரை
1307 மோப்பக்குழையும்

---

**வல்லினத் திருக்குறள் – 5**

398 குற்றம்
731 கற்றுருள்
735 கற்க கசடற
1110 ஆற்றுவார்
1282 பற்றுக

**மெல்லினத் திருக்குறள் - 4**

17 இன்சொல்
20 இன்மையின்
113 என்னைமுன்
859 அஞ்சுவது

**இடையினத் திருக்குறள் – 1**

87 வசையொழிய

**பண்டமாற்றுத்திருக்குறள்-1**

744 சாயலும்

**முற்றுமோனைத் திருக்குறள் – 6**

20 இன்மையின்
685 எண்ணியார்
1192 துப்பார்க்கு
1262 காணுதான்
1265 இதனை இதனுல்
1282 பற்றுக

**மாச்சீர்த் திருக்குறன் – 6**

104 இடும்பைக்கு
666 செயற்கை
831 இறந்தார்
1097 நகையும்
1214 மதியும்
1289 ஒழுக்கம்

**காய்ச்சீர்த் திருக்குறள் – 3**

884 அணியன்ரு
921 பல்குழுவும்
1261 யாதானும்
1262 காணுதான்

**உதடு ஒட்டாத் திருக்குறள் – 1**

663 எய்தற்கு

**கிரகணத் திருக்குறள் – 1**

198 கண்டதுமன்னும்

**ஒற்றில்லாத் திருக்குறள் - 1**

956 காதலவரில

**முற்ருற்றுத் திருக்குறள் – 8**

294 இருந்துள்ளி
435 பொய்மையும்
447 இரப்பன்
617 செய்வினை
650 தன்னைத்தான்
957 கலந்துணர்ந்து

1171 இன்மையுள்
1281 அலந்தாரை

**கேள்வித் திருக்குறள் – 3**

17 இன்சொல்
22 கண் தான்
62 தன்னூன்

**ஆதியந்தத் திருக்குறள் - 1**

1166 பொருள்

**தோற்றுவாய்த் திருக்குறள் – 3**

857 இருமனப் பெண்டிர்
1137 எழுபிறப்பும்
1157 மங்கலமென்ப

**பாவி என்னும் திருக்குறள் – 2**

1246 இன்மைஎன
1291 அழுக்காறு

**மயிர் என்னும் திருக்குறள் – 2**

504 தலையின்
1232 மயிர்நீப்பின்

**அலகைத் திருக்குறள் – 2**

1033 உலகத்தார்
1107 பொருளான்

**பிணம் என்னும் திருக்குறள் – 1**

190 பொருட்பெண்டிர்

**பதமுத்தித் திருக்குறள் – 8**

9 புலத்தலில்
70 செல்விருந்து
330 ஐயத்தின்
378 பெற்றாற்
381 கள்வார்க்கு
933 புகழ்இன்றால்
1904 புத்தேள உலகத்தும்
1287 அடக்கம்

**பரமுத்தித் திருக்குறள் – 3**

967 கற்றீண்டு
1119 யான்எனது
1303 உரனென்னும்

**ழகரத் திருக்குறள் – 2**

149 அழக்கொண்ட
606 குழலினிது

**ளகரத் திருக்குறள் – 1**

185 அளவளா

**யானைத் திருக்குறள் – 7**

187 வினையால்
311 கானமுயலெ
420 பரியது
545 காலாழ்
546 சிதைவிட
821 கடாக்களிற்றின்
875 கைவேல்
1322 குன்றேறி

**யாழ்த் திருக்குறள் – 2**

606 குழலினிது
608 கணைகொடிது

**கலத் திருக்குறள் – 2**

186 சலத்தால்
192 பண்பிலான்

**காவடித் திருக்குறள் – 2**

6 காமமும்நாணு
313 ஒருதலையான்

குன்றித் திருக்குறள் – 2

328 புறங்குன்றி
693 குன்றின் அனே

உப்புத் திருக்குறள் – 4

352 ஊடிப்பெறு
493 நட்பிற்கு
570 துபபுரவில்லார்
1280 உப்பமைந்தற்று

பாவைத் திருக்குறள் – 3

184 நுண்மாண்
196 நாணகத்தி
197 இரப்பாரையி

பாம்புத் திருக்குறள் – 2

198 கண்டதுமன்னும்
189 உடம்பாடு

தீ, என்ற திருக்குறள் – 14

296 நீங்கில்
434 நிணந்தீயில்
481 அகலாது
482 எரியாற்
506 குலம் சுடும்
651 தன் நெஞ்சு
652 சினம் என்னும்
653 கெடுங்காலே
654 மறப்பின்
818 தொடில் சுடும்
847 வினைபகை
1012 தீயவை
1036 தீயளவன்றி
1230 தீயினுற் சுட்ட

எண்ணுத் திருக்குறள்
ஒன்று – 27

146 கேடில்
198 கண்டது
203 பற்றுள்ளம்
207 பகையென்னும்
215 ஒன்றெய்தி
257 ஒன்றுவுலகத்து
313 ஒருதலையான்
347 ஒருமை மகளிரே
348 கரப்பினும்
349 மணியில்
350 முகைமொக்குள்
375 அகரமுதல
417 குடிசெய்வல்
432 ஒளிஒருவர்க்கு
460 பேராண்மை
491 தன் துணை
593 குடியாண்மை
616 ஒற்றுெற்றி
627 நல்லாண்மை
694 நாண்என
863 காமம்என
913 ஒன்றுக நல்
1116 ஒறுத்தார்க்கு
1144 நாளென ஒன்று
1202 நனவென
1288 ஒன்றுனும்
1310 எற்றிற்குரியர்

இரண்டு – 17

236 காமம்விடு
362 எண்ணென்ப
376 இருமை
438 தானந்தவ
472 ஒண்பொருள்
515 ஒற்றும்
539 கண்ணுடையர்
563 ஆள்வினையும்
636 ஊறுராால்
847 வினைபகை
857 இருமனப்
பெண்டிரும்

1189 இருநோக்கு
1203 இருள்சேர்
1220 வீழும் இருவர்
1244 மனந்தூய்மை
1252 அன்புடைமை
1328 இருவேறு

**மூன்று – 10**

76 தூங்காமை
340 கூற்றமோ
825 இல்வாழ்வான்
974 காமம் வெகுளி
1026 ஒற்றொற்று
1065 தூய்மை துணைமை
1103 ஒழுக்கமும்
1222 அன்பறிவு
1223 மிகினும் குறையினும்
1323 அறிவுருவு

**நான்கு – 11**

150 அழுக்காறு
232 அஞ்சாமை
474 கொடையளி
511 பகைபாவம்
536 நெடுநீர்
565 நகையீகை
845 அன்பு அறிவு
952 உயர்வு அகலம்
1022 அறம்பொருள்
1056 மறமமானம்
1188 உற்றவன்

**ஐந்து – 12**

27 வன்கண்
377 சுவையொளி
406 கண்டுகேட்டு
461 ஒருமையுள்
468 பிணியின்மை
470 அடல்வேண்டும்
533 ஐந்தவித்தான்
629 உடைசெல்வம்
670 பொருள்கருவி
840 அன்புநாண்
874 வஞ்சமன
1303 உரனென்னும்

**ஆறு – 1**

467 படைகுடி

**ஏழு – 8**

65 ஒருமைச்
84 ஒருநாள்
269 புகழ்ந்தவை
461 ஒருமையுள்
465 ஒருமைக்கண்
886 எழுமையும் எழு
990 நெருநற்று
1137 எழுபிறப்பும்

**எட்டு – 1**

781 கோளில்பொறியில்

**பத்து – 1**

1270 பல்லார் பகை

**நூறு – 1**

215 ஒன்றெய்தி

**ஆயிரம் – 1**

910 அவிசொரிந்து

**கோடி – 3**

51 வகுத்தான்
415 பேதைபெருங்
418 கரவாது

**பத்துக் கோடி – 1**

416 நகைவகையராகி

| | |
|---|---|
| எழுபது கோடி — 1 | அடுக்கிய கோடி 2 |
| 413 பழுதெண்ணும் | 246 அடுக்கியகோடி |
| பலகோடி — 1 | 283 கொடுப்பதுஉம் |
| 1070 ஒருபொழுதும் | |

சித்திர அகராதி முற்றிற்று.

## இயல்கள்.

### அறம் — 4

அறத்துப்பாலில் அதிகாரம் 38

| | | | |
|---|---|---|---|
| 1 | பாயிரவியல் | 4 — | 40 |
| 2 | இல்லறவியல் | 20 — | 200 |
| 3 | துறவறவியல் | 9 — | 90 |
| 4 | ஞானவியல் | 5 — | 50 |

### பொருள் — 8

பொருட்பாலில் அதிகாரம் 70

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசியல் | 25 — | 250 |
| 2 | படையியல் | 2 — | 20 |
| 3 | குடியியல் | 1 — | 10 |
| 4 | கூழ்பொருள் செயல் | 1 — | 10 |
| 5 | அமைச்சியல் | 10 — | 100 |
| 6 | நட்பு இயல் | 17 — | 170 |
| 7 | அரண் இயல் | 1 — | 10 |
| 1 | ஒழிபியல் | 13 — | 130 |

| | |
|---|---|
| அரசியல் | 25 |
| அங்கவியல் | 32 |
| ஒழிபியல் | 13 |
| | 70 |

### காமம் — 3

காமத்துப்பாலில் அதிகாரம் 25

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்பாற் கூற்றியல் | 6 — | 60 |
| 2 | பெண்பாற் கூற்றியல் | 14 — | 140 |
| 3 | இருவர்பாற் கூற்றியல் | 5 — | 50 |
| 25 | | 133— | 1330 |

திருவள்ளுவ மாலையில்

22-வது

**தொடித்தலை விழுத்தண்டினார்**

*வெண்பா.*

**அறம்நான்கு அறிபொரு ளேழொன்று காமத்**
**திறமூன்று** எனப்பகுதி செய்து — பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

37-வது

**மதுரைப் பெருமருதனார்**

**அறம் முப்பத்தெட்டுப் பொருள் எழுபது இன்பத்**
**திறம் இருபத்தைந்** தாற்றெளிய — முறைமையாய்
வேதவிழுப் பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓத வழுக்கற்ற துலகு.

***இயல்கள் முற்றிற்று.***

---

| ஆசிரியர் பெயர். | நூலின் பெயர். |
|---|---|
| 1. திருவள்ளுவர் | திருக்குறள் |
| 2. தேவர் | முப்பால் நூல் |
| 3. முதற்பாவலர் | பொய்யாமொழி |
| 4. தெய்வப் புலவர் | வாயுறை வாழ்த்து |
| 5. மாதானுபங்கி | உத்திரவேதம் |
| 6. செந்நாப்போதார் | தெய்வநூல் |
| 7. நான்முகனார் | திருவள்ளுவர் |
| 8. பெருநாவலர் | தமிழ் மறை |
| 9. நாயனார் | பொது மறை |

**உரையாசிரியர்கள்.**

1. தருமர்
2. மணக்குடவர்
3. தாமதத்தர்
4. நச்சர்
5. பரிமேலழகியார்
6. பரிதி
7. திருமலையார்
8. மல்லர்
9. கவிப்பெருமாள்
10. காளிங்கர்

## வெண்பா.

**தருமர் மணக்குடவர் தாமதத்தர் நச்சர்**
**பரிமேலழகர் பரிதி — திருமலையர்**
**மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர்** வள்ளுவநூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.

## உரைச்சிறப்பு.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ — நூலில்
பரித்த வுரையெல்லாம் **பரிமே லழகன்**
தெரித்த வுரை யாமோ தெளி.

## மொழி பெயர்ப்பு.

| | | |
|---|---|---|
| 1. | *சுப்பா தீக்ஷதர்* | *வடமொழி* |
| 2. | *க்ஷேமானந்தராகத்* | *ஹிந்தி* |
சிலர்பலர் நோலா தவர் 270 27 10

உலகில் வறியர் பலராகவும் செல்வர் சிலராகவும் உள்ளதற்கு காரணம் தவம் செய்யாதவர் பலர்; தவம் செய்வார் சிலர்

89 **அ**ளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காதலவர் 286 29 6

களவில் விருப்பமுடைய துறவிகள் உயிர்களின் நிலைமையை ஆராய்ந்துணரும் ஆற்றலை இழப்பர்.

90 **அ**ளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர் 289 29 9

களவையே விரும்பி உயிர் முதலியவற்றின் இயல்புகளை ஆராயாதவர் பாவம் பல செய்து கெடுவர்.

91 **நோ**ய்எல்லாம் நோய்செய்தார் மேலாவாம் நோய்செய்
நோய்இன்மை வேண்டு பவர் 320 32 10 [யார்

பிறருக்குத் துன்பம் செய்தவர்கட்கே துன்பம் விளைகின்றன; ஆதலால் துன்பம் இல்லாதிருக்க விரும்புபவர் பிற உயிருக்கு துன்பம் செய்யார்.

92 **உ**யிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர் 330 33 10

நோயுடம்பும் வறுமை வாழ்க்கையும் உடையார் முற்பிறப்பில் உயிர்களை உடம்பினின்றும் நீக்கியவர் என்று அறிஞர் கூறுவர்.

93 **த**லைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் 348 35 8

முற்றுந் துறந்தவர் பேரின்பத்தை அடைந்தவராவர்; துறவாதவர் மயக்கத்தால் துன்ப வலையில் சிக்குண்டவராவார்.

94 **வி**லங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் 410 41 10

விலங்குக்கும் மக்களுக்கும் எவ்வளவு இழிவும் ஏற்றமும் உண்டோ அவ்வளவு ஏற்றமும் இழிவும், கற்றவர்க்கும் கல்லாதவர்களுக்கும் உண்டு,

95 **பி**ழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்து
ஈண்டிய கேள்வி யவர் 417 42 7 [ணர்ந்து

நுணுகிய கல்வியும் நிறைந்த கேள்வியும் உடையார் எந்நிலையிலும் அறிவற்ற சொற்களைச் சொல்லமாட்டார்.

96 **கா**லம் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர் 485 49 5

உலக முழுவதும் கைப்பற்றக் கருதும் அரசர் அதற்கேற்ற காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

97 **பொ**ள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளியவர் 487 49 7

பகைவர் பிழை செய்த போதே அறிவுடைய அரசர் வெளிப்படையாக கோபத்தைக் காட்டமாட்டார்; காலத்தை எதிர்பார்த்து மனத்துள் கோபம் கொண்டிருப்பார்.

98 **கடி**தோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் 562 57 2

தம் செல்வம் நிலைத்து நிற்க விரும்புபவர் குற்றம் செய்தாரைத் தண்டிக்கப் புகும்போது மிகுதியாகக்காட்டி அளவாகச் செய்தல் வேண்டும்.

99 **ம**ண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர் 576 58 6

கண்ணிருந்தும் தாட்சண்யம் இல்லாதவர் மண்ணில் நிற்கும் மரமாவார்,

100 **பெ**யக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் 580 58 10

நாகரிகத்தைப் பெரிதாக விரும்புபவர், பழகியவர் நஞ்சை ஊற்றிவைக்கக் கண்டும் தாட்சண்யத்தால் அதனை உண்டு அவரோடு பொருந்தியிருப்பர்,

101 **ம**டியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டுபவர் 602 61 2

தாம் பிறந்த குடியை உயர்த்த விரும்புபவர் சோம்பலை விலக்கி முயற்சியுடையராய் வாழவேண்டும்.

102 **இ**டிபுரிந்து எள்ளும் சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றுஇ லவர் 607 61 7

சோம்பலால் முயற்சியிலாது வாழ்வார் நண்பரால் இடித்துரைத்து இகழப்படுவார்.

103 **ஊ**ழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர் 620 63 10

தளராத முயற்சி உடையார் பயனை விலக்கவரும் விதியையும் வென்று பயன் காண்பர்.

104 **இ**டும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாதவர் 623 63 3

ஒரு காரியம் செய்யும்போது இடையில் வரும் துன்பத்துக்கு அஞ்சாதவர் அத்துன்பத்துக்குத் துன்பம் விளைப்பவராவர்.

105 **அ**ற்றேமென்று அல்லல் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றாதவர் 626 63 6

செல்வக் காலத்தில் லோபமில்லாதவர் வறுமைக் காலத்தில் துன்பமடையார்.

106 **மு**றைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வார்
திறப்பாடு இலா தவர் 640 64 10

திறமையில்லாதவர் ஒரு காரியத்தை நன்கு எண்ணி அறிந்தும் செய்யும்போது செம்மையாகச் செய்யமாட்டார்.

107 **ப**ல சொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர் 649 65 9

குற்றம் அற்ற சொற்களைச் சொல்லமாட்டாதவர் பல சொற்களை விரும்புவார்.

108 **ஓ**ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர் 653 66 3

முன்னேற வேண்டும் என்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைச் செய்யாது ஒழிக.

109 **அ**வையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர் 711 72 1

சொற்களின் தொகுதியை அறிந்த அறிஞர் சபைக்கு ஏற்றதாய்ச் சொல்லல் வேண்டும்.

110 **இ**டைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர் 712 72 2

சபையின் சமயமறிந்து ஏற்ற நடையில் குற்றமில்லாது தெளிவாகச் சொல்லு.

111 **வ**கையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் 721 73 1

சபையின் கூறு தெரிந்து பேசும்போது அச்சத்தால் பிழைபடப் பேசுதல் ஆகா.

112 **ப**கையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் 723 73 3

பகைவரிடையில் அஞ்சாது சாவவல்லவர் பலர்ஆவார்; அறிஞர் சபையிடையில் அஞ்சாது பேசவல்லவர் சிலர் ஆவார்.

113 **எ**ன்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின்ற வர் 771 78 1

பகைவர்களே, என் தலைவன் முன் போருக்கு நின்று இறந்து நடுகல்லாயினர் பலர்; ஆதலால் நீவிர் பிழைத்தல் வேண்டின் என் தலைவன் முன் போர்க்கு நிற்றலைத் தவிர்க.

114 **இ**ழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர் 779 78 9

தாம் கூறிய சபதம் தப்பாமல் போர்மேற் சென்று சாவக் கூடிய வீரரைப் பழிக்கக்கூடியவர் யாருளர்.

115 **அ**ழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் 807 81 7

அன்பான பழமை நட்பு உடையவர் தாம் வருந்தக் கூடியதை நண்பர் செய்தாலும் அவரிடம் அன்பு நீங்கார்.

116 **இ**கல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல் ஊக்கும் தன்மை யவர் 855 86 5

மாறுபாடு தம் மனதில் தோன்றியபோது விட்டுக் கொடுக்கும் தன்மை உடையாரை யாரும் வெல்லுதல் முடியாது.

117 **மி**கல் மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா வறிவி னவர் 857 86 7

மாறுகொண்ட தீய அறிவினை உடையார் வெற்றி தரும் நீதி நூற் பொருளை உணரமாட்டார்.

118 **யா**ண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப் பட்டவர் 895 90 5

மிக்க வலிமையுடைய அரசனாற் சீறப்பட்டவர் எங்குச் சென்றும் வாழ்தல் முடியாது.

119 **இ**மையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர் 906 91 6

மனைவிக்குப் பயந்து வாழ்பவர் சிறப்புடையாராயினும் பெருமையில்லாதவர்.

120 **ந**ட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர் 908 91 8

மனைவியின் விருப்பப்படி வாழ்பவர் நண்பர் குறையைத் தீர்க்கமாட்டார்; அறமும் செய்யமாட்டார்.

121 **பொ**ருள் பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர் 914 92 4

பொருளையே விரும்பும் பொதுமகளிர் இன்பத்தை அருளை நாடும் அறிவுடையார் விரும்பார்.

122 **பொ**துநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர் 915 92 5

நூலறிவுடைய மேன்மக்கள் பொதுமகளிரது இன்பத்தை விரும்பார்.

123 **து**ஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர் 926 93 6

உறங்கினார் எவ்வாறு செத்தாரோடு ஒப்பாவாரோ அவ்வாறே கள்ளுண்பவர் நஞ்சுண்டவர்க்கு ஒப்பாவார்.

124 **உ**ள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர் 927 93 7

கள்ளை உண்டு அறிவு சோர்பவர் உள்ளூராரால் இகழப் படுவார்.

125 **சீ**ரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர் 962 97 1

தம்க்குப் புகழைச் செய்துகொள்ளும்போதும் தம் குடிப் பிறப்புக்கு ஒவ்வாத இழிவான செயல்களை மானமுடையார் செய்யார்.

126 **மே**லிருந்தும் மேலல்லர் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் 973 98 3

சிறியார் உயர்ந்த ஆசனத்திருந்தாலும் பெரியாராகார்; பெரியார் தாழ்ந்த தரையிலிருந்தாலும் சிறியாராகார்.

127 **அ**ரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வார்
மக்கட்பண்பு இல்லா தவர் 997 100 7

நன்மக்கட்குறிய பண்பில்லாதவர் கூர்மையான அறிவுடையராயினும் மரத்தினை ஒப்பாவார்.

128 **நா**ண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர் 1016 102 6

உலகமே பெறுவதாயினும் விரும்பாது மேன்மக்கள் நாணத்தை தமக்குப் பாதுகாப்பாகக் கொள்ளுவார்.

129 **நா**ணால் உயிரைத் துறப்பர் உயிர்ப் பொருட்டால்
நாண் துறவார் நாணாள் பவர் 1017 102 7

நாணத்தின் சிறப்பினை அறிந்தவர் அதன்பொருட்டு உயிரையும் விடுவர்; உயிரைக் காக்க நாணத்தை விடார்.

130 **உ**ழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் 1033 104 3

பயிர் செய்து உண்டு வாழ்கின்றவரே உரிமை வாழ்வு வாழ்பவர்; அல்லாதவர் பிறரை வணங்கி வாழும் ஈன வாழ்வினராவார்.

131 **ப**லகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் 1034 104 4

பல வேந்தர்தம் குடை நிழலில் உள்ள நில முழுவதனையும் தம்மரசன் ஆட்சியின்கீழ் கொணதற்குரியார் நெல் வளமும் அன்புமுடைய உழவரேயாவார்.

132 **இ**ரவார் இரப்பார்க்கொன்று ஈவார் கரவாது
கை செய்தூண் மாலை யவர் 1035 104 5

தம் கையால் பயிர்செய்து உண்ணும் தன்மை உடையார் பிறரிடம் ஒன்றை யாசியார்; தம்மை யாசிப்பவர்க்கு ஒளிக்காமல் உதவுவார்.

133 **க**ண்ணுள்ளிற் போகார் இமைப்பில் பருவரார்
நுண்ணியர் எங்காத லவர் 1126 113 6

எம் காதலர் கண்ணைவிட்டு நீங்கார்; யாம் யிமைப்பினும் வருந்தார்.

134 **து**ப்பின் எவன்ஆவர் மற்கொல் துயர் வரவு
நட்பினுள் ஆற்று பவர் 1165 117 5

நட்பாயிருந்தே துன்பம் செய்பவர், பகைவரானல் யாது செய்வாரோ.

135 **யா**மும் உளேம்கொல் அவர் நெஞ்சத்து எங்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர் 1204 121 4

காதலர் எமது மனத்தில் எப்போதும் உள்ளனர்; அவர் மனத்தில் யாம் உள்ளோமோ? இல்லேமோ ?

136 **ந**னவினுல் நல்காரை நோவர் கனவினுல்
காதலர்க் காணு தவர் 1219 122 9

தமக்குக் காதலர் இல்லாதமையால் கனவிடைக் கண்டறியாத மகளிர், நம் காதலர் நமக்கு நனவில் வந்து அன்பு செய்யாதது குறித்து குறை கூறுவர்.

137 **ந**னவினுல் நம்நீத்தார் என்பர் கனவினுல்
காணார்கொல் இவ்வூ ரவர் 1220 122 10

இவ்வூர் மகளிர்கள் நம் காதலர் கனவிடை வந்து அருள் செய்தலை அறியாது நனவில் நம்மைப் பிரிந்தார் என்று கொடுமை கூறுவார்.

138 **செ**ற்ருர் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்ருல் உருஅ தவர் 1245 125 5

மனமே, நாம் விரும்பவும் அவர் விரும்பாதவரை பகைவர் என விலக்கும் வலிமை நமக்கு உண்டோ? இல்லை.

139 **இ**டிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர் 447 45 7

குற்றம் கண்டபோது இடித்துப் புத்தி கூறும் பெரியாரைத் துணையாகக் கொண்டவர்களை ஒருவரும் கெடுக்க முடியாது.

## 20. அவள் – 1

140 **ந**ன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் 1111 12 1

அனிச்சப்பூவே, வாழ்க. நீ எல்லாப் பூவினும் மெல்லியை; ஆயினும் எம் காதலி உன்னைக்காட்டிலும் மென்மை உடையாள்.

## 21. அவன் – 3

141 **அ**றனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன் 147 15 7

பிறன் மனைவியை விரும்பாது வாழ்பவன் அற வழியில் வாழ்பவனாவான்.

142 **வி**டுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன் 689 69 9

தனக்கு நேரும் துன்பத்துக்குப் பயந்து தன் அரசனுக்கு இழிவான சொற்களைத் தவறியும் சொல்லாதவனே தூது சொல்லுவதற்கு உரியவன்.

143 **எ**ச்சம்என்று எனஎண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன் 1004 101 4

பிறர்க்கு ஏதும் கொடுத்தல் இல்லாமையால் ஒருவராலும் விரும்பப்படாதவன் தான் இறந்தபோது நிற்கக்கூடியதாக எதைக் கருதுவான்.

## 22. அவா – 2

144 **அ**ஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா 366 37 6

ஒருவனைத் துன்பத்துளாழ்த்துவது ஆசையேயாகும்; ஆதலால் அதற்குப் பயப்படவும்.

145 **ஊட**ல் உணங்க விடுவாரோடு என்னெஞ்சம்
கூடுவேம் என்பது அவா 1310 32 10

ஊடலால் வருந்தும்படி விட்டிருப்பாரை கூட எண்ணும் காரணம் என் அவாவே.

## 23. அவை – 4

146 **கேடி**ல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை 400 40 10

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியே; பொருளல்ல.

147 **கா**ணுங்கால் காணேன் தவறாய காணுக்கால்
காணேன் தவறல் லவை 1285 129 6

கணவனைக் காணும்போது தவறு காணேன்; காணுத போது தவறு அல்லாது வேறு காணேன்.

148 **ம**திநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை 636 64 6

நூலறிவுடன் இயற்கை அறிவும் உடையவனுக்கு ஆகாதது ஒன்றும் இல்லை.

149 **அ**ழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை 659 60 9

பிறர் வருந்துமாறு துன்புறுத்திய செல்வம், தாம் வருந்துமாறு தம்மை விட்டுப் போய்விடும் நற்செயல்கள் முதலில் இழப்பைத் தரினும் முடிவில் நன்மை பயக்கும்.

## 24. அறம் – 4

150 **அ**ழுக்காறு அவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம் 35 4 5

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களும் இல்லாதமைந்ததே உண்மைத் தருமமாகும்.

151 **எ**ன்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம் 77 8 7

எலும்பில்லா உடம்பை வெயில் காய்ந்தாற்போல, அன்பில்லாத உயிரை அறக்கடவுள் காயும்.

152 **மு**கத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினிதே யறம் 93 10 3

விருந்தோம்புவார்க்கு மலர்ந்த முகமும் இன்சொல்லும் இன்றியமையாதன.

153 **தெ**ருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறன் 249 25 9

அருள் இல்லாதவன் அறவழி ஒழுகுதலென்பது, தெளிவில்லாதன் உண்மைப் பொருளைக் கண்டதை யொக்கும்.

## 25. அறிவுடையார் – 2

154 **க**ல்லாதான் ஒப்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார் 404 41 4

கல்லாதவனுதடய அறிவு ஒருகால் மிக நுட்பமுடையதாயிருப்பினும் அறிவுடையவர்கள் மதிக்கமாட்டார்கள்.

155 **ஆ**க்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார் 463 47 3

பின் அடையக்கூடிய இலாபத்தைக் கருதி முன் அடைந்திருந்த முதற்பொருளை இழக்கக்கூடிய காரியம் அறிவுடையோர் செய்யார்.

## 26. அறிவிலார் – 1

156 **உ**லகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் 140 14 10

பல நூல்களைக் கற்றவராயினும், கற்றதை நடைமுறைக்கு ஏற்பக் கொண்டு ஒழுகாதவர் அறிவில்லாதவராவார்.

## 27. அறிந்தார் – 1

157 **தா**மின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் 399 40 9

தாம் அடையும் இன்பம், பிறரும் அடையக்கூடிய சிறப்பு கல்விக்கு இருப்பதால் அறிஞர் அக்கல்வியை மேற்கொள்ளுவார்.

## 28. அறிந்து – 7

158 **ஒ**ழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து 136 14 6

ஒழுக்கம் தவறியவர் துன்பமே அடைவார்.

159 **அ**ழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து 164 17 4

பொருமையினுல் துன்பமேயாம்; அதை அறிந்தவர் பொருமைப்படார்.

160 **சொ**ல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை யறிந்து 645 65 5

தாம் சொல்லக்கூடிய சொல்லை, வெல்லக்கூடிய சொல் வேறு இல்லாமையை எண்ணிப்பார்த்துச் சொல்லவேண்டும்.

161 **தா**ர்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து 767 77 7

மாற்ருன் படையை விலக்கும் வகை தெரிந்து அதனை அடுத்துத் துரத்தவல்லதே படையாம்.

162 **க**ண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து 1127 113 7

காதலர் எம் கண்ணினுள் உள்ளார்; ஆதலால் மை தீட்டேம், அந்நேரம் அவர் மறைதலையறிந்து.

163 **நெ**ஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து 1128 113 7

காதலர் எம் மனத்தகத்துள்ளார்; ஆதலால் அவர் வெந்துவிடுவார் என்று சூடாக உண்பதற்கு அஞ்சுகின்றேம்.

164 **ஊ**டி இருந்தேமாத் தும்மினுர் யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக் கறிந்து 1312 132 2

யாம் கூடியிருந்தபோது காதலர் தும்மினுர்; தும்முங்கால் வாழ்க என்று வாழ்த்துகின்ற முறையினுல் நாம் உரையாடுவோம் எனக்கருதி, தும்மினுர்.

## 29. அறிவு – 10.

165 **எ**ப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு 355 36 5

ஒரு பொருள் எவ்வாறு காணப்பட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தறிவதே மெய்யறிவாம்.

166 **பி**றப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு 358 36 8

பிறப்புக்குக் காரணமாகிய அறியாமை நீங்கிச் சிறப்புடைய உண்மைப் பொருளைக் கண்டுணர்வதே உயர்ந்த அறிவாகும்.

167 தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு 396 40 6

கிணற்றை தோண்டுமளவு நீர் சுரக்கும்; அதுபோல் கற்கக் கற்க மக்கள் மனதில் அறிவு சுரக்கும்.

168 சென்ற விடத்தாற் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு 422 43 2

மனத்தைத் தீமையில் விடாது நன்மையில் செலுத்துவதே அறிவாம்.

169 எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு 423 43 3

யார் எதைச் சொல்லினும் அதன் உண்மையைக் கண்டுணர்வதே அறிவாம்.

170 எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு 424 43 4

தான் சொல்லும் சொல்லைப் பிறர் மனதில் பதியுமாறு சொல்லிப் பிறர் அரிதாகக் கூறினும் அதன் பயனைக் கண்டுணர்வதே அறிவாகும்.

171 உலகம் தழீயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு 425 43 5

உயர்ந்தாரை நண்பராக்கிவைப்பதும் அந்நட்பில் நிலையாய் இருப்பதும் அறிவாகும்.

172 எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு 426 43 6

மேன்மக்கள் எவ்வாறு நடக்கின்றார்களோ அவ்வாறு தாமும் நடப்பது அறிவாகும்.

173 நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு 452 46 2

மழைநீர் தான் சேர்ந்த நிலம்போல நிறம் வேறுபடும்; அதுபோல மக்கள் சார்ந்த கூட்டத்துக்கு ஏற்ப அறிவும் மாறுபடும்.

174 மனத்து ளதுபோலக் காட்டி ஒருவர்க்கு
இனத்துள தாகும் அறிவு 454 46 4

ஒருவனுக்கு விசேட அறிவு உண்டாவதுபோலக் காணப்படினும் அவன் சேர்ந்த இனத்திலிருந்தே உண்டாவதாகும்.

## 30. அற்று – 26

175 **து**றந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று 22 3 2

துறவு பூண்டவர் பெருமையைக் கூறப்புகுவது இறந்தவர்களை எண்ணி அளவிடப் புகுவதைப் போன்றது.

176 **அ**ன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று 78 8 8

மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல் கடும் நிலத்தில் வற்றிய மரம் தளிர்த்தாற் போலாம்.

177 **இ**னிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று 100 10 10

இன்சொல்லை விட்டு வன்சொல் கூறுவது, கனியை விட்டு காயைத் தின்பது போல.

178 **தீ**யவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று 208 21 8

ஒருவன் நிழல் அவன் அடியில் மறைந்து வெளிச்சம் கண்டபோது வெளிப்படுவதுபோல, பாவமும் மறைந்திருந்து உரிய காலத்தில் வெளிப்பட்டு வருத்தும்.

179 **வ**லியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேயந் தற்று 273 28 3

மனவலியில்லாதவன் துறவு வேடம் பூண்டு தீய வழியில் நடப்பது, பசு, புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்வது போலாவாம்.

180 **த**வமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று 274 28 4

தவ வேடத்தில் மறைந்து நின்று தீயவை புரிதல், புதரில் மறைந்து நின்று வேடன் பறவைகளைப் பிடிப்பது போலாகும்.

181 **சி**னத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று 307 31 7

கோபத்தை தன் வலியை உணர்த்தும் குணம் எனக் கொண்டவன், நிலத்தில் அறைந்தவன் கை நிலத்தில் உறுதல் தப்பாதவாறு போலாம்.

182 **கூ**த்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிழிந் தற்று 332 34 2

ஒருவனிடம் செல்வம் சேருதல், கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேருவதையும்; அச்செல்வம் போவது, அக்கூட்டம் போவதையும் ஒக்கும்.

183 **க**ல்லாதான் சொற்கா முறுதல் முலேயிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று 402 41 2

கல்லாதான் சபையில் பேச விரும்புதல், இரண்டு தனங்களும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினுற் போல், நகைப்புக்கிடமாம்.

184 **நு**ண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனேபாவை யற்று 407 41 7

நுணுகிப் பல நூல்களிலும் சிறந்த அறிவு இல்லாதவனுடைய தோற்றமும் அழகும், மண் பதுமையின் தோற்றமும் அழகும் போலாம்.

185 **அ**ளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று 523 53 3

உறவினருடன் மனங்கலந்து வாழாதவன் வாழ்க்கை, கரையில்லாக் குளம் நீர் நிறைந்துள்ளது போலக் கெட்டுவிடும்.

186 **ச**லத்தால் பொருள்செய்துஏ மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ அற்று 660 66 10

வஞ்சனே முதலிய தீய வழிகளில் சேர்த்த பொருள்களேக் கொண்டு பாதுகாப்புச் செய்துகொள்வது, பசுமண் குடத்தில் நீரைப் பெய்து காப்பது போலவாம்.

187 **வி**னேயான் வினேயாக்கிக் கோடல் நனேகவுள்
யானேயால் யானேயாத் தற்று 678 68 8

யானேயால் யானேயைப் பிடிப்பதுபோல, ஒரு காரியத்தால் மற்ற காரியத்தையும் முடித்துக்கொள்ளுக.

188 **உ**ணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர் சொரிந்தற்று 718 72 8

பொருள்களேத் தாமே உணரும் அறிஞர் முன்னிலேயில் கற்றவர் ஒன்றைச் சொல்லுவது, தானே வளரும் பயிர் நின்ற பாத்தியில் நீரை விடுவது போலாம். (அறிவை விரைந்து வளர்ப்பதாகும்)

189 **உ**டம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று 890 89 10

மனப்பொருத்தம் இல்லாருடன் கூடி வாழ்வது, குடிசையில் பாம்போடு வாழ்வதைப் போலாம்.

190 **பொ**ருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ அற்று 913 92 3

பொருளையே விரும்பும் விலைமகளிரது பொய்யான அணைப்பு, இருளில் முன் அறியாத பிணத்தை கூலிக்காரர் தழுவி எடுத்தாற் போலாம்.

191 **வே**ண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று 931 94 1

தான் வெல்லும் வலிமை உடையவனாயினும் சூதாடலை விரும்புதல் தவிர்க; வென்ற பொருள் தூண்டிலை இரையெனக் கருதிய மீன் போலாம்.

192 **ப**ண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந் தற்று 1000 101 10

பண்பில்லாதார் பெற்ற செல்வமானது, நல்ல பசும்பால் பாத்திரத்தின் குற்றத்தால் கெட்டாற் போன்றதாம்.

193 **அ**ற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று 1007 101 7

வறியவர்க்கு உதவி செய்யாதவன் செல்வம் வீணே கழிதல், அழகுடைய நங்கை கணவனின்றிக் கழியும் தன்மையை ஒத்தது.

194 **ந**ச்ச படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று 1008 101 8

பிறர்க்கு ஒன்றும் கொடாமையால் பிறரால் விரும்பப் படாதவன் செல்வம், ஊரின் நடுவிலுள்ள எட்டிமரம் பழுத்தாற் போன்றது.

195 **க**ளித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று 929 93 9

கள்ளுண்ட ஒருவனை காரணம் காட்டித் தெளிவித்தல் நீரில் மறைந்தவனை விளக்குக்கொண்டு தேடுவதை ஒக்கும்.

196 நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று 1020 102 10

மனத்தில் வெட்கம் இல்லாதவர் உயிருடையவராய் இயங்குவது, இயந்திரக் கயிற்ருல் இயங்கும் மரப்பொம்மை மக்களை மயக்கின்ருற் போல.

197 இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று 1058 106 8

வறுமையால் யாசிப்பவர் இல்லையாயின், இவ்வுலகி லுள்ளாரியக்கம் மரப்பதுமைகளின் இயக்கம் போன்றதே யாகும்.

198 கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று 1146 115 6

யான் காதலரைக் கண்டது ஒருநாளே; அதனுல் உண் டாகிய பழிமொழியோ கிரகணம்போல் உலகெலாம் பரவி விட்டது.

199 ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று 1304 131 4

நம்மோடு பிணங்கிய மகளிரை பிணக்குத் தீர்த்துக் கூடாது விடுதல், நீர் பெருது வாடிய கொடியை அடியிலே அறுத்துவிடுவது போலாம்.

200 துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று 1306 131 6

முற்றிய பிணக்காகிய துனி என்பதும் இளம் பிணக் காகிய புலவியும் இல்லையேல் காம இன்பம். நைந்த கனியைப் போலும் பழுக்காத காயைப்போலும் சுவையற்றதாகும்.

## 31. அனைத்து – 1

201 தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்ருர்
அழுதகண் ணீரும் அனைத்து 828 83 8

பகைவர் வணங்கும் கையினுள்ளும், படைக்கலம் மறைந்திருக்கும் அவர் அழுது சொரியும் கண்ணீரும் பகை மையின் மறைவிடமாக் கூடும்.

## 32. அன்று – 9

202 விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று 82 9 2

அமுதமே யாயினும் விருந்ினரை விலக்கி உண்ணல் கூடாது.

203 **ப**ற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று 438 44 8

பொருளை விடவேண்டிய இடத்து விடாது பற்றும் லோபத்தன்மை கொடிய குற்றமாகும்.

204 **அ**றிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற்று அன்று 515 52 6

வழியறிந்து துன்பம் பொருத்து காரியம் செய்கின்றவனையன்றி, அன்புடையான் என்பதற்காக மற்று ஒருவனை அரசன் காரியத்தில் ஈடுபடுத்தலாகாது.

205 **நா**நலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூம் அன்று 641 65 1

பேச்சு வன்மை என்னும் சிறப்பு எல்லாச் சிறப்புகளுக்கும் மேலானது.

206 **ம**னத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினுல் தேறற்பாற் றன்று 825 83 5

மனத்தால் தம்மோடு பொருந்தாதவரை அவர் சொல்லைக்கொண்டு எந்த அளவும் நம்புதல் கூடாது.

207 **ப**கையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று 871 88 1

பகையாகிய குற்றத்தை ஒருவன் விளையாட்டிலும் விரும்பாதிருக்கக் கடவன்.

208 **கு**ணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று 982 99 2

சான்றவர்க்குச் சிறப்புக் குணமே, வேறு உருவச் சிறப்பு சிறப்பாகா.

209 **இ**ரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று 1051 106 1

வறுமையுடையார் யாசித்தலுக்கு உரியாரைக் கண்டால் யாசிப்பாராக. அவர் ஒளிப்பாராயின் பழி அவருடையதே; தம்முடையதன்று.

210 **செ**ற்ருர்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்ருர் அறிவதொன்று அன்று 1255 126 5

தம்மை வெறுத்தவரை நினையாதிருக்கும் பெருந்தன்மை காமநோய் அடைந்தார்க்கு இல்லை.

## 33. ஆகாதது – 1

211 அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக் காகா தது 1291 130 1

மனமே, காதலர் மனம் அவர் வசமாய் இருத்தலை அறிந்தும் நீ என்வசமாகாதது என்னை ?

## 34. ஆங்கு – 1

212 **பொ**ச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு 532 54 2

வறுமை அறிவைக் கெடுக்கும், மறதி புகழைக் கெடுக்கும்.

## 35. ஆள் – 1

213 **ம**டியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள் 617 62 7

சோம்பலாள் மூதேவி யடைவள்; முயற்சியால் திருமகள் அடைவள்.

## 36. ஆறு – 4

214 **வ**கையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு 465 47 5

அரசன் விளைவினை எண்ணாது போர்மேற் செல்லுதல் பகைவரை வளரச்செய்யும் செயலாம்.

215 **ஒ**ன்றெய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு 932 95 2

ஒன்றை முன்பெற்று இன்னும் பெறுவமென்னுங் கருத்தால் நூற்றினை யிழந்து வறிஞராகிய சூதாடுவார்களுக்கு அறனும் இன்பமும் எய்தாது.

216 **அ**ற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கு மாறு 943 95 3

முன் உண்டது அற்றபின் அளவு தெரிந்து உண்ணலே உடம்பை வளர்க்கும் வழியாம்.

217 **இ**ல்லைதவறு அவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு 1321 133 1

காதலரிடம் குற்றம் இல்லையாயினும் அவர் அன்பே ஊடுதலை உண்டாக்குகிறது.

## 37. இடம் – 1

218 **க**ருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம் 1123 113 3

கண்ணின் கருமணியில் இருக்கும் பாவையே, நீ அவ்விடம் விட்டுச்செல்க; நான் விரும்பும் காதலிக்கு இடம் இல்லை ஆதலினால்.

## 38. இடத்து – 6

219 **வ**லியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து 250 25 10

தான் எளியவரை வருத்த முற்படும்போது, வலியார்முன் தான் அஞ்சி நிற்றலை எண்ணித் தவிர்க.

220 **ம**ருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து 968 97 8

தன்மானம் கெட வந்தபோது இறத்தலைவிட உயிரைக் காப்பது மருந்தாகுமோ? (மானம் கெட வாழ்வது இழிவு)

221 **கொ**க்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து 490 50 10

மீனுக்கு காத்திருக்கும் கொக்குப்போல காத்திருந்து காலம் வாய்த்தபோது தப்பாது காரியத்தை கொக்கு மீனைக் கொத்திக்கொள்வதுபோல முடித்துக்கொள்க.

222 **இ**ளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து 879 88 9

முள் மரத்தைச் சிறிதாயிருக்கும்போதே களைதல் வேண்டும்; முற்றியபின் வெட்டுவோர் கையை வருத்தும். (அதுபோல், பகை சிறிதாயிருக்கையிலே களைதல் வேண்டும்.

223 **வா**ழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து 1124 113 4

இந்நங்கை கூடும்போது என் உயிர்க்கு உடம்பும், பிரியும்போது உயிர் உடம்பை விட்டு நீங்குவது போலுமாம்.

224 **எ**ழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோல் கொண்
பழிகாணேன் கண்ட விடத்து 1285 129 5 [கன்

மை எழுதும்போது கோலின் தன்மையைக் காணாத கண்கள் போலக் கணவனைக் கண்டபோது அவரிடம் தவறு காணகவில்லை.

## 39. இடும்பையில் – 1

225 **வே**ண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில 4 1 4

விருப்பு வெறுப்பு அற்ற இறைவன் திருவடிகளைத் துணையாகக் கொண்டவர்க்கு என்றும் துன்பம் இல்லை.

## 40. இடும்பை தரும் – 4

226 **ந**ன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் 138 14 8

நல்லொழுக்கம் நன்மைக்கு வித்து; தீயொழுக்கம் என்றும் துன்பமாம்.

227 **தே**ரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் 508 51 8

ஆராயாது ஒருவனைத் தேர்ந்தெடுத்தல் துன்பத்துக் கிடமாகும்.

228 **தே**ரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் 510 51 10

ஆராயாது ஒருவனைக் கொள்ளலும் கொண்டபின் ஐயப்படுதலும் தீராத் துன்பமாம்.

229 **பெ**ரியாரைப் பேணாது ஒழுகில் பெரியாரால்
பேரா இடும்பை தரும் 892 90 2

வலிமைகளால் பெரியவராயுள்ளவரை அவமதித்தால் தீராத் துன்பங்கள் உண்டாகும்.

## 41. இடை – 1

230 **அ**றத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை 37 4 7

தருமத்தின் பயனை பல்லக்கை சுமப்பவனிடத்திலும், ஊர்ந்து செல்பவனிடத்திலும் அறிந்துகொள்க.

## 42. இயல்பு – 2

231 **ஒ**ழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு 161 17 1

பொறாமை இல்லாததே ஒழுக்கமுறைகளில் ஒன்று ஆம்.

232 அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு 382 39 2

தைரியம், கொடை, அறிவு, உள்ளக்கிளர்ச்சி இந்நான்கும் குறைவின்றி ஒருவனிடம் இருத்தல் வேண்டும்.

## 43. இயல்பிலாதான் - 1

233 **ஏ**தம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்
ஈதல் இயல்பி லாதான் 1006 101 6 [று

தான் அனுபவியாதும், பிறர்க்கு கொடுத்தலும் இல்லாதான் செல்வத்திற்கு ஒரு நோய் போல்பவனுவான்.

## 44. இரவு – 2

234 **வே**லொடு நின்ருன் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு 552 56 2

தண்டிக்கும் உரிமையுடைய அரசன் குடிகளிடம் ஒரு பொருளை யாசிப்பது, வேலந்திய கள்வன் வழிப்போக்கனை நின் பொருளைக் கொடு என யாசிப்பது போலாம்.

235 **பெ**ண்ணிறுற் பெண்மை உடைத்தென்ப கண்ணிறுல்
காமநோய் சொல்லி இரவு 1280 128 10

மகளிர்தம் காம நோயினைத் தம் வாயினுல் தோழியர்க்கும் சொல்லாது, கண்ணிறுல் தம் அடியினை நோக்கி இரக்கும் தன்மை, பெண்மைக்கு பெண்மை போன்ற சிறப்பினை உடையதாம்.

## 45. இரண்டு

236 **கா**மம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானே பொறேன்இவ் விரண்டு 1247 125 7

என் நல்ல மனமே, ஒன்று நீ காமத்தை விடு; அல்லது நாணத்தை விடு; இரண்டையும் நான் தாங்கவல்லேன் அல்லேன்.

## 46. இரா – 2

237 **கொ**டியார் கொடுமையில் தாங்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா 1169 117 9

தலைவருடன் கூடியிருந்த நாளிற் குறுகிய இரவு இப்போது நீண்டிருப்பதானது பிரிந்து சென்ற தலைவரினும் கொடுமையுடையதாகும்.

238 **ஊ**டுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா 1329 133 9

இம்மங்கை இன்னும் எம்முடன் ஊடுவாளாக; அதனை வேண்டி நிற்பதன்பொருட்டு இவ்விரவு விடியாது நீளுமாக.

## 47. இருள் – 1

239 **ந**கல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் 999 100 8

பண்பிலாருடன் கலந்து மகிழ முடியாதவர்க்கு பகலும் இரவைப்போலாம்.

## 48. இல – 2

240 **அ**றத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில 39 4 9

தரும வழியில் அடையக்கூடிய இன்பமே இன்பம். மற்றவை இன்பமுமாகா; புகழுமாகா.

241 **க**ண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்
என்ன பயனு மில 1100 110 10 [கள்

காதலர் இருவர் கண்களும் பார்வையால் ஒப்புக் குறிப்பை அறிவிக்குமாயின் வாய்ப்பேச்சு அவசியமில்லை.

## 49. இலர் – 5

242 **அ**ற்றவர் என்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர் 365 37 5

ஆசையற்றவரே உண்மையாகப் பற்று விட்டவராவார்; அல்லாதவர் முழுமையாகப் பற்று விட்டவராகார்.

243 **அ**றிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் 430 43 10

அறிவுடையார்கள் ஒன்றும் இலராயினும் எல்லாம் உடையவராவார். அறிவிலார் எல்லாம் உடையவராயினும் ஒன்றும் இலாதாரே.

244 **ந**ன்றறிவாரில் கயவர் திருவுடையார்
நெஞ்சத்து அவலம் இலர் 1072 108 72

கீழ்மக்கள் தம் மனத்தில் எதுபற்றியும் கவலை கொள்ளாத காரணத்தால் நெறியறிந்த மேன்மக்களைக் காட்டிலும் சிறப்புடையராவார்.

245 உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர் 778 78 8

போரில் உயிருக்கு அஞ்சாத வீரர் தம் அரசன் தடுத்தாலும் வீரம் குன்ருர்.

246 அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் 954 96 4

உயர்குடிப் பிறந்தவர் பலகோடி பொருள் பெறுவதாயினும் ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யார்.

## 50. இலன் – 3

247 யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் 341 35 1

ஒருவன் எவ்வெப்பொருள் மீது பற்றுவிட்டானே அவ்வப்பொருள்களால் வரும் துன்பத்திருந்தும் விடுபட்டவனுவான்.

248 இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பப் படுதல் இலன் 628 63 8

இன்பத்தை விரும்பாது துன்பம் இயல்பு என்பவன் எப்போதும் துன்பமடையான்.

249 இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் 629 63 9

இன்பத்தை விரும்பாதவன் துன்பத்தால் வருந்தான்.

## 51. இலேன் – 1

250 மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன் 1226 123 6

எம் காதலர் பிரிந்திருந்த காலத்து மாலைப்பொழுது துன்பம் செய்தலை ஒருநாளும் அறிந்திலேன்.

## 52. இலை – 44

251 பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் 44 5 4

ஒருவன் இல்வாழ்க்கையில் அன்பும் தருமமும் அமைந்திருக்குமாயில் அவ்வில்வாழ்க்கை குணமும் பயனுமுடையதாகும்.

252 **ம**னைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில் 52 6 2

நற்குண நற்செய்கைகள் ஒருவன் மனைவியிடத்து இல்லையாயின் அத்தகைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதாயினும் பயனில்லை.

253 **அ**கனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்பு வானில் 84 9 4

மகிழ்ச்சியுடன் விருந்தினரைப் போற்றுகின்றவன் வீட்டில் திருமகள் விரும்பி வாழ்வாள்.

254 **பி**றன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல் 141 15 1

பிறன் மனைவியை விரும்புவது அறநூல் பொருள்நூல் விதிகளுக்கு மாறுனது.

255 **அ**றன்கடை நின்றருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல் 142 15 2

பிறன் மனைவியை விரும்புவார் அறந் தவறியவர்களுக்குள்ளே மிகவும் கடைப்பட்டவர்.

256 **அ**ழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல் 170 17 10

பொருமையால் செல்வமும், ஒழுக்கத்தால் வறுமையும் அடைந்தவர் உலகத்தில்லை.

257 **ஒ**ன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில் 233 24 3

இவ்வுலகில் புகழ் ஒன்றே நிலைத்து நிற்கக்கூடியதாகும்.

258 **தி**னற்பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில் 256 26 6

விலைக்கு வாங்கி உண்டாலும் கொலைக்குற்றம் ஊன் உண்பவரைச் சாரும்.

259 **நெ**ஞ்சில் துறவார் துறந்தார்ப்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் 276 28 6

மனத்தால் பற்றை விடாது வேடத்தால் துறவிகளைப் போல் பிறரை ஏமாற்றித் திரிபவர் மிகக்கொடியவராவார்.

260 **அ**ருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்பும் பார்ப்பார்கண் இல் 285 29 5

பிறர் பொருளை வஞ்சனையால் கொள்ள சமயம் பார்ப்பார் அருளை விரும்புவராக இருத்தல் முடியாது.

261 **க**ளவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல் 287 29 7

உயிர் முதலியவற்றின் இயல்புகளை ஆராய்ந்து காணும் பெருமையுடையவர்களிடம், களவுணர்ச்சி என்னும் மயக்கம் இருக்கமுடியாது.

262 **வே**ண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அ∴தொப்ப தில் 363 37 3

ஒன்றையும் விரும்பாமை என்னும் செல்வம்போற் சிறந்த செல்வம் எங்கும் இல்லை,

263 **த**க்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல் 446 45 6

பெரியார் துணையுடன் தானும் ஆராய்ந்து நடப்பவனை பகைவர் ஒன்றும் செய்ய முடியாது.

264 **ந**ல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல் 460 46 10

ஒருவனுக்கு நல்லவர் கூட்டுறவைக்காட்டிலும் சிறந்த துணையில்லை. கெட்டவர் கூட்டுறவைக் காட்டிலும் கொடிய பகையும் இல்லை.

265 **தெ**ரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல் 462 47 2

ஆலோசனைக் கூட்டாத்தாருடன் ஆராய்ந்து தாமும் எண்ணிச் செய்வார்க்கு ஆகாத காரியம் ஒன்றும் இல்லை.

266 **ஒ**ல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில் 472 48 2

தம்மால் முடியும் செயலையும் வலிமையையும் அறிந்து மனமொழி மெய்களை அச்செயலில் செலுத்தி முயல்வார்க்குத் திண்ணமாக நன்மை உண்டாம்.

267 **பெ**ருங் கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத்து இல் 526 53 6

ஒருவன் மிகுதியாகக் கொடுத்தலும் கோபங்கொள்ளாதவனாக இருத்தலும் உடையவன் மிக்க சுற்றமுடையவனாவான்.

268 **இ**ழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்ப தில் 536 54 6

எக்காலத்தும் மறவாமையானது சிறந்த பேருகும்.

269 **பு**கழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் 538 54 8

அறிஞரால் புகழப்பட்டதை மறவாது செய்தல் வேண்டும். மறந்தால் எழு பிறப்புக்கும் நன்மை இல்லையாம்.

270 **க**ண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல் 577 58 7

கண்ணுடைவர் தார்ட்சணியம் உடையவர். அது இல்லாதவர் கண்ணில்லாதவராம்.

271 **ஒ**ற்றினன் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில் 583 59 3

ஒற்றரால் யாவர்மாட்டும் நிகழும் நிகழ்ச்சிகளை அறிந்து அவற்றின் பயனை ஆராயாத அரசன் வெற்றி பெற முடியாது.

272 **இ**டுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் 621 63 1

ஒருவன் துன்பம் வரும்போது கலங்காது மகிழ்தல் வேண்டும். அதன் மகிச்சியே அதனை வெல்லும் கருவியாம்.

273 **தி**றனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல் 644 65 4

தம் தகுதியும் கேட்பார் தகுதியும் உணர்ந்து ஏற்பப் பேசுவதே அறமும் பொருளும் தரக்கூடியதாகும்.

274 அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல் 713 72 3

சபையின் இயல்பு தெரியாமல் பேசப் புகுபவர் சொல்லு வகையறியார். அதோடு அறிஞரால் ஒன்றும் தெரியாதவர் என்று இகழவும் படுவார்.

275 **ஓ**திஉணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப்
பேதையில் பேதையார் இல் 834 84 4

நூல்களைக் கற்றும் அதன் பயனை உணர்ந்தும் மற்றவர்க்கு எடுத்து உரைத்தும் தான் முறைப்படி அடங்கி நடவாத அறிவிலியைப்போல வேறு அறிவிலி இல்லை.

276 **செ**ய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனில் கூரியது இல் 759 76 9

தமக்கு வேண்டிய பொருளை ஈட்டுக. பகைவர் தருக்கை அழிக்கும் கூறிய ஆயும் அப்பொருளை அன்றி வேறு இல்லை.

277 **நி**லைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல் 770 77 10

நிலையான வீரர் பலர் உடையதாயினும் தலைவரை இல்லாத படை போரில் வெல்லாது.

278 **பெ**ரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல் 839 84 9

பிரிய நேர்ந்தபோது துன்பமில்லாததால் அறிவிலியின் நட்பு மிகச் சிறந்தது.

279 அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல் 909 91 9

மனைவியின் ஏவல்வழி வாழ்பவரிடத்து அறத்தைச் செய்தலும் அதற்கு ஆதாரமான பொருளைச் செய்தலும் இன்பச் செயலும் இல்லை.

280 **எ**ண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல் 910 91 10

காரியத்தை ஆராயும் மனமும் அதனால் விளையும் செல்வமும் உடையவனுக்கு மனைவியின் வழிப்படும் அறியாமை உண்டாகாது.

281 **சி**றுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில் 934 94 4

துன்பங்கள் விளைத்து பெருமையைக் கெடுக்கும் சூது போல வறுமை தருவது வேறு இல்லை.

282 **வை**த்தான் வாய்சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல் 1001 101 1

மிக்க பொருளை உடையவன் அதனை அனுபவியாவிட்டால் அப்பொருளிடத்து அவனுக்கு உரிமை இல்லாத காரணத்தால் அவன் செத்தவனே.

283 **கொ**டுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினு மில் 1005 101 5

பிறர்க்குக் கொடுப்பதும் தாம் அனுபவிப்பதுமாகிய செய்கை இல்லார்க்கு பல கோடி பொருள் உண்டாயினும் அதனால் பயன் இல்லை.

284 **க**ருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடையது இல் 1021 103 1

தன் குடியை உயர்த்தும்பொருட்டு மேற்கொண்ட காரியத்தை முடிக்காமல் விடேன் என்று கொள்ளும் உறுதியைப் போல சிறந்தது வேறு இல்லை.

285 **இ**ன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையுள் வன்பாட்டது இல் 1063 107 3

வறுமைத் துன்பத்தை முயற்சியால் போக்காமல் யாசித்துப் போக்கக் கருதும் முருட்டுத்தன்மை போல வேறு முருட்டுத்தன்மை இல்லை.

286 **தெ**ண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்து
உண்ணலின் ஊங்குஇனியது இல் 1065 107 5

தன் முயற்சியால் கிடைத்த நீர் போன்ற கஞ்சியேயானாலும் அதனை உண்பதற்கு மேல் இனியது வேறு இல்லை.

287 **ஆ**விற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில் 1066 107 6

பசுவைக் காப்பாற்ற நீரினை ஒருவரிடம் இரத்தலும் இழிவேயாகும்.

288 **ம**க்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல் 1071 108 1

கீழ்மக்கள் வடிவத்தால் மக்களை ஒப்பானாலும் மக்களை ஒத்தவராகார்.

289 **கட**லன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணில் பெருந்தக்கது இல் 1137 114 7

மிக்க காம நோயை அனுபவித்தும் மடல் ஏறுதல் இன்றிப் பொறுத்திருக்கும் பெண் பிறவியைப் போலப் பெருமையுடைய பிறப்பு வேறு இல்லை.

290 **கா**மக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல் 1164 117 4

காமக்கடல் ஒன்றே எனக்கு வாய்த்துள்ளது. அதனைக் கடத்தற்கான தெப்பம் எனக்கு வாய்க்கவில்லை.

291 **ப**சந்தாள் இவளென்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல் 1188 119 8

இவள் பொருக்கமுடியாமல் பசப்புக்கொண்டாள் என்று என்னைக் குறை கூறுவார் அல்லாமல் பிரிந்த அவரைக் கூறுவார் ஒருவரும் இல்லை,

292 வீழ்வாரின் இன்சொல் பெறுஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணர் இல் 1198 120 8

தம் காதலரிடமிருந்து இன்சொல் பெறுது உயிர் வாழும் மகளிர் மிகவும் முருடராயிருத்தல் வேண்டும்.

293 எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில் 1202 121 2

காதலரைப் பிரிவில் நினைப்பவர்க்கு ஏதும் துன்பம் இல்லை. அதனால் காமம் எந்நிலையிலும் இனிதேயாம்.

294 இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல் 1243 125 3

மனமே, ஈண்டு வருந்துவதால் யாது பயன்? இதனால் இங்கு வரல் வேண்டுமென்னும் இரக்கம் தலைவர்க்கு உண்டாகாது.

## 53. இல்லாகியார் – 1

295 கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார் 935 94 5

செல்வம் உடையவராயிருந்து பின் இல்லாதவராயினவர், சூதாட்டத்தை விரும்பி அதனை விடாது மேற்கொண்டவர்.

## 54. இவள் – 1

296 நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்றும்
தீயாண்டுப் பெற்றாள் இவள், 1104 111 4

விலகிற் சுடுவதும் நெருங்கிற் குளிர்வதும் ஆகிய தீயை இந்நங்கை, எங்கிருந்து பெற்றாள்?

## 55. இவ்வூர் – 4

297 இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர் 1129 113 9

என் கண்கள் இமைத்தால் காதலர் மறைந்துவிடுவார் என்று இமைத்தலும் செய்யேன்; அதனை உணராது என்னை உறங்கா வகை செய்து பிரிந்தார் என்று இவ்வூர் பழி கூறுகின்றது.

298 உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலார் என்றும்இவ் வூர் 1130 113 10

காதலர் எந்நாளும் என் மனத்தகத்து மகிழ்ந்து தங்கியுள்ளார்; அதனை அறியாது அவர் என்னைப் பிரிந்துறைகின்றார் என்று ஊரார் பழி கூறுகின்றனர்.

299 **ம**லர்அன்ன கண்ணுள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் வூர் 1142. 115 2

மலர்க்கண்ணளை யான் அடையமுடியாத அருமை தெரியாது அலர்கூறி இவ்வூர் எனக்கு உதவி செய்தது.

300 **தா**ம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர் 1150 115 10

உடன்போக்குக்குத் துணை செய்வது கருதி முன்பே யாம் விரும்பும் அலர் மொழியை இவ் வூர் கூறி உதவிற்று; இனி காதலரும் அவ்வுடன் போக்கை எளிதில் ஒப்புவர்.

## 56. இழுக்கு – 3

301 **எ**ண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு 467 47 7

ஒரு காரியத்தைத் தொடங்குமுன் தீர எண்ணித் தொடங்குக; தொடங்கிய பின் எண்ணுவது குற்றமாகும்.

302 **ஆ**ற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு 716 72 6

அறிஞர் சபையில் ஒருவன் பேச்சு தவறுதல், வீட்டு நெறி செல்லும் ஒருவன் அதிலிருந்து தவறியதோடொக்கும்.

303 **கெ**டல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு 893 90 3

கொல்லவல்ல அரசரிடம் தவறு செய்பவன் கெடுபவனுவான்.

## 57. இழந்து – 1

304 **க**வ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து 1144 115 4

இவ்வூரவர் கூறும் அலர்மொழியால் என் காமம் வளர்வதாயிற்று; அவ்வலர் இல்லையேல் காமம் சுருங்கிவிடும்.

## 58. இறைக்கு – 2

305 **இ**வறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு 432 44 2

உலோபமும், முறைகேடான மானமும் அளவு கடந்த மகிழ்ச்சியும் குற்றமாம்.

306 **த**ம்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு 436 44 6

தன் குற்றத்தை முன்னர் விலக்கிப் பின் பிறர் குற்றம் காண்பவனே சிறந்தவனுவான்.

## 59. இனிது – 11

307 **த**ம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது 68 7 8

பிள்ளைகள் அறிவுடையராய் இருப்பது பெற்றோர்க்கே யன்றி மற்றையவர்க்கும் இன்பம் தருவதாகும்.

308 **அ**றங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது 181 19 1

ஒருவன் வேறு எவ்வகைக் குற்றமுடையவனாயினும் புறங்கூறாதவன் என்ற பெயரெடுத்தல் சிறப்புடையதாகும்.

309 **ப**ருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது 811 82 1

அன்பு மிகுதியால் பருகுவார் போன்ற நிலை உடைய ராயினும் கெட்ட குணமுடையார் நட்பு ஒழியத்தக்கதாகும்.

310 **வ**ழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது 865 87 5

நீதி நூல்களைக் கல்லாமல், அதன் வழி நில்லாமல், பழிக்கு அஞ்சாமல், நற்குணம் இல்லாமல் உள்ளவன் பகை இனிய பகையாகும் (எளிதில் வெல்லலாம்).

311 **கா**னமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது 772 78 2

முயலை எய்து கொன்ற அம்பைத் தாங்குவதைக் காட்டி லும் யானையை எறிந்து தப்பிய வேலைத் தாங்குவதே வீர னுக்குச் சிறப்புத் தருவதாகும்.

312 **க**ளித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது 1145 115 5

களிப்படையுந்தோறும் கள்ளுண்டல் இனிமை தருவது போல அலர் உண்டாகுந்தோறும் எனக்குக் காமம் இனிதா கின்றது.

313 **ஒ**ருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலையா னும் இனிது 1196 120 6

காமம் ஒருபாலாரிடத்து மாத்திரம் அமைந்திருக்குமா யின் துன்பம் தருவதாம். காவடி போல ஈரிடத்தும் ஒப்ப அமையின் இன்பம் தருவதாம்.

314 **உ**ள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காமம் இனிது 1201 121 1

முன்னுள் கூடிப் பெற்ற இன்பத்தை எண்ணமிட்டாலும் அது பெருமகிழ்ச்சியைத் தருதலால் கள்ளினும் காம இன்பம் சிறப்புடையதாகும் (தலைவன் கூற்று).

315 **ந**னவினுற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது 1215 122 5

முன் காதலரை நனவிற் கண்டு கூடியனுபவித்த இன்பம் அப்பொழுது இனித்தது; இன்று கனவிடை யனுபவித்த இன்பமும் அப்பொழுது இனிதாயிற்று; ஆதலால் இரண்டும் எனக்கு ஒத்தன.

316 **நீ**ரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது 1309 131 9

தண்ணீர் நிழலிடத்துள்ளதாயின் இனிதாகும்; அது போலப் புலவியும் அன்புடையாரிடத்து இன்பம் தருவதாகும்.

317 **உ**ணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது 1326 136 6

உயிர்கட்கு இனி உண்பதைக்காட்டிலும் முன் உண்ட உணவு அறுவது இன்பத்தைத் தரும். அதுபோலக் காமத்திற்குப் புணர்ச்சியைக் காட்டிலும் ஊடல் இன்பந் தருவதாகும்.

## 60. இன்று – 4

318 **வ**ருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று 83 9 3

ஒவ்வொரு நாளும் விருந்தினரைப் போற்றுகின்றவன் வாழ்க்கை என்றும் மங்காது.

319 **ம**னையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று 904 91 4

தம் மனைவிக்குப் பயந்து வாழ்கின்றவன் செய்யும் காரியம் நல்லவர்களால் சிறப்புடையதாகக் கொள்ளப்படமாட்டாது.

320 **வ**ழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று 955 96 5

தம் செல்வ நிலை சுருங்கியபோதும் தொன்றுதொட்ட உயர்குடியிற் பிறந்தவர் தம் கடமையில் தவறுர்.

321 உண்டார்கண் அல்லது அடுநறுக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று 1090 109 10

கள் உண்டவர்க்கு மாத்திரமே மகிழ்ச்சியைக் கொடுக்கும்; காமமோ கண்டவர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

### 61. ஈண்டு – 1

322 சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு 18 2 8

மழை இல்லாவிட்டால் கடவுளர்க்கும் திருவிழா, பூசை முதலியன நடைபெறா.

### 62. ஈன்பது

323 அழுக்கா றுடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது 165 17 5

பொறாமை உடையவரை அப்பொறாமையே பகைவர் போன்று கெடுத்துவிடும்.

### 63. உடம்பு – 2

324 அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு 80 8 10

அன்பு இல்லாதவரது உடம்பு உடம்பன்று; எலும்பை தோலால் போர்த்திய பிண்டமாகும்.

325 இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு 1029 103 9

தான் பிறந்த குடும்பத்தைத் துன்பமுறாமல் காக்க முயல்பவன் உடம்பு அம்முயற்சியால் உண்டாகும் துன்பத்திற்கே நிலைக்களம் போலும். (குடியை உயர்த்துபவன் இன்பம் கருதலாகாது.)

### 64. உடையார் – 1

326 ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார் 593 60 3

நிலைத்த ஊக்கத்தைக் கைப்பொருளாக உடையவர் செல்வம் இழந்தாராயினும் அதுகுறித்து வருந்தார்.

### 65. உடைத்து – 16

327 ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து 48 5 8

நல்வழியை மேற்கொண்டு தருமந் தவறாமல் நடத்தப்படும் இல்வாழ்க்கை தவம் செய்பவர் செயலைக்காட்டிலும் சிறந்தது.

328 **பு**றங்குன்றிக் கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து 277 28 7

குன்றி மணியைப்போல வேடத்தாற் சிறப்புடையவ ராயினும் அதன் மூக்குப்போல மனம் இருண்டிருக்கும் துறவிகள் பலர்.

329 **வ**றியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து 221 23 1

ஏழைகளுக்குக் கொடுப்பதே உண்மையான கொடையாகும். அல்லாதார்க்குக் கொடுப்பது கைமாற்றுப்போலாம்.

330 **ஐ**யத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து 353 36 3

சந்தேகமற உண்மைப் பொருளை உணர்ந்தவர்க்கு வீட்டுலகம் மிக நெருங்கியதாம்.

331 **அ**ருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேய்கண் டன்ன துடைத்து 565 57 5

தன்னைக் காண வருபவரிடம் கடுத்த முகத்துடன் பேசுபவனுடைய செல்வம் பேய் பெற்ற செல்வம் போலாம்.

332 **ம**டுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து 624 63 4

தடை நேர்ந்தவிடத்தும் முயன்று வண்டியை இழுக்கும் எருது போலக் கலங்காது காரியத்தை நடத்துபவன் துன்பமே தான் துன்பப்படும்.

333 **உ**ருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்
அச்சாணி அன்னார் உடைத்து 667 67 7 [தேர்க்கு

ஒருவர் வ்டிவத்தைக் கண்டு இகழ்தல் கூடாது. பெரிய தேருக்கு அச்சாணி சிறியது போலவாம்.

334 **பெண்**ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணு
பெண்ணே பெருமை உடைத்து 907 91 7 [டைப்

தன் மனைவியின் ஏவற்படி வாழும் ஆணைக்காட்டிலும் வெட்கமுடைய பெண்ணே சிறந்ததாம்

335 **சீ**ருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வரங்கூர்ந் தனையது உடைத்து 1010 101 10

பயன்படும் செல்வமுடையார் சிறிது வறுமையடைதல் மழை சிறிது காலம் பெய்யாது உலகிற்கு துன்பம் தருவது போலாம்.

336 **கர**ப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து 1053 106 3

மறைக்காத மனத்தை உடைய மானத்தின் அருமை யறிந்தவர் முன்னே நின்று யாசித்தலும் வறியவர்க்கு ஓர் அழகாகும்.

337 **இ**கழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து 1057 106 7

தம்மை அவமதித்து இழித்துப் பேசாமல் கொடுப்பவரைக் கண்டால் யாசிப்பவர் உள்ளம் மிக மகிழும் தன்மை உடையது.

338 **நோ**க்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து 1082 109 2

இவ்வழகி என் பார்வைக்கு எதிராகக் குறிப்பாகப் பார்த்தல் வருத்துகின்ற தெய்வம் படையையும் கொண்டாற் போலாம்.

339 **செ**றிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன் றுடைத்து 1275 128 5

இம்மங்கை என் பிரிவு குறித்து மனத்தில் எண்ணி மறைத்துச் சென்ற குறிப்பு என் துயரைப் போக்கும் மருந்தாயிற்று.

340 **கூ**ற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து 1085 109 5

எமனோ, கண்ணோ, மானோ அறியேன் இந்நங்கையின் பார்வை.

341 **பெ**ரிதாற்றி பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்புஇன்மை சூழ்வது உடைத்து 1276 128 6

காதலர் வந்து அன்புடன் கலக்கின்ற கலவி, பிரிந்து செல்லும் குறிப்புடையதாதலின் என் ஆற்றுமையை விளைவிக்கு தன்மையதாயிற்று.

342 **த**வறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து 1325 133 5

குற்றமற்றவராயினும் குற்றம் உடையவர்போலத் தம் காதலுக்குரிய மகளிரால் ஊடப்பட்டு அவர் தோளைக்கூட பெருது வாடும் நிலையும் ஆடவர்க்கு ஓர் இன்பமாம்.

### 66. உணல் – 1

343 இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல் 229 23 9

தம் பொருளைத் தாமே தனியாய் உண்ணுவது பிச்சை எடுப்பதைவிடக் கேவலமாம்.

### 67. உணின் – 1

344 மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் 942 95 2

முன் உண்ட உணவு அற்றதை அறிந்து பின் உண்ணில் அவன் உடம்பிற்கு மருந்து வேண்டாம்.

### 68. உண்டு – 7

345 உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89 9 9

விருந்தினரைப் போற்றுதவர் செல்வம் உடையவரானுலும் வறியவரே யாவார்.

346 அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு 757 76 7

அன்பினுல் பெறப்படும் அருள் என்னும் குழந்தை பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் வளர்க்கப்படும்.

347 ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு 974 98 4

ஒருமனப்பட்ட மகளிர் கற்பைக் காத்துக்கொள்ளல் போல ஒழுகி நின்று தவருது தன்னைக் காப்பவனிடத்திலேயே பெருமை உளதாகும்.

348 கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்று உண்டு 1271 128 1

நீ மறைத்தாலும் உன் கண்கள் அறிவிக்கும் செய்தி ஒன்றுண்டு; அதனை நீயே சொல்லுக.

349 மணியில் திகழ்தரும் நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதுஒன்று உண்டு 1273 128 3

மணி மாலையில் உள்ள நூல் புறத்தில் தெரிவதுபோல இம்மங்கையின் அழகுக்குள்ளிருந்து தெரியும் குறிப்பு ஒன்று உள்ளது.

350 **மு**கைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு 1274 128 4

அரும்பின் மலர்ச்சியில் தோன்றும் மணம்போல இந் நங்கையின் புன்முறுவல் தெரிவிக்கும் குறிப்பு ஒன்று உண்டு.

351 **உ**ள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு 1281 129 1

நினைத்த அளவில் களிப்பும் கண்ட அளவில் மகிழ்ச்சியும் கள்ளுண்டாருக்கு இல்லை; காமம் உடையாருக்கு உண்டு.

## 69. உப்பு – 1

352 **ஊ**டிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு 1328 133 8

காதலின் நெற்றி வேர்க்குமாறு இவளுடன் கூடி இப்போது யாம் பெற்ற இன்பம் போன்று இன்னும் ஒருக்கால் இவள் ஊடி யாம் பெறக்கூடுமோ ?

## 70. உயர்வு – 3

353 **அ**ழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு 135 14 5

பொறாமை உடையவனிடம் ஆக்கம் இல்லை. ஒழுக்கமில்லாதவனிடம் உயர்வு இல்லை.

354 **வெ**ள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு 595 60 5

நீர்ப்பூக்களின் தாளின் நீளங்கள் நீரின் அளவாகும்; அதுபோல மக்களின் உயர்வு ஊக்கத்தின் அளவாகும்.

355 **பெ**ருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு 963 97 3

செல்வம் உண்டாயபோது பணிவும், வறுமை வந்தபோது பணியாமையும் வேண்டும்.

## 71. உயர்ந்து – 1

356 குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து 957 96 7

உயர்ந்தவர்களிடத்துக் குற்றம் சிறிதாயினும் சந்திரன் மறுவினைப்போல விளங்கித் தோன்றும்.

## 72. உயிர்க்கு – 8

357 **சி**றப்பீனும் செல்வமும்ஈனும் அறத்தினூ உங்கு
ஆக்க மெவனோ உயிர்க்கு 31 4 1

அறமானது வீடு பேற்றையும் துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும்; ஆதலால் உயிர்கட்கு அறத்தின் மிக்க பொருள் வேறு இல்லை.

358 **ஈ**தல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு 231 24 1

கொடுத்துப் புகழ்பெற வாழ்வதைக்காட்டிலும் சிறந்த வாழ்க்கை வேறு இல்லை.

359 **கா**க்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு 122 13 2

அடக்கத்தைவிட நன்மை தரக்கூடியது வேறு இல்லை.

360 **ஏ**திலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு 190 19 10

பிறரைக் குறைகூற முற்படுபவர் தம்மைப்பற்றி சிந்திப்பாராயின் அப்புறங்கூறல் தமக்குக் குற்றம் என்று உணர்ந்து அதனை விலக்குவார்.

361 **பு**க்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு 340 34 10

வாத முதலியவற்றின் வீட்டில் ஒதுக்குக் குடியிருந்தே வந்த உயிருக்கு நிலையான வீடு இன்னும் கிடைக்கவில்லை போலும்.

362 **எ**ண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு 392 40 2

தருக்கம், இலக்கணம் என்ற கல்வியே மக்களுக்கு கண்களாம்.

363 **து**ளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு 557 56 7

மழையின்மை உலகத்துக்குத் துன்பம். அரசன் அன்பின்மை குடிகளுக்குத் துன்பமாம்.

364 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு 945 95 5

தம் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளும் உணவை மனம் விரும்பிய அளவு கொள்ளாமல் நோய் வராத அளவு தெரிந்து உண்பானாகில் அவன் உயிருக்கு நோய்களால் துன்பம் உண்டாகாது.

## 73 உயிர் – 4

365 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர் 940 94 10

சூதாட்டத்தால் பயனை இழக்குந்தோறும் அதனையே விரும்பும் சூதனைப்போல, துன்பங்களை அனுபவிக்குந்தோறும் உடம்பின்மேல் விருப்பத்தை உடையது உயிர்.

366 கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர் 1070 107 10

ஒளிப்பவர் இல்லையென்று சொன்னவுடனே இரப்பவர் உயிர் போம்; அங்ஙனம் அச்சொல்லைச் சொன்னவருடைய உயிர் போகாது எங்கு ஒளிந்து நிற்கும் ?

367 நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர், 1213 122 3

நனவில் வந்து அன்பு செய்யாத காதலரை யான் கனவில் காண்பதால் என்னுயிர் நிலைபெற்றுள்ளது.

368 பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர் 1230 123 10

குறித்த காலம் கடந்தும் தலைவர் வந்திலர், பொருள் முடிவையே குறிக்கோளாகக் கொண்ட தலைவர். இயல்பை எண்ணி இம்மாலைப் பொழுதில் இதுவரை ஆற்றியிருந்த என் உயிர் நீங்கும் நிலைமையை அடைந்தது.

## 74. உரு – 1

369 உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு 261 27 1

தம் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் தவத்தின் இயல்பு ஆம்.

## 75. உரை – 2

370 நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித்து உரைக்கும் உரை 193 20 3

பயனில்லாத சொற்களை ஒருவன் விரித்துப் பேசுதல் அவன் நீதியற்றவன் என்பதை உணர்த்துவதாகும்.

371 செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை 1151 116 1

நீ எம்மைப் பிரியாமல் இருப்பதாயின் அதனை எனக்குச் சொல்; மற்று உன் வருகையைக் குறித்து அப்பொழுது வாழ்ந்திருப்பவர்க்குச் சொல்.

## 76. உரைக்கலான் – 1

372 அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்து உரைக்கலான் 1076 108 6

தாம் கேட்ட இரகசியங்களை எங்கும் சென்று பரப்புகின்ற காரணத்தால் கீழ்மக்கள் கொட்டப்படும் பறை (மேளம்) யினை ஒத்தவராவார்கள்.

## 77. உரையாதார் – 1

373 இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரை யாதார் 650 65 10

தாம் கற்றதை பிறருக்கு விரித்துரைக்கும் திறமில்லார் மணமில்லாத மலருக்குச் சமம் ஆவார்.

## 78. உரைத்து – 1

374 பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்
வாடுதோள் பூசல் உரைத்து 1237 124 7

மனமே, நீ சென்று எம் காதலருக்கு என் மெலிகின்ற தோளினால் நிகழும் ஆரவாரத்தைச் சொல்லிப் பெருமை அடையவல்லையோ!

## 79. உலகு – 25

375 அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு 1 1 1

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையது; அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது.

376 இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு 23 3 3

துறவு பூண்டவர்களின் பெருமையே உலகில் உயர்ந்ததாக உள்ளது.

377 சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு 27 3 7

ஐம்புலன்களின் கூறுபாட்டை அறிந்தவர்களிடம் உலகம் அடங்கியுள்ளது.

378 **பெ**ற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு 58 6 8

மகளிர் தம் கணவனே வழிபடுவாராயில் தேவருலகில் பெருஞ்சிறப்பினைப் பெறுவர்.

379 **கை**மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஞற்றும் கொல்லோ உலகு 211 22 1

எதிர் நன்மை கருதாது மழை பெய்யும் மேகத்தைப் போல மக்களும் எதிர் நன்மை கருதாது பிறருக்கு உதவி செய்யவேண்டும்.

380 **நி**லவரை நீள்புகழ் ஆற்றிற் புலவரைப்
போற்ருது புத்தேள் உலகு 234 24 4

நிலவுலகில் புகழுடன் வாழ்பவரைத் தேவர்கள் தம்மினும் சிறந்தவராகப் போற்றுவர்.

381 **க**ள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலே கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு 290 29 10

கள்வருக்கு அரச தண்டனேயால் உடம்பு அழியும்; களவை விரும்பாதவருக்கு தேவ பதவியும் கிடைக்கக்கூடும்.

382 **நெ**ருநல் உளன்ஒருவன் இன்றில்லே யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு 336 34 6

நேற்றிருந்த ஒருவன் இன்று இல்லேயென்று சொல்லக் கூடிய பெருமை (நிலேயாமை)யை உடையது உலகம்.

383 **இ**ன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு 387 39 7

இன் சொல்லுடன் மக்களுக்கு வேண்டியதைக் கொடுக்கக்கூடிய ஒருவனுக்கு உலகம் தன் சொல்வழிப்பட்டு நிற்கும்.

384 **செ**விகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு 389 39 9

அறிவுடைய அமைச்சர் கூறும் நன்மொழிகள் தனக்கு வெறுப்பாயினும் பொறுத்து ஏற்கும் குணமுடைய அரசன் ஆட்சியில் உலகு அடங்கும்.

385 எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு 470 47 10

ஒரு காரியம் செய்யும்போது பிறர் இகழாத வகையில் தம் நிலேமைக்கு ஏற்ற முறையில் செய்தல் வேண்டும்.

386 **நா**டோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு 520 52 10

அரசன் காரியம் செய்பவரின் ஒழுங்கைப்பொறுத்தே ஆட்சியின் ஒழுங்கு அமையும்; ஆதலால் தன் காரியம் செய்வாரை அரசன் நாள்தோறும் கண்காணித்தல் வேண்டும்.

387 **கு**டிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு 544 55 4

தன் குடிகளை அணைத்துச் செங்கோல் செலுத்தும் அரசனிடத்து உலக மக்கள் அனைவரும் பற்றுடையவராவார்.

388 **க**ண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு 571 58 1

தாட்சண்யமாகிய அழகு அரசரிடம் அமைந்திருப்பதாலேயே உலகம் நிலைத்துள்ளது.

389 **க**ருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு 578 58 8

தம் காரியம் கெடாமல் தாட்சண்யம் பார்க்க வல்லவர்க்கு இவ்வுலகு உரிமையுடையதாகும்.

390 **வி**னைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு 612 62 2

செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாது விட்டவரை உலகம் விட்டுவிடும்; ஆதலால் செய்யவேண்டிய காரியத்தை தவிராது செய்க.

391 **எ**னைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு 670 67 10

காரியம் செய்வதில் உறுதியில்லாத அமைச்சர் வேறு எவ்வகைச் சிறப்புடையராயினும் உயர்ந்தவரால் மதிக்கப்படார்.

392 **கெ**டாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு 809 81 9

தொன்றுதொட்டு நட்பினராயுள்ளார் பிழை செய்தாராயினும் அவரை கைவிடாதவரை உலகம் நட்புக்கொள்ள விரும்பும்.

393 அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையா துலகு 841 85 1

ஒருவனுக்கு அறிவு இல்லாமையே கொடிய இல்லாமை யாகும். வேறு பொருள் இல்லாமையை இல்லாமையாக உயர்ந்தார் கொள்ளார்.

394 பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு 874 88 4

அவசியம் நேர்ந்தபோது தன் பகையை மாற்றி நட்பாகச் செய்துகொள்ளும் ஒருவன் பெருமைக்கு உரியவனாவான்.

395 இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு 970 97 10

தமக்கு இழிவு வந்தபோது அதனைப் பொறுத்து உயிர் வாழாது அதனைவிட்ட மானமுடையார் புகழ் வடிவினை உலகினர் என்றும் வணங்கித் துதிப்பார்.

396 நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு 994 100 4

நீதியையும் அறத்தையும் விரும்புவதனால் பயன்படுதலுடையாரது பண்பினை உலகத்தார் கொண்டாடுவார்.

397 பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு 1015 102 5

பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வந்த பழியைப் போல மதித்து நாணப்படுபவரே நாணத்தில் சிறந்தவராவார்.

398 குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு 1025 103 5

குற்றங்கள் செய்யாதவனாய்த் தன் குடி உயர்வதற்கான செயல் செய்பவனை உலகத்தார் தாமாக வேண்டிச் சுற்றமாகக் கொள்வார்.

399 தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு 1103 111 3

தம் காதலியின் தோளை அணைந்து இன்புறுவார்க்கு அவ்வின்பம் வைகுந்த பதவியினும் பெரிதாம்.

## 80. உளன் – 1

400 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் 294 30 4

ஒருவன் தன் மனமறியப் பொய் சொல்லாது ஒழுகுவானுயின் அவன் உயர்ந்தார் அனைவராலும் நன்கு மதிக்கப்படுவான்.

## 81. உள – 6

401 இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள 223 23 3

தன் வறுமையை ஒருவன் எடுத்துச் சொல்லு முன் குறிப்பறிந்து கொடுக்கும் இயல்பு நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலேயே அமைந்திருக்கும்.

402 அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்
பூரியார் கண்ணும் உள 241 25 1 [வம்

அருளுடைமையாகிய செல்வமே அரிய செல்வமாம். பொருட்செல்வங்கள் கீழ்மக்களிடத்தும் உள்ளனவாகும்.

403 பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள 521 53 1

ஒருவன் செல்வம் அழிந்து வறியவனுனபோதும் அவன் பழைய நிலைமையைப் பாராட்டி உடன் வாழும் இயல்பு உறவினரிடத்து உளதாகும்.

404 காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள 527 53 7

காக்கைகள் தம் இனத்தைக்கூட்டி உண்ணும். அதுபோல சுற்றத்துடன் கலந்துண்பவன் பல்வகைச் செல்வங்களும் பெறுவான்.

405 ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள 1099 110 9

முன் அறியாதார் போலப் பொதுப்பார்வை பார்த்தல் காதலுடையாரிடத்தே நிகழ்வன.

406 கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள 1101 111 1

கண்டும், கேட்டும், உண்டும், மோந்தும், தொட்டும் அனுபவிக்கப்படும் ஐவகை இன்பங்களும் இந்நங்கையின் கண்ணே உள.

## 82. உளேன் – 3

407 **கா**மக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன் 1167 117 7

காம வெள்ளத்தை நீந்திக் கடக்கமுடியாதவளாயினேன்; அதனால் நள்ளிரவிலும் துயிலின்றித் தனித்துத் துன்புறுகின்றேன்.

408 **ம**ற்றுயான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன் 1206 121 6

யான் தலைவரைக் கூடிய நாளில் இன்பத்தை எண்ணுவதால் உயிர் வாழ்கின்றேன்; வேறு எதனால் உயிர் வாழ்வேன்?

409 **உ**ரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன் 1263 127 3

போர் வென்றி கருதித் தம் ஊக்கமே துணையாகச் சென்றவர் வருகையை விரும்பி யான் இன்னும் உயிர் வாழ்கின்றேன்.

## 83. உழி – 1

410 **அ**ற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி 226 23 6

பொருள் பெற்றவன் அதைச் சேர்த்துவைப்பதற்குரிய வழி ஏழைகள் பசியைத் தீர்த்தலேயாம்.

## 84. உழை – 1

411 **ஆ**க்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை 594 60 4

தளராத ஊக்கமுடையவனிடத்து செல்வம் தானே வழி கேட்டுக்கொண்டு தேடியடையும்.

## 85. உறும் – 7

412 **ஊ**ழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந்து உறும் 380 38 10

தான் ஒன்றைச் செய்ய எண்ணினாலும் வினை தனக்குரியதைச் செய்விக்கும்; ஆதலின் ஊழ்வினை மிக்க வலிமையுடையது.

413 பழுதெண்ணும் மந்திரியில் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும் 639 64 9

உடனிருந்து தவருன ஆலோசனை கூறும் அமைச்சன் பகைவர் பலரைக்காட்டிலும் பெருந்தீமை விளைவிப்பவனுவான்.

414 முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந்து உறும் 707 71 7

ஒருவன் மகிழ்ச்சியுற்ருலும் வெறுப்புற்ருலும் அவன் முகம் முற்பட்டுக் காட்டும்; ஆதலின் முகம் அறிவிற் சிறந்தது.

415 **பே**தை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும் 816 82 6

அறிவிலாதான் நட்பைக் காட்டிலும் அறிவுடையான் பகை நல்லது.

416 **ந**கை வகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும் 817 82 7

அறிவு பெறுதலின்றிச் சிரிப்பதற்கேதுவாகிய கீழ்மக்கள் நட்பினுல் வருவனவற்றிலும் பகைவரால் வரக்கூடியன பன் மடங்கு நல்லனவாம்.

417 **கு**டிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் 1023 103 3

என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையை வரிந்துகட்டிக்கொண்டு முன் வந்து துணைசெய்யும்.

418 **க**ரவாது உவந்தீயும் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடி யுறும் 1061 107 1

தம்மிடம் உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் கண் போல் சிறந்தவரிடம் ஒன்றை யாசியாதிருத்தல் யாசித்துச் செல்வமடைதலினும் கோடி மடங்கு சிறந்தது.

## 86. உறுப்பு – 1

419 **இ**ருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு 737 74 7

ஊற்று நீர், மழை நீர், மலையருவி நீர், மலைத்தொடர் அழியாத மதில் நாட்டிற்கு உறுப்புகளாகும்.

## 87. உறின் – 1

420 பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் 599 60 9

யானையானது பெரிய உடம்பு, கூரிய கொம்பு உடையதாயினும் புலி தாக்கினால் பயப்படும். (வலியும் கருவியும் உடையராயினும் ஊக்கம் உடையார்க்கு அஃது இல்லார் அஞ்சுவார்கள்.)

## 88. உற்று – 2

421 கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று 1244 125 4

மனமே, நீ தலைவர்பாற் செல்வதாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்க; இல்லையாயின் காண்டல் வேட்கையால் அவரைக் காட்டென்று இவை என்னைத் தின்று தீர்க்கும்.

422 கண்ணில் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று 1290 129 10

முன்னொருநாள் என் காதலி கண்ணினால் சிறிது பிணக்கம் காட்டினாள்; பின் அதனையும் மறந்து அணையச் சென்ற என்னினும் ஆசை மிக உடையவளாய் வந்தணைந்தாள்.

## 89. ஊன் – 1

423 செயிரில் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரில் தலைப்பிரிந்த ஊன் 258 26 8

குற்றம் நீங்கிய தெளிந்த அறிவினை உடையார் புலாலை பிணமென்று கருதி உண்ணாது தவிர்வர்.

## 90. எடுத்து – 1

424 விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து 776 78 6

ஒரு வீரன் தனக்குக் கழிந்த வாழ்நாட்களை எண்ணிப் பார்த்து அவற்றுள் சிறந்த புண்ணைப் பெறாத நாட்களை எல்லாம் வீண் நாட்களாகக் கணக்கிடுவான்.

## 91. எவன் – 4

425 அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன் 46 5 6

இல்வாழ்க்கையைத் தரும வழியில் நடத்துபவன் துறவு வாழ்க்கையிற் சென்று அடையக்கூடியது ஒன்றும் இல்லை.

426 புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன் 237 24 7

புகழில்லாத வாழ்க்கையினையுடையார் பிறரால் இகழப்பட்டு வருந்துவார்.

427 நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லல் படுவ தெவன் 379 38 9

நல்வினையால் இன்பம் நேர மகிழ்பவர் துன்பம் தீவினையால் நேரவருந்துவது ஏன் ?

428 தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன் 1172 118 2

மேல் விளைவை ஆராய்ந்து அறியாது அன்று காதலரை நோக்கிய கண்கள் இன்று நம்மால் விளைந்தது என்று துன்பத்தைப் பொறுக்காமல் வருந்துவது எதனுல்?

## 92. எளிது – 1

429 நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்காணும் யார்க்கும் எளிது 864 87 4

கோபம் உடையவனுய் இரகசியத்தை மறைக்கும் இயல்பு இல்லாதவனை வெல்லுதல் என்றும் யார்க்கும் மிக எளிதாகும்.

## 93. எனல் – 5

430 பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல் 196 20 6

பயனில்லாத சொற்களைப் பேசுபவன் மனிதப் பதராவான்.

431 உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல் 282 29 2

குற்றங்களை மனத்தால் நினைத்தலும் பாவம்; ஆதலின் பிறன் பொருளை வஞ்சித்துக்கொள்ள மனத்தாலும் நினையாதொழிக.

432 ஒளிஒருவர்க்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல் 971 98 1

ஒருவனுக்குப் பெருமை தருவது அவன் ஊக்க மிகுதி; அவ்வூக்கம் இன்றி வாழ்தலே ஒருவனுக்கு இழிவு தருவதாகும்.

433 **நெ**ய்யால் எரிநுதுப்பேம் என்றற்ருல் கௌவையால்
காம நுதுப்பேம் எனல் 1148 115 8

அயலார் அலர்மொழியால் நம் காமத்தை அவிக்கக் கருதுதல், எண்ணெயால் நெருப்பை அவிக்கக் கருதுவதை ஒத்ததாகும்.

434 **நி**ணந்தீயில் இட்டன்ன நெஞ்சினர்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல் 1260 126 10

நெருப்பில் இட்ட கொழுப்பு உருகுமாறு போலக் காதலரைக் கண்டு மனம் உருகுவார்க்கு அவர் நெருங்கிய போது பிணங்கி நிற்றல் கூடுமோ.?

## 94. எனின் – 11

435 **பொ**ய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் 292 30 2

பிறருக்குக் குற்றமற்ற நன்மையைத் தருவதாயின் பொய் யான சொற்களும் மெய்யான சொற்களாகக் கருதப்படும்.

436 **தூ**றப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின் 378 38 8

உண்பதற்கு வேண்டிய பொருள் இல்லாதவர் துறவாமைக்குக் காரணம் துன்புறுத்த வேண்டிய வினை அவர்களை விடாமையேயாம்.

437 **க**ற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின் 2 1 2

இறைவனை வணங்கவேண்டும் என்னும் அறிவை உண் டாக்காத கல்வியால் பயனில்லை.

438 **தா**னந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் 19 2 9

மழை பெய்யாவிடில் உலகில் தானம் கொடுத்தலும் தவம் செய்தலும் நிகழமாட்டா

439 **அ**ருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின் 210 21 10

பாவம் செய்யாத ஒருவன் எவ்வகைத் துன்பத்துக்கும் ஆளாகான்.

440 **உ**ள்ளியது எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் 309 31 9

ஒருவன் கோபத்தை விடுவானுயின் எண்ணியவற்றை எல்லாம் அடைவான்.

441 **வே**லன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின் 546 55 6

அரசனுக்கு வெற்றி தருவது வேல் அல்ல; செங்கோல் முறையேயாகும்.

442 **ஆ**பயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் 560 56 10

அரசன் தர்ம வழியில் உயிர்களைக் காவாவிடில் பசுக்கள் பால் குறையும்; அந்தணர் நூல்களை மறந்துவிடுவார்கள்.

443 **ப**சக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின் 1189 119 9

பிரிவின் கொடுமை அறியாத என்னை நயந்து கூறி உடம்படுமாறு செய்த தலைவர் நல்லவரே எனின் என் மேனி எவ்வாறேனும் பசப்பை அடைவதாகுக.

444 **ப**சப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின் 1190 119 10

தலைவரை அன்பில்லாதவர் என்று பிறர் தூற்றுமல் இருப்பாராயின் யான் பசப்பின் வடிவமேயானாலும் நன்றே.

445 **வீ**ழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின் 1194 120 4

மதிப்பிற்குரிய கற்புடை மகளிரும் கணவரால் விரும்பப் படவில்லை என்றால் தீவினையாட்டியரே யாவார்.

## 95. என்பார் – 1

446 **ச**லம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும் என்பார் 956 96 6

குற்றமற்ற தம் குடிமுறைக்கு ஏற்ப வாழ்பவர் வறுமையுற்ற போதும் வஞ்சனைச் செயல்களை மேற்கொள்ளார்.

## 96. என்று – 10

447 **இ**ரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று 1067 107 7

யாசிக்க வேண்டுமாயின் உள்ளதை மறைப்பவர்களிடம் யாசிக்க வேண்டாமென்று யான் யாசிப்பவரை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

448 **ம**லர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று 1112 112 2

மனமே, யானே காணக்கூடிய என் காதலியின் கண் களைப் பலரும் காணக்கூடிய பூக்கள் ஒப்புடையனவாகும் என்று மயங்குகின்றாய். உன் அறிவு என்னே ?

449 **கா**ணில் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று 1114 112 4

குவளைப்பூக்கள் என் காதலியின் கண்களுக்கு ஒப்பா காமையை எண்ணி நாணத்தால் தலை கவிழும்.

450 **ஊ**டலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று 1307 131 7

இனிக் கலத்தல் நீளுமோ நீளாதோ என நினைக்க வைத்தலால் ஊடலும் ஒரு சிறிது துன்பத்தை உண்டாக்குவ தாகும்.

451 **யா**ரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று 1314 132 4

காதலுடைய இருவர் யாரினும் யாம் காதல் மிகவுடை யேம் என்ற கருத்தில் யான், யாரினும் காதலம் என்றேன்; அதனை என் காதலியர் பலருள்ளும் நின்னிடத்து காதலுடை யேன் என்ற பொருளிற் கூறியதாகக் கொண்டு, யாரினும் காதலுடையீர் என்று ஊடினாள்.

452 **கோ**ட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று 1313 132 3

வளைந்த பூமாலையை யான் அணிந்தாலும் வேறு ஒருத் திக்குக் காட்டவே இது சூடினீர் என என்மேல் தலைவி சினம் கொள்வாள்.

453 **வ**ழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று 1317 132 7

யான் தும்மவும் தலைவி வாழ்த்தினாள்; அவளே மாறி யார் உம்மை நினைத்ததால் நீர் தும்மினீர் என்று சொல்லி பிணங்கி அழுதாள்.

454 **து**ம்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று 1318 132 8

நான் தும்மினுல் இவள் பிணங்குவாள் என அஞ்சி தும்மலை அடக்கினேன்; உம்மவர் உம்மை நினைப்பதை எனக்கு மறைப்பதற்காக தும்மலை அடக்குகிறீர் என்று சொல்லிப் பிணங்கினுள்.

455 **த**ன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று 1319 132 9

ஊடிய தன்னை அது தீர்த்தற்பொருட்டு யான் பணிந்து வேண்டினேன். அதற்குத் தலைவி, பிறரிடத்தும் நீர் இவ்வாறு தானே நடந்துகொள்வீர் என்று சொல்லிச் சினந்தாள்.

456 **நி**னைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று 1320 132 10

பேச்சும் செயலும் ஒழிந்து அவள் அவயவங்களின் ஒப்பற்ற அழகை நோக்கிக்கொண்டிருப்பினும், எவர் அவயவங்களோடு ஒப்பு காண்பதற்கு நோக்கினீர் கூறும் எனக் கோபிப்பாள்.

## 97. என் – 3

457 **செ**ல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என் 301 31 1

தன் கோபம் செல்லுமிடத்து அடக்குபவனே கோபத்தை அடக்குபவன்; செல்லாத இடத்து அடக்கினுலும் அடக்காவிட்டாலும் ஒன்றே.

458 **செ**வியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் 420 42 10

செவியால் உண்ணப்படும் சொற்களின் சுவையறியாது வாயுணவின் சுவையறிவு மாத்திரமே உடையவர் சாவதும் வாழ்வதும் ஒன்றே.

459 **உ**றின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என் 812 82 2

தமக்குப் பயன் உள்ளபோது நட்புக்கொண்டு பயன் இல்லாதபோது கைவிடுவார் நட்பை ஒருவன் பெற்ருலென்ன விட்டாலென்ன.

## 98. எஃகு – 1

460 பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு 773 78 3

பகைவரிடத்து தாட்சண்யம் பாராட்டாது தாக்குவது வீரமாகும். அப்பகைவருக்குத் தாழ்வு வந்தபோது அவர்க்கு உபகாரம் செய்வது பெருவீரம்.

## 99. ஏமாப்புடைத்து – 6

461 ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து 126 13 6

அபாயம் வரும்போது ஆமை ஐந்து உறுப்புக்களையும் (கால் நான்கு, தலை ஒன்று) உள்ளிழுத்துக்கொள்வது போல தீமை நேரிடும்போது ஐம்பொறிகளையும் அடக்குவார் எழு பிறவிகளிலும் நன்மை பெறுவார்.

462 செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத் திற்கு ஏமாப்புடைத்து 112 12 2

நடுவு நிலைமையுடையவன் செல்வம் என்றும் அழியாது.

463 மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இன நலம் ஏமாப்புடைத்து 458 46 8

நல்வினையால் மனச்சிறப்பு உடையவர்களுக்கும் நல்லவர் சேர்க்கை அம் மனநலத்தை வளர்விக்கும் வலிமையுடையதாம்.

464 மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இன நலத்தின் ஏமாப்புடைத்து 459 46 9

ஒருவனுக்கு மறுமை இன்பமும் மனச்சிறப்பினால் வரும். அதுவும் நல்லவர் சேர்க்கையால் நன்றாய் அமைவதாகும்.

465 ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து 398 40 8

ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி எழு பிறவிக்கும் பயன்படுவதாம்.

466 குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன் இலனாம் ஏமாப்புடைத்து 868 87 8

ஒருவன் சற்குணம் இல்லாதவனாய் குற்றம் உள்ளவனாயின் துணையில்லாதவனாவான். அஃது அவன் பகைவர்க்கு துணை செய்வதாகும்.

## 100. ஏறு – 1

467 படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு 381 39 1

சேனை, குடிகள், உணவுப் பொருள்கள், மந்திரிமார், நண்பர், காவல் என்ற ஆறு அங்கங்களையும் உடையவன் அரசருள் சிறந்தவனும்.

## 101. ஐந்து – 1

468 பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து 738 74 8

நோயில்லாமை, செல்வம், விளைவு, இன்பம், காவல் இவ்வைந்தும் நாட்டிற்கு அழகாம்.

## 102. ஒப்பு – 1

469 உறுப்புஒத்தல் மக்கள்ஒப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு 993 100 3

உயிரொடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புடைமையாகாது. குணத்தால் ஒத்திருத்தலே ஒப்பாகும்.

## 103. ஒருங்கு – 4

470 அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு 343 35 3

ஐம்புலன் இன்பத்தை வெல்லல் வேண்டும்; எல்லாப் பற்றுக்களையும் விடல் வேண்டும்.

471 மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாயது எல்லாம் ஒருங்கு 610 61 10

சோம்பல் இல்லாத அரசன் உலகமெல்லாம் தம் ஆட்சிக்கீழ் பெறுவான்.

472 ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு 760 76 10

பொருளையுடையார்க்கு அறமும் இன்பமும் எளிதில் கிடைக்கும்.

473 இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு 951 96 1

ஒழுங்கும் பழிபாவங்களுக்கு நாணுதலும் உயர்குடிப் பிறந்தாரிடம் அல்லது பிறரிடம் உண்டாகமாட்டாது.

## 104. ஒளி – 3

474 **கொ**டையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி 390 39 10

கொடுத்தலும், அன்பும், நீதியும், காத்தலும் ஆகிய இயல்புகளையுடைய அரசன் குலத்திற்கு விளக்குப் போல்வான்.

475 **ம**ன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னுவாம் மன்னர்க்கு ஒளி 556 56 6

அரசருக்குப் புகழ் உண்டாவது செங்கோல் முறைமையினாலேயாம்.

476 **க**ல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி 870 87 10

நீதி நூல்களைக் கல்லாதவனைப் பகைத்தலால், வரும் சுலபமான பொருளை அடையாதவனைப் புகழ் அடையாது.

## 105. ஒழுகலான் – 2

477 **அ**ந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் 30 3 10

அந்தணர் என்பவர் அருளுடைய துறவிகளேயாவர்.

478 **தே**வர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்து ஒழுகலான் 1073 108 3

தேவரைப் போன்று கீழ்மக்களும் தாம் விரும்பியவற்றைச் செய்யக்கூடும்; ஆதலால் தேவரும் கீழ்மக்களும் ஒத்த தன்மையாவார். (தேவர் உயர்வினாலும், கயவர் நெறி நில்லாமையாலும் விரும்பியதைச் செய்வார்கள்.)

## 106. ஒழுகுவார் – 5

479 **வி**ளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார் 143 15 3

தம்மை முழுவதும் நம்பியவருடைய மனைவியிடத்துத் தவருக நடப்பவர் இருந்தும் இறந்தவரேயாவார்.

480 **பொ**ருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார் 246 25 6

அருளுக்கு மாருன செயல் புரியும் துறவிகள் வழி தவறியவராவார்.

481 **அ**கலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் 691 70 1

விரைவில் குண மாறுபடும் அரசரைச் சேர்ந்து வாழ்ப வர், தீக்காய்பவர் போல மிகவிலகாமலும் மிகநெருங்கா மலும் பக்குவமாக இருத்தல் வேண்டும்.

482 **எ**ரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார் 896 90 6

நெருப்பிற் சுடப்பட்டவனும் தப்பிப் பிழைத்தல் கூடும். பெரியாரை அவமதித்தவர் தப்பிப் பிழைத்தல் முடியாது.

483 **உ**ட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார் 921 93 1

கள்ளின் மீது விருப்பமுடையவரைப் பகைவர் இகழ்வ துடன் பெருமையையும் இழப்பார்கள்.

## 107. ஒழுகுவான் – 1

484 **ப**ருவரலும் பைதலும் காணுன்கொல் காமன்
ஒருவர்கண் நின்ருெழுகு வான் 1197 120 7

ஒருபக்கத்தவரிடம் நின்று போர் செய்யும் காமன் அவர் துன்பங்களை அறியானே ?

## 108. ஒழுக்கு – 2

485 **நீ**ரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு 20 2 10

நீர் இல்லாது உலகம் நிலைபெருது; நீர் மழையில்லாது கிடைக்காது.

486 **பி**றன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு
அறன்ஒன்ருே ஆன்ற ஒழுக்கு 148 15 8

பிறர் மனைவியை விரும்பாத தன்மை அறமும் ஒழுக்கமு மாகும்.

## 109. ஒற்று – 4

487 **வி**னைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்ருங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று 584 59 4

தம் காரியம் செய்பவர் உறவினர் பகைவர் என்ற அனைவரையும் ஆராய்ந்து நிலைமையை அறிய வல்லவனே ஒற்றனுவான்.

488 கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று 585 59 5

பிறருக்கு ஐயம் தோன்ருத வடிவோடு அஞ்சாது நின்று எந்நிலையிலும் உண்மையை வெளியிடாத வல்லமை உடையவனே ஒற்றனுவான்.

489 துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று 586 59 6

துறவு வேடம் பூண்டு புகுதற்கரிய உள்ளிடமெல்லாம் புகுந்து ஆராய்ந்து எவ்வகைத் துன்பத்துள்ளும் உண்மையை வெளியிடாதவனே ஒற்றனுவான்.

490 மறைந்தவை கேட்கவற் ருகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று 587 59 7

பிறர் மறைவாகச் செய்யும் செய்கைகளை உரியவர் மூலம் கேட்டு ஐயமின்றித் துணியவல்லவனே ஒற்றனுவான்.

## 110. ஒன்று – 1

491 தன்துணை இன்ருல் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று 875 88 5

தனக்குத் துணையோ இல்லை; பகையோ இரண்டு; இந்நிலையில் ஒருவனுகிய தான் அப்பகை இரண்டினுள் ஒன்றை நட்பாக்கிக்கொள்க.

## 111. கடன் – 2

492 அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் 638 64 8

அறிஞர் கூறுவதையும் ஏற்காமல் தானும் அறியாதவனுயினும் வெறுத்து விலகாமல் அரசனுக்கு நன்மையை எடுத்துரைக்க வேண்டுவது அமைச்சன் கடமையாகும்,

493 நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்ருேர் கடன் 802 81 2

நட்பிற்கு அங்கமாவன உரிமையால் செய்யும் செயல்களே; அவ்வுரிமைக்கு இயைந்து கொள்ளுதலே நல்லவர் முறைமை.

## 112. கடை — 16

494 **இ**ல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை 53 6 3

ஒருவன் மனைவி நற்குண நற்செய்கை உடையவ ளாயின் அவனுக்கு இல்லாதது ஒன்றும் இல்லை; அல்லையா யின் உள்ளது ஒன்றும் இல்லை.

495 **அ**றிவினுல் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்ருக் கடை 315 32 5

பிற உயிர்களுக்கு நேரும் துன்பத்தை தம் உயிருக்கு நேரும் துன்பம்போல் எண்ணிப் போக்காதவர் பெற்றுள்ள அறிவு பயனற்றது.

496 **சா**தலின் இன்னுதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை 230 23 10

பிறருக்கு உதவி செய்ய முடியாத நிலையைக்காட்டிலும் சாவது மேலாம்.

497 **ந**ன்ருகும் ஆக்கம் பெரிதெனினும் சான்ருேர்க்குக்
கொன்ருகும் ஆக்கம் கடை 328 33 8

இன்பமிகும் செல்வம் தரக்கூடும் என்ருலும் துறவிக ளுக்குக் கொலையால் வரும் செல்வம் கடைப்பட்டதாகும்.

498 **நி**ல்லா தவற்றை நிலையென என்றுணரும்
புல்லறி வாண்மை கடை 331 34 1

நிலையில்லாத பொருள்களை நிலையுடையனவென்று கருதும் கீழான அறிவு துறவிகளுக்கு இழிவாகும்.

499 **பே**தைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை 372 38 2

தீவினை ஒருவனை அறியாமைக்கு ஆளாக்குகின்றது; நல்வினை ஒருவன் அறிவினை விளக்கமுறச் செய்கின்றது.

500 **ந**ன்ருற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்ருக் கடை 409 47 9

அவரவர் இயல்புக்கேற்ற வகையில் செய்யவில்லை யாளுல் நல்லன செய்யினும் குற்றமாக முடியும்.

501 **ஆ**காறு அள்விட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை 478 48 8

பொருள் செலவு அதிகமில்லாதிருக்குமாயின் வரும் வழி சுருக்கமாயினும் குற்றமில்லை.

502 பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை 803 81 3

நண்பர் உரிமையாற் செய்தவற்றை தாம் செய்தவை போல் ஒப்புக்கொள்ளவில்லையாயின் பழகிய நட்புப் பயனற்ற தாகும்.

503 ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை 837 84 7

அறிவில்லாதவன் பெரிய செல்வத்தையடைந்தால் அயலார் பயனடைய உறவினர் பசித்திருப்பர்.

504 தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை 964 97 4

உயர்குடியாளர் தம் நிலையில் தவறியபோது தலையை விட்டு நீங்கிய மயிர்போலாவார்.

505 நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை 998 100 8

தம் பகைவரிடத்தும் பண்பு உடையவராய் ஒழுகாமை அறிவுடையார் குற்றமாகும்.

506 குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை 1019 102 9

ஒழுக்கம் தவறினல் அஃது ஒருவன் குடிப்பிறப்பின் பெருமையை மாத்திரமே கெடுக்கும். நாணம் இல்லாதது நன்மைகள் யாவையும் கெடுக்கும்.

507 ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை 1059 106 9

யாசிப்பவர் இல்லையாயின் கொடுப்பவரிடத்துப் புகழ் எவ்வாறு உண்டாகும்?

508 அலர்நாண வல்வதோ அஞ்சலோம்பு என்றார்
பலர்நாண நீத்தக் கடை 1149 115 9

அஞ்சாத நின்னைப் பிரியேன் என்று கூறிய தலைவரே இன்று பிறர் நாண நம்மைத் துறந்தபின் நாம் அவருக்கு நாண முடியுமோ?

509 நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை 1195 120 5

நம்மால் காதலிக்கப்பட்டவர் நம்மைக் காதலிக்காத போது நமக்கு அவர் இன்பம் செய்வது எங்ஙனம்?

## 113. கட்டு — 1

510 **ப**ண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர் கட்டு 1083 109 3

எமன் என்று சொல்லப்படுவதை இதுவரை அறியாம லிருந்தேன்; இப்போது அறிந்தேன்; அது பெண் தன்மை யுடன் பெரிய கண்களையுடையது.

## 114. கண் — 17

511 **ப**கைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண் 145 15 6

பிறன் மனைவியைக் கூடுகின்றவனை பகைமை, பாவம், பயம், பழிப்பு ஆகியவை விடாமற் பற்றும்.

512 **கு**றிப்பில் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண் 705 71 5

எதிர்ப்பட்டதைக் காணவல்ல தம் காட்சி அறிவினால் பிறர் மனக்கருத்தை அவர் உடற்குறிகளால் உணரமாட்டாக் கண்கள் பயனற்றனவாகும்.

513 **ப**ண்ணென்னும் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்
கண்ணோட்டம் இல்லாத கண் 573 58 3 [ னும்

பாட்டோடு பொருந்தாத இசை பயனற்றதுபோல தாட்சண்யத்தோடு பொருந்தாத கண் பயனற்றதாகும்.

514 **உ**ளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண் 574 58 4

தாட்சண்யம் இல்லாத கண்கள் முகத்தில் இருப்பினும் பயனில்லை.

515 **ஒ**ற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண் 581 59 1

ஒற்றரும் சிறந்த நீதி நூலும் இரண்டும் அரசனுக்கு இரு கண்களாகும்.

516 **க**ண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண் 1084 109 4

பெண்தன்மை நிறைந்த இந்நங்கையின் கண்கள் கண்டார் உயிரைக் கவரும் தன்மை உடையனவாய் இவளோடு மாறுபட்டன.

517 **கொ**டும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண் 1086 109 6

இவள் புருவங்கள் இவள் கண்களை மறைப்பின் அவை என்னைத் துன்புறுத்தா.

518 **மட**லூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கு என்கண் 1136 114 6

இந்நங்கையின் காரணமாக என் கண்கள் உறக்கம் ஒழிந்தன. ஆதலால் இரவின் இடையாமத்திலும் யான் மடல் ஊர்தலை எண்ணியிருப்பேன்.

519 **உ**ள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோ என்கண் 1170 117 10

மனத்தைப் போன்று காதலர் உள்ளவிடத்துக்கு விரைந்து செல்லக்கூடுமாயின் என் கண்கள் நீர் சிந்தி வருந்துதல் வேண்டியதில்லை.

520 **பட**ல்ஆற்றுப் பைதல் உழக்கும் கடலாற்றுக்
காமநோய் செய்தஎன் கண் 1175 118 5

கடலினும் பெரிதாகிய காம நோயை எனக்கு உண்டாக்கிய கண்கள் அத்தீவினையால் தாம் துயிலுதல் ஒழிந்துவருந்துகின்றன.

521 **உ**ழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண் 117 118 7

விரும்பி மனங்குழைந்து அன்று காதலரைக்கண்ட கண்கள் இன்று துயில் இல்லாததால் வருந்தி நீர் அற்றுப்போயின.

522 **பே**ணது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணது அமைவில கண் 1178 118 8

மனதில் விருப்பமில்லாது சொல்லளவில் விருப்பங் காட்டிய தலைவர் இங்கே உளர். அவரைக் காணது கண்கள் அமைதியுறவில்லை.

523 **வா**ராக்கால் துஞ்சா வரில்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண் 1179 118 9

காதலர் வராதபோது அவர் வருகையை எதிர்பார்த்துக் கண்கள் துயிலுதல் இல்லை. வந்தபோது பிரிந்துவிடுவாரோ என்ற அச்சத்தால் துயிலுதல் இல்லை. (இருவகைத் துன்பமுற்றன)

524 சிறுமை நமக்கொழியச் சேண்சென்ருர் உள்ளி
நறுமலர் நாணின கண் 1231 124 1

காதலரை நினைந்து அழுதலால் கண்கள் அழகு இழந்து மலரைக்கண்டு நாணிற்று.

525 நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண் 1232 124 2

பசப்புற்ற பிறகும் நீர் சொரியும் கண்கள் காதலர் அன்பின்மையை வெளிப்படுத்தும்.

526 முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண் 1239 124 9

அணைப்பின்போது நெகிழ்ந்த கைகளுக்கிடையில் சிறு காற்று நுழைந்ததற்கு ஆற்ருத காதலியின் கண்கள் பசப் படைந்தன. இந்நெடிய பிரிவை எப்படிப் பொறுத்தது.

527 பேணுது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணுது அமையல கண் 1283 129 3

நம்மை அவமதித்துக் கணவன் தம் விருப்பப்படி நடப் பினும் அவனைக் காணுதிருக்க என் கண்கள் அமையவில்லை.

## 115. கண்டு – 2

528 கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு 1240 124 10

கைகளை நெகிழ்த்த அளவில் பசப்புக்கொண்டது நெற்றி. யானே கைநெகிழ்த்துக் காற்று நுழைந்தபிறகே பசப்புற்றேன். நெற்றியின் மென்மை எனக்கில்லை என் கண் வருந்திற்று.

529 புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு 1259 126 9

அவர் வந்தபோது பிணங்குதல் கருதி வேறிடம் சென் றேன்; நெஞ்சு உறுதி குலைந்து தளர்வதை அறிந்து பின்னர் யானே சென்று அணைந்தேன்.

## 116. கதவு – 1

530 காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு 1251 126 1

நாணமாகிய தாழ்கோத்த கதவினை காமம் என்னும் குந்தாலி முறிக்கின்றது.

### 117. கயிறு – 1

531 பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு 482 49 2

காலத்தை அனுசரித்துக் காரியம் செய்வானுக்குச் செல்வம் நீங்காது.

### 118. கரவு – 1

532 அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு 288 29 8

உயிர் முதலியவற்றை அளந்தறிவாரிடம் அறம் நிலை பெற்று நிற்பது போல களவைப் பழகியவரிடம் வஞ்சனை நிற்கும்.

### 119. கரி – 3

533 ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி 25 3 5

ஐம்பொறிகளை அடக்கியவனது வலிமைக்கு இந்திரனே சான்று.

534 அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி 245 25 5

அருளுடையார் ஒருநாளும் துன்பம் அடையார்; உலகமே சாட்சி.

535 இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி 1060 106 10

கொடுப்பவன் கொடுக்கவில்லையானால் யாசிப்பவன் கோபம் கொள்ளக்கூடாது. தன் வறுமை போல அவருக்கும் இருத்தல் கூடும் என நினைக்கவும்.

### 120. கலன் – 1

536 நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் 605 61 5

சோம்பல், தாமதம், மறதி, தூக்கம் என்னும் நான்கும் அழியக்கூடியவர் விரும்பி ஏறும் கப்பலாகும்.

### 121. கல் – 2

537 வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல் 38 4 8

ஒருவன் தருமம் செய்வானாகில் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

538 பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் 505 51 5

ஒருவன் உயர்வையும் இழிவையும் அறிவதற்கு அவ னவன் செயலே உரைகல்லாம்.

## 122. கல்லாதவர் – 4

539 கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணு டையர் கல்லாதவர் 393 40 3

கல்வி உள்ளவர் உண்மையான கண்ணுடையவர். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவராம்.

540 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர் 395 40 5

செல்வர் முன் ஏழைகள் போல, கற்றவர் முன் கல்லா தவர் தாழ்ந்தவராவர்.

541 உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்
கள ரனையர் கல்லாதவர் 406 41 6

கல்லாதவர் எவ்வகைப் பயனுமற்றவராவார். (களர் நிலம்போல்)

542 அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் 427 43 7

பின்னால் வருவதை அறிய வல்லவர் அறிவுடையவர்; அறியாதவர் அறிவில்லாதவராவர்.

## 123. கவின் – 1

543 துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின் 1250 125 10

அன்பின்றிப்போன காதலரை மறவாது மனத்தில் கொண்டுள்ளதால் புற அழகும் அகத்து நிறையும் இழப்போம். ஆதலால் பொறுத்தல் வேண்டும்.

## 124. களி – 1

544 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி 923 93 3

எது செய்யினும் மகிழும் தாய் முன்பாக ஒருவன் கள் ளுண்டால் அவளுக்குத் துன்பந்தரும் என்றால் அச்செயல் பெரியவர் முன் எவ்வாறும்.

## 125. களிறு – 2

545 காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு  500  50  10

சேற்றில் சிக்கிய யானையை நரி வெல்லும். (வலிமை யுடையவர் பொருந்தா இடத்தில் எளியவரால் வெல்லப் படுவார்.)

546 சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பில்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு  597  60  7

யானை அம்பினால் புண்பட்டாலும் தாங்கி நின்று தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கமுடையார் தளராது துன்பத்தை வென்று பெருமையை நிலைநிறுத்துவர்.

## 126. கனி – 1

547 தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி  1191  120  1

காதலுக்குள்பட்ட ஆண் பெண் இருவரும் காம இன்பம் என்னும் விதையற்ற கனியைப் பெற்றவராவார்.

## 127. காட்சியவர் – 5

548 இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சியவர்  174  18  4

தெளிவான அறிவுடையவர் வறுமை காரணமாக பிறர் பொருளை விரும்பார்.

549 பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்  199  20  9

தெளிந்த அறிவுடையவர் மறந்தும் பயனற்ற சொற்களைச் சொல்லார்.

550 இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்  218  22  8

தெளிந்த அறிவுடையவர் எந்நிலையிலும் பிறருக்கு உதவி செய்வார்.

551 இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்  654  66  4

தெளிவான அறிவுடையவர் எத்துன்பம் உற்றாலும் இழிவானதைச் செய்யார்.

552 **கொ**ளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர் 698 70 8

தெளிவான அறிவுடையவர் அரசனால் மதிக்கப்பட்டேம் என்று எண்ணி அவன் விரும்பாதன செய்யார்.

## 128 காப்பு – 2

553 **செ**யற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு 781 79 1

ஒருவன் செய்துகொள்ளக்கூடியவற்றுள் நட்பே அரிய பொருளாகும். அந்நட்பு ஒருவனுக்குப் பெரிய பாதுகாப்பாகும்.

554 **ஏ**ரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு 1038 104 8

ஏர் உழுதலினும் எருவிடுதல் நல்லது. களை எடுத்தபின் நீர் விடுவதிலும் காவல் சிறந்தது.

## 129. கால் – 2

555 **ஏ**ரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் 14 2 4

மழையில்லையேல் ஏரைக்கொண்டு உழவர் பயிரிட முடியாது.

556 **பெ**றின்என்னும் பெற்றக்கால் என்னும் உறின்என்னும்
உள்ளம் உடைந்துக்கக் கால் 1270 127 10

நம் பிரிவினைப் பொருது காதலி இறந்த பின் நம்மைப் பெறக்கூடியவளானால் என்ன ? பெற்றால்தான் என்ன ? கலந்தால்தான் என்ன ?

## 130. கீழ் – 3

557 **அ**கப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ் 1074 108 4

கீழ்மகன் தன்னைவிட குறைந்தபட்டித் தன்மையுடையவரைக் கண்டால் தான் உயர்ந்தவனாக இறுமாப்புக் கொள்வான். (பட்டி – களவு)

558 **சொ**ல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ் 1078 108 8

மேன்மக்கள் சொல்லினாலேயே நல்லது செய்வர். கீழ் மக்கள் நையப்புடைத்தால்தான் நன்மை செய்வார். (கரும்பு போல்)

559 **உ**டுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்ருகும் கீழ் 1079 108 9

பிறர் நன்கு உடுத்தலையும் உண்பதையும் கீழ்மகன் கண்டால் அவர்மீது இல்லாத குற்றத்தைச் சொல்லுவான்.

## 131. குடி – 5

560 **வா**னேக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி 542 55 2

உயிரெல்லாம் மழையை எதிர்பார்த்தும் குடிகள் அரசன் செங்கோல் முறையை எதிர்பார்த்தும் வாழ்வார்கள்.

561 **செ**ப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி 887 89 7

செப்பின் மூடிபோல புறத்துக் கூடினும் உட்பகை பொருந்திய குடி மனத்தினுல் கூடாது.

562 **அ**ரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி 888 89 8

உள்பகையுடைய குடி அரத்தால் அராவப்பட்ட இரும்பு போலச் சிறிது சிறிதாகத் தேய்ந்து வலி குறையும்.

563 **ஆ**ள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி 1022 103 2

முயற்சியும் அறிவும் உடையவன் குடும்பம் உயர்ச்சி பெறும்.

564 **இ**டுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இல்லாத குடி 1030 103 10

சார்பாக நின்று தாங்கும் ஆண்மகன் பிறவாத குடும்பமாகிய மரம் துன்பமாகிய கோடரியால் வெட்டி வீழும்.

## 132. குடிக்கு – 1

565 **ந**கையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு 953 96 3

உயர்குடிப் பிறந்தார்க்கு மலர்ந்த முகமும், கொடுத்தலும், இன்சொல்லும், பிறரை இகழாமையும் நான்கும் அங்கங்களாம்.

## 133. குணம் – 1

566 உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணுள் குணம் 1125 113 5

காதலியின் சிறப்புக்களை மறந்தாலன்றோ நினைப்பவனவேன்.

## 134. குறிப்பு – 1

567 செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு 1097 110 7

நன்மை தரும் கடும் சொல்லும், பகையின்றிப் பகைப் பார்வையும் உடையவராதல் அயலார் போன்று நண்பரிடத்து நிகழும் குறிப்புக்களாம்.

## 135. கூழ் – 1

568 அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் 64 7 4

பிள்ளைகளால் அளையப்பட்ட உணவு பெற்றோருக்கு அமிழ்தமாம்.

## 136. கூற்று – 2

569 கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று 326 33 6 [மேல்

கொல்லாத அறத்தை மேற்கொண்டவன் நீடித்த வாழ்நாள் உடையவனவான்.

570 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று 1050 105 10

உண்ணப் பொருள் இல்லாதவர் துறவாதிருத்தல் பிறர் வீட்டு உப்புக்கும் புளித்த நீருக்கும் எமனவார்.

## 137. கெட – 1

571 வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட 1266 127 6

வராத கணவன் ஒருநாள் என்னிடம் வருவானாக; வந்தால் என் துன்பம் தீர அவ்வமுதத்தை என் ஐம்பொறிகளாலும் பருகுவன்.

## 138. கெடின் – 2

572 இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின் 369 37 9

பெருந்துன்பமாகிய ஆசை அற்றால் இடையறாத இன்பம் வரும்

573 **இ**ன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின் 854 86 4

மாறுபாடு என்னும் பெருந்துன்பம் இல்லையேல் பேரின்பம் உண்டாகும்.

## 139. கெடும் – 28

574 **கொ**ன்றன்ன இன்ன செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும் 109 11 9

நன்மை செய்தவர் தீமையும் செய்வாராயில் முன் செய்த நன்மையை நினைத்து தீமையை மறத்தல் வேண்டும்.

575 **ம**றப்பினும் ஒத்துக் கொளஎல்ஆகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் 134 14 4

பார்ப்பான் வேதத்தை மறந்தாலும் குற்றம் இல்லை; ஒழுக்கந் தவறக்கூடாது

576 **கொ**டுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் 166 17 6

கொடுப்பதை பொருமையால் தடுப்பவன் தன் சுற்றத்துடன் கெடுவான்.

577 **அ**ருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும் 176 18 6

அருளை விரும்பி இல்வாழ்க்கையில் நிற்பவன் பிறன் பொருளை விரும்பக்கூடாது.

578 **க**ளவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும் 283 29 3

களவினால் கொள்ளும் பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெட்டுவிடும்.

579 **வ**ருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் 435 44 5

குற்றம் வருவதன்முன் காத்துக்கொள்ளாதவன் நெருப்பின் முன் வைத்த வைக்கோற் போல அழிந்துவிடுவான்.

580 **செ**யற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும் 437 44 7

பொருளினால் தனக்கு வேண்டியதைச் செய்துகொள்ளாதவன் செல்வம் பின் நில்லாது.

581 **இ**டிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் 448 45 8

குற்றம் கண்டபோது இடித்துப் புத்தி கூறும் பெரியார் துணையில்லாதவன் பகைவர் இல்லாமலே கெட்டுவிடுவான்.

582 **செ**ய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் 466 47 6

செய்யக்கூடாதவற்றைச் செய்தாலும் செய்யவேண்டியதை விட்டாலும் கெடுவான்.

583 **அ**மைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும் 474 48 4

அயலாரோடு பொருந்தி வாழாமல் தன்னைப் பெரிதாக எண்ணிப் பிறரைப் பகைத்தவன் விரைவில் கெடுவான்.

584 **அ**ளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றுக் கெடும் 479 48 9

தன் பொருளின் அளவு தெரிந்து ஏற்ப வாழாதவன் வாழ்க்கை கெடும்.

585 **உ**ளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும் 480 48 10

தனக்குள்ள பொருளின் அளவைப் பாராது செய்யும் உதவியால் செல்வம் கெடும்.

586 **எ**ண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும் 548 55 8

குடிகளுக்கு எளியனாய் ஆராய்ந்து நீதி செலுத்தாத அரசன் தாழ்நிலையடைவான்,

587 **நா**டொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் 583 56 3

தன் நாட்டு நிகழ்ச்சிகளை நாள்தோறும் ஆராய்ந்து ஒழுங்கு செய்யாத அரசன் நாளுக்குநாள் தன் நாட்டை இழப்பான்.

588 **வெ**ருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும் 563 57 3

குடிகள் பயப்படக்கூடிய கொடிய செயல்களைச் செய்யும் அரசன் நிச்சயமாக விரைவில் கெட்டுவிடுவான்.

589 **இ**றைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லை கெடும் 564 57 4

குடிகளால் கொடியவன் என்னும் அரசன் ஆயுளும் செல்வமும் குறைந்து அழிவான்.

590 **க**டும்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும் 566 57 6

அரசன் கடுமையாகவும தாட்சண்யமில்லாதவனுகவும் இருந்தால் செல்வம் அழியும்.

591 **செ**ருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும் 569 57 9

போர் வருமுன் காவலைச் செய்துகொள்ளாத அரசன் பயந்து விரைவில் அழிவான்.

592 **கு**டியென்னும் குன்ரு விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் 601 61 1

தான் பிறந்த குடியாகிய அணையா விளக்கு, சோம்பல் என்னும் இருள் சூழ கெடும்.

593 **கு**டியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும் 609 61 9

ஒருவன் சோம்பலை ஒழித்தால் குடியிலும் ஆண்மையிலும் விளைந்த குற்றங்கள் நீங்கும்.

594 **தா**ளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் 614 62 4

முயற்சி இல்லாதவன் பிறருக்கு உபகாரியாவது, பேடியின் கை வாளுக்குச் சமம்.

595 **வெ**ள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும் 622 63 2

வெள்ளம் போல் வரும் துன்பத்தையெல்லாம் அறிவுடையவன் மாறி எண்ணும் எண்ணத்தால் அழிக்கலாம்.

596 **ஒ**லித்தக்கால் என்னும்? உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் 763 77 3

எலிகள் கடல்போல் திரண்டு ஒலிப்பினும் நாகத்தின் சீற்றத்தால் அழியும். அதுபோல், வீரர் அல்லாதார் பலர், ஒரு வீரன் கிளர்ச்சியால் அஞ்சி அடங்குவார்.

597 **ஏ**ந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும் 899 90 9

விரதமுடைய தவசிகள் கோபித்தால் இந்திர பதமும் அழிவாம்.

598 குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும் 1028 103 8

ஒரு குடியை உயர்த்துவோர் காலத்தையும் மானத்தையும் கருதார்.

599 கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும் 1056 106 6

உள்ளதை மறைக்காதவரைக் கண்டால் யாசிப்போர்க்கு வறுமை போம்.

600 இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும் 1069 107 9

யாசிக்கும் கொடுமையை எண்ணினுல் உள்ளம் உருகும். இல்லை என்னும் கொடுமையை எண்ணினுல் உள்ளம் அடியோடு அழிந்துபோகும்.

601 நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும் 1203 121 3

எனக்குத் தும்மல் வருவது போன்று தோன்றி அடங்கி விட்டது. ஆகவே காதலர் என்னை நினைப்பது போன்று நினையாராய் இருத்தல் வேண்டும்.

## 140. கேடு – 4

602 அறத்தினூஉங்கு ஆக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு 32 4 2

மக்களுக்கு தருமத்தைவிட நன்மை தருவதும் இல்லை. அதனை மறப்பதைவிட கேடு தருவதும் இல்லை.

603 மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு 204 21 4

பிறருக்குக் கெடுதி நினைப்பவரை அறக்கடவுள் அழிப்பார்.

604 இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு 858 86 8

மாறுபாடு தோன்றியபோது ஏற்றுக்கொள்ளாமையே செல்வம். ஏற்றுக்கொள்வது கேடு.

605 எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு 889 89 9

உள்பகை எள்ளுப்பிளவை போல சிறிதாயினும் அத ளுல் கேடு விளையும்.

## 141. கேளாதவர் – 1

606 குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் 66 7 6

குழல், யாழ் இவற்றின் ஓசையைவிட மக்களின் மழலைச் சொல் இனிமையாகும்.

## 142. கொண்டனள்

607 இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனுக்
கண்நிறை நீர்கொண்ட னள் 1315 132 5

இப்பிறவியில் யாம் பிரியேம் என்று கூற மறுமையிற் பிரிவேம் என்ற குறிப்பில் கண் கலங்கினுள்.

## 143. கொளல் – 20

608 கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலாற் கொளல் 279 28 9

அம்பு, வடிவத்திற் செம்மையும், குணத்திற் கொடியதும் ஆம்; யாழ், வடிவில் கோணலும், குணத்திற் செம்மையும் ஆம். ஆகையால் மக்களுள்ளும அவைபோல உள்ளார்கள் – அவரவர் செய்கையாற் தெரியப்படும்.

609 அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் 401 41 1

நல்ல நூல்களைக் கல்லாது ஒருவன் சபையில் பேசுதல் இடம் அமைக்காது வட்டாட்டம் ஆடுவதை ஒக்கும்.

610 அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் 441 45 1

அறத்தின் இயல்பை நன்கு தெரிந்து பெரியாரது நட்பினை கொள்ளும் திறம் அறிந்து கொள்ளவேண்டும்.

611 உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் 442 45 2

வந்த துன்பங்களைப் போக்கி இனித் துன்பம் வாராது காக்கும் பெரியாரைத் துணையாகக் கொள்.

612 அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் 443 45 3

பெரியாரை மகிழச்செய்து தனக்கு உரியவராக்கிக் கொள்ளுதல் மிக அரிய செயலாம்.

613 சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் 445 45 5

அரசனுக்கு ஆலோசனை கூறும் அமைச்சரே கண்களாவர். ஆதலால் அரசன் அத்தகைய அமைச்சரை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும்.

614 குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் 504 51 4

ஒருவன் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து மிகுதி எதுவோ அதன் பெயரால் அவனைக் கொள்ளுக.

615 உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல் 530 53 10

காரணமின்றிப் பிரிந்து மீட்டும் கூடுபவனை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும்.

616 ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல் 588 59 8

ஓர் ஒற்றன் தெரிந்துவந்த காரியத்தை மற்றும் ஓர் ஒற்றனால் தெரிந்து ஒப்புக்கண்டு கொள்ளல் கடமையாகும்.

617 செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல் 677 68 7

ஒரு காரியத்தை தொடங்கு முன் அந்தக்காரியம் செய்து முடித்தவன் அனுபவத்தைத் தெரிந்து செய்வதே முறையாகும்.

618 நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்தே
ஒட்டாரை ஒட்டிக் கொளல் 679 68 9

நண்பர்களுக்கு நல்லவற்றைச் செய்தலினும் பகைவருக்குப் பகைவராயுள்ளாரைக் கூட்டிக்கொள்ளல் வேண்டும்.

619 ஐயப் படாஅது அகத்தது உணர்வானை
தெய்வத்தோடு ஒப்பக் கொளல் 702 71 2

ஒருவன் மனத்தில் உள்ளதை சந்தேகம் இல்லாது தெரியவல்லவனை தெய்வத்துக்கு ஒப்பாக மதித்தல் வேண்டும்.

620 குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல் 703 71 3

தம் அனுபவக் குறிப்பினால் பிறர் குறிப்பை அறியும் இயல்புடையவரை எப்பொருள் கொடுத்தும் கொள்ளல் வேண்டும்.

621 ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல் 714 72 4

அறிவுடையார் சபையில் தம் அறிவுச்சிறப்புத் தோன்றவும் அல்லாதாரிடம் அவர் பாராட்டக்கூடிய முறையிலும் பேசுதல் வேண்டும்.

622 அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல் 720 72 10

தம்மோடு ஒத்தார் அல்லார் சபையில் அறிஞர் ஒன்றும் சொல்லலாகாது. சொல்லுவது சாக்கடையில் பெய்த அமிழ்தம் போல பயனற்றதாகும்.

623 கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல் 724 73 4

தம்மைவிடக் கற்றவர் சபையில் பேசி அவரிடமிருந்து அறியவேண்டியதை அறிந்துகொள்ளல் வேண்டும்.

624 அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல் 795 80 5

முறையல்லாதன செய்யத் தொடங்கியபோது சோகம் உண்டாகும்படி சொல்லி விலக்கவும், தவறிச் செய்துவிட்டால் வற்புறுத்தித் தடுக்கவும், செய்யவேண்டியதைச் செய்விக்கவும் வல்லவரை ஒருவன் நட்பாகக் கொள்ளல் வேண்டும்.

625 கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல் 925 93 5

ஒருவன் விலை கொடுத்து கள்ளை உண்டு மயங்கும் காரணம், நல்லது கெட்டது அறியாமையே.

626 சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல் 986 99 6

தம்மைவிட இழிந்தவரிடத்தும் தம் தோல்வியை ஒப்புக் கொள்ளல் தம் சால்பை அறிவிக்கும் உரைகல் போலும்.

627 **நல்**லாண்மை என்பது ஒருவர்க்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல் 1026 103 6

தான் பிறந்த குடியை ஆளும் தன்மையே நல்ல ஆண் தன்மையாம்.

## 144. கொளின் – 2

628 **பொ**ய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின் 836 84 6

முறையறியாதவன் ஒரு காரியத்தை மேற்கொண்டால் காரியமும் தானும் கெடும்.

629 **உ**டைசெல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின் 939 94 9

செல்வம், உணவு, புகழ், உடை, கல்வி என ஐந்தும் சூதாடுபவனிடம் அமையாது.

## 145. கொள்வது – 1

630 **த**வமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது 262 27 2

முன்னைத் தவமுடையார்க்கே தவநிலை வாய்க்கும். முன்னைத் தவமில்லார்க்கு வாய்க்காது.

## 146. கோல் – 2

631 **அ**ந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் 543 55 3

அருளாளர் நூல் செய்வதற்கும், அறம் நிலைபெறுவதற்கும் அடிப்படையாயுள்ளது அரசன் செங்கோல்.

632 **கே**ட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் 796 80 6

ஒருவன் வறுமை என்பது சுற்றத்தார் எல்லையை அளந்தறிவதற்குரிய கோல் போலாம்.

## 147. கோள் – 4

633 **சி**றப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள் 311 32 1

பிறர்க்குத் துன்பம் செய்வதால் செல்வத்தை அடையக்கூடுமானாலும் அதனைச் செய்யாமையே பெரியோர் கொள்கையாம்.

634 **க**றுத்து இன்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
செய்யாமை மாசற்ருர் கோள் 312 32 2

தமக்குத் தீமை ஒருவன் செய்தாலும் அவனுக்குத் தீமை செய்யாமையே பெரியோர் செய்கையாம்.

635 **வேட்**பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்ருர் கோள் 646 65 6

தாம் சொல்லவேண்டியதை பிறர் விரும்புமாறு சொல்லிப் பிறர் எவ்வாறு சொல்லினும் அதன் பயனைக் கொள்வதே சிறந்தவர் செயலாகும்.

636 **ஊ**றெரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள் 622 67 2

பழுதுபடும் செயல்களைச் செய்யாமையும், விதி வகையால் மேற்கொண்ட செயல் பழுதுபட்டபோது மனந்தளராமையும் அறிஞர்கள் கண்ட முடிபாகும்.

## 148. சால்பு - 4

637 **கொ**ல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு 984 99 4

தவம் என்பது கொல்லாமை. சால்பு என்பது பிறர் குற்றத்தைச் சொல்லாமையாம்.

638 **இ**ன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு 987 99 7

தமக்குத் தீமை செய்தார்க்கும் நன்மை செய்யாதபோது சால்பினல் பயனில்லை.

639 **ஊ**னைக் குறித்த உயிர்எல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு 1013 102 3

உயிர்கள் உடம்பைச் சார்பாகக் கொண்டது. சால்பு நாணத்தைச் சார்பாகக் கொண்டதாம்.

640 **இ**டமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு 1064 107 4

வறுமை நிலையினும் பிறரிடம் யாசிக்காத நிலை, எல்லா உலகம் சேரினும் ஒப்பாகாது.

## 149. சிதைக்கலாதார் – 1

641 உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்க லா தார் 880 88 10

தம்மோடு பகைப்பவர் செருக்கை அடக்காமல் அயர்ந்த அரசர், பின் தாமே அழிவர்.

## 150. சிறப்பு – 6

642 அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு 74 8 4

அன்புடையார் நண்பர் பலரைப் பெறுவார்.

643 அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு 75 8 5

அன்புடையார் இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் பெறுவார்.

644 இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு 630 63 10

ஒருவன் துன்பத்தை இன்பமாகக் கொள்ளில் பகைவர்களாலும் மதிக்கப்படுவான்.

645 இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு 752 76 2

பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர். தீயவராயினும் பொருளுடையவரை அனைவரும் போற்றுவர்.

646 ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு 1012 102 2

ஊணும் உடையும் உறக்கமும் காமமும் மாந்தர்களுக்குப் பொதுவாகும். நாணம் மேன்மக்களுக்குரிய சிறப்பாகும்.

647 எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு 1208 121 8

தம்மை யான் எவ்வளவு நினைந்தாலும் சினம் கொள்ளார். அதுவே எனக்கு அவர் செய்யும் இன்பமாம்.

## 151. சிறிது – 2

648 **அ**ச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது 1075 108 5

கீழ்மக்களிடம் பயத்தினுல் ஒழுக்கம் காணப்படும். இன்றேல் ஆசையினுல் சிறிது காணலாம்.

649 **பு**ல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது 1301 131 1

நீ சிறிது ஊடினுல் தலைவரின் துன்பம் காண்போம். ஆதலால் விரைந்து அவரை அணையாமல் சிறிது பிணங்கு (தோழி கூற்று).

## 152. சினம் – 1

650 **த**ன்னைத்தான் காக்கில் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் 305 31 5

ஒருவன் தன்னைத் துன்பமடையாது காக்க விரும்பினுல் கோபத்தையடக்கவேண்டும். இல்லையேல் கோபம் கொடிய துன்பங்களை உண்டாக்கும்.

## 153. சுடும் – 4

651 **த**ன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் 293 30 3

ஒருவன் தன் மனமறியப் பொய்யை விடவேண்டும். இல்லையேல் அவன் மனமே வருத்தும்.

652 **சி**னம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும் 306 31 6

கோபமாகிய நெருப்பு தன்னைச் சுடுவதுடன் துணையானவர்களையும் நீக்கிவிடும்.

653 **கெ**டுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும் 799 80 9

ஒருவன் வறுமையுற்றபோது கைவிடுவார் முன் அவனுடன் செய்த நட்பினை ஒருவன் எமவேதனை காலத்தில் நினைத்தாலும் அது அவன் உள்ளத்தை வருத்தும்.

654 **ம**றப்பின் எவன்ஆவன் மன்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும் 1207 121 7

அந்நாள் இன்பத்தை மறக்காமல் நினைக்கவும் பிரிவால் வருந்துகிறேன். மறப்பின் இறத்தலையன்றி வாழ்வது எங்ஙனம்.

## 154. சூது – 1

655 **பொ**ருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்
அல்லல் உழப்பிக்கும் சூது 938 94 8 [கெடுத்து

சூதானது, பொருளை அழித்து பொய் சொல்ல வைத்து துன்பத்தையும் அடையச் செய்யும்.

## 155. செயல் – 22

656 **ஒ**ல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல் 33 4 3

மக்கள் இயன்றவரை தருமத்தை வாய்க்கும் வழிகளி லெலலாம் செய்க.

657 **த**ந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் 67 7 7

அறிஞர் சபையில் முதலிடம் பெறக்கூடியவனாக ஆக்கு வதே தந்தை மகனுக்குச் செய்யக்கூடிய கடமையாகும்.

658 **இ**ன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல் 316 32 6

துன்பம் எனத் தெரிந்ததை பிற உயிர்களுக்குச் செய் யாதே.

659 **த**ன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்உயிர்க்கு இன்னா செயல் 318 32 8

பிறர் செய்யும் தீமைகள் தனக்குத் துன்பம் என்பதை அறிந்தும் பிற உயிர்களுக்குத்தான் தீமை ஏன் செய்தல் வேண்டும்.

660 **அ**ற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் 333 34 3

செல்வம் நிலையாதது. ஆனதால் உடனே நல்லறங் களைச் செய்தல் வேண்டும்.

661 **அ**ழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல் 461 47 1

ஒரு செயலால் அழிவதையும், பின் உண்டாவதையும், எதிர்காலப் பலனையும் எண்ணிப்பார்த்து நன்மை மிகுதி யாயின் அச்செயலைச் செய்க.

662 **வி**னைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் 471 48 1

காரியத்தின் வலிமையும், தன் வலிமையையும், பகைவன் வலிமையையும், துணைவரின் வலிமையையும் எண்ணிப் பார்த்து தன் வலிமை மிகுமேல் செய்க.

663 **எ**ய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல் 489 49 9

காலம் வாய்த்த உடனே தாம் செய்யக் கருதியதை முடித்தல் வேண்டும்.

664 **செ**ய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல் 516 52 6

ஒரு காரியத்தை செய்பவன், காரியம், காலம் இவைகள் பொருந்த ஒருவனை, காரியத்தில் ஈடுபடுத்தல் வேண்டும்.

665 **வி**னைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல் 518 52 8

காரியம் செய்தற்கு உரியவனாகக் கொண்ட பிறகு அரசன் அவனைப் பெருமைப் படுத்துக

666 **செ**யற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் 637 64 7

காரியத்தை நூல் வழியாக அறிந்தாலும உலக நடைமுறையோடு பொருந்துமாறு செய்க

667 **சொ**ல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் 664 67 4

இச்செயலை செய்வோம் என்பது யார்க்கும் எளிது. சொல்லியபடி முடிப்பது அரிது.

668 **க**லங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல் 668 67 8

துணிந்த காரியத்தை தாமதமின்றிச் செய்து முடிக்க.

669 **ஒ**ல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல் 673 68 3

முடிந்தபோது போர் செய்தல் நல்லது. முடியாதபோது ஏற்ற உபாயங்களைக் கொள்ளல் நல்லது.

670 **பொ**ருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் 675 68 5

ஒரு காரியம் செய்யும்போது, பொருள், கருவி, காலம், காரியம், இடம் இவைகளை எண்ணிப்பார்த்துச் செய்க.

671 **மு**டிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் 676 68 6

காரியம் செய்கையில், முயற்சியும், துன்பமும், பயனும் எண்ணிப்பார்த்துச் செய்க.

672 **பே**தைமை யுள்எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல் 832 84 2

தனக்கு ஆகாத நடைமுறையை விரும்புவது மிக்க அறியாமையாம்.

673 **கூ**ற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல் 894 90 4

எல்லா வலியும் உடையார்க்கு வலி இல்லாதவன் தீமை செய்தல் இயமனை அறைகூவி அழைப்பது போலாம்.

674 **இ**ல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல் 905 91 5

மனைவிக்குப் பயப்படுபவன் நல்லவர்க்கு நல்லன செய்தற்கும் பயப்படுவான்.

675 **நோ**ய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் 948 95 8

மருத்துவன் நோயாளியின் குறிகளால் நோயைத் தெரிந்து, அதன் காரணம் தெரிந்து, தீர்க்கும் வழியையும் தெரிந்து அதனைப் பொருந்தச் செய்க.

676 **உ**ற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் 949 95 9

மருத்துவன் பிணியாள் அளவையும், காலத்தையும், பிணியின் அளவையும் தெரிந்து சிகிச்சை செய்தல் வேண்டும்.

677 **பெ**ருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் 975 98 5

தாம் வறியவரானபோதும் பெருமையுடையவர், அரிய செயல்களைச் செம்மையாகச் செய்வார்கள்.

## 156. செயற்கு – 1

678 **ந**ல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு 375 38 5

முன் வினைப்பயனால் செல்வம் சேர்க்கும் ஒருவனுக்கு நல்லது தீயதுவாகவும், தீயது நல்லதுவாகவும் மாறிப் பயனளிக்கவும் கூடும்.

## 157. செயின் – 16

679 **கெ**டுவல்யான் என்பது அறிக தன்நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின் 116 12 6

நடுவு நிலைமை தவறியவன் நிச்சயமாகக் கெட்டுவிடுவான்

680 **வா**ணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் 120 12 10

நடுவு நிலைமை தவறாத வணிகருக்கே நல்ல வாணிகம் நடைபெறும்.

681 **அ**ஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் 175 18 5

பிறர் பொருளை விரும்புவர், நுணுகிப் பரந்த அறிவுடையராயினும் சிறப்பிலர்

682 **அ**ருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின் 483 49 3

உரிய முறைகளையும் காலத்தையும் அறிந்து செய்தால் எல்லாம் கைகூடும்.

683 **ஞா**லம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின் 484 49 4

காலமும் இடமும் அறிந்து முயன்றால் இவ்வுலகத்தையும் கூட ஒருவன் பெறக்கூடும்.

684 **ஆ**ற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின் 493 50 3

ஏற்ற இடத்தை அறிந்து தம்மைக் காத்துப் போர் செய்தால் வலிமையில்லாதாரும் வலிமை பெற்றுப் பகைவரை வெல்வர்.

685 எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் 494 50 4

போர்மேற் சென்றவர், பாதுகாவலான இடத்தை அறிந்து போரிட்டால் வெல்லக் கருதிய பகைவர் தோல்வியுறுவர்.

686 அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின் 497 50 7

ஆவன அறிந்து ஏற்ற இடத்தில் போரிடும் அரசருக்கு மன உறுதியன்றி வேறு துணை வேண்டாம்.

687 அரியவென்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின் 537 54 7

மறதியில்லாத மனத்தோடு ஆராய்ந்து செய்பவனுக்கு ஆகாத காரியம் இல்லை.

688 இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் 547 55 7

உலகைக் காக்கக்கூடிய அரசனைக் காப்பது அவன் செங்கோல் முறையே.

689 விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின் 804 81 4

ஒருவர் நட்பினால் கேளாது செய்தால் நல்லதே என்று விரும்புவர் அறிவுடையார்.

690 பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின் 805 81 5

தாம் வெறுப்பதை நண்பர் செய்வாராயின் அதற்குக் காரணம் அறியாமை என்றாவது உரிமை மிகுதி என்றாவது கொள்ளல் வேண்டும்.

691 கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின் 808 81 8

நண்பர் செய்த பிழையைத் தாமாகவேனும் பிறர் சொல்லியாயினும் மனத்துக்கொள்ளாத உரிமையுடையார்க்கு அந்நண்பர் கேடு செய்யும் நாளே நல்ல நாளாகும்.

692 நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின் 881 89 1

நிழலும் நீரும் நோய் செய்வனவாயின் தீமையாம். அதுபோலத் தீமை செய்யக்கூடிய உறவினர் கெட்டவராவார்.

693 குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் 965 97 5

குடிப்பிறப்பினால் மலைபோல் உயர்ந்தவரும் இழி செய்கைகளை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் பெருமை குறைவர்.

694 நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின் 1257 126 7

நம் காதலர் வந்து நாம் விரும்பிய கலவிகளைச் செய்யும் போது நாணமும் துறந்து நின்றோம்.

## 158. செய்கலாதார் – 1

695 செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் 26 3 6

பிறர் செய்யக்கூடாதனவாகிய செயல்களைச் செய்பவர் பெரியார் அத்தகையவற்றைச் செய்ய முடியாதவர் சிறியார்.

## 159. செருக்கு – 8

696 இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு 180 18 10

பிறன் பொருளை விரும்புவது அழிவு ஆகும். விரும்பாமை வெற்றியாகும்.

697 தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு 201 21 1

கொடியவர் பாவத்திற்கு அஞ்சார், நல்லவர் அஞ்சுவார்.

698 உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு 598 60 8

ஊக்கம் இல்லாதவர் யாம் ஈகைக் குணம் உடையேம் என்னும் பெருமிதம் அடையார்.

699 தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு 613 62 3

எல்லாருக்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு முயற்சி உடையாரிடம் அமைந்தது.

700 வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு 844 85 4

பேரறிவுடையேம் என்று தம்மைத் தானே மதிக்கும் மயக்கம் சிற்றறிவுடைமையாகும்.

701 இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்
நன்னயம் என்னும் செருக்கு 860 86 10

ஒருவனுக்கு மாறுபட்ட குணத்தினால் துன்பமும், நட்பினால் நீதி என்னும் செல்வமும் உண்டாகும்.

702 வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு 878 88 8

போர் வகையைத் தெரிந்து தன்னைப் பெருக்கிக் காக்கவே, பகைவன் செருக்கு அழியும்.

703 வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு 1193 120 3

தாம் விரும்பும் கணவர் தம்மை விரும்பப்பெற்ற மகளிர்க்கே. அவர் பிரிந்தபோதும் விரைவில் வருவார் என்ற நம்பிக்கையால் செருக்கி வாழும் வாழ்க்கை உள தாகும்.

## 160. செலல் – 1

704 கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல் 1293 130 3

மனமே, நீ என்னிடம் நில்லாது அவர் பின் செல்லும் காரணம், கெட்டவர்க்கு நண்பர் இல்லை என்னும் நினைப்போ ?

## 161. செவி – 1

705 கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி 418 42 8

கேள்வியினால் துளைக்கப்படாத காதுகள், ஓசையைக் கேட்பினும் செவிட்டுக் காதுகளேயாம்.

## 162. செவிக்கு – 2

706 மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு 65 7 5

பிள்ளைகள் தம் உடலினைத் தொடுதல் பெற்றோர் உடலுக்கின்பம். அவர் சொல்லினைக் கேட்டல் செவிக்கு இன்பமாம்.

707 நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு 1199 120 9

காதலர் என்னிடம் அன்பிலாராயினும் அவரைப்பற்றிய பேச்சு இன்பம் தருவனவாகும்.

## 163. செறிவு – 1

708 நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு 715 72 5

சிறந்த அறிவுடையார், சபையில் முற்பட்டுப் பேசா திருத்தல் நல்ல குணமாகும்.

## 164. செறின் – 2

709 வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின் 897 90 7

சபிக்கவும் அருளவும் வல்ல பெரியார் கோபித்தால் அரசன் ஆட்சியும் பொருளும் போம்.

710 இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் 900 90 10

தவத்தினர் கோபத்திற்கு எவ்வித துணையுடையவரும் தப்ப முடியாது.

## 165. சென்று – 1

711 பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று 753 76 3

பொருள் என்னும் விளக்கு எண்ணிய இடத்தில் சென்று பகையாகிய இருளை அறுக்கும்.

## 166. சேராதார் – 1

712 பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் 10 1 10

ஆண்டவன் திருவடிகளை மனத்தாற் பற்றுபவர் பிறவிக் கடலைக் கடப்பார். ஏனையோர் கடக்கமாட்டார்.

## 167. சொலல் – 3

713 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல் 139 14 9

ஒழுக்கம் உடையவர் வாயில் தவறியும் கெட்ட சொல் வராது.

714 வாய்மைஎனப் படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் 291 30 1

பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காத சொற்களைச் சொல்லுதலே உண்மை சொல்லுதலாகும்.

OFFICE OF THE ... ARCHAEOLOGY
4815
4 JUN 1975

715 **கு**றிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் 696 70 6

அரசனிடம் ஒன்றைச் சொல்ல விரும்புவார், அவன் மனக்குறிப்பை அறிந்து, காலம் பார்த்து விரும்புவனவாகச் சொல்லல் வேண்டும்.

## 168. சொலின் – 2

716 **அ**ல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் 96 10 6

இன்சொல் பேசினால் பாவம் குறைந்து புண்ணியம் பெருகும்.

717 **சீ**ர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை உடையார் சொலின் 195 20 5

மேன்மக்கள் பயனற்ற சொற்களைப் பேசினால் புகழும் பெருமையும் போகும்.

## 169. சொல் – 10

718 **ம**கன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல் 70 7 10

இம்மகனைப் பெறுதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்னும் சொல்லை உண்டாக்குதலே மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகும்.

719 **இ**ன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் 91 10 1

உண்மை உணர்ந்த அறிஞர் கூறும் அன்பு மொழியே இன்சொல் ஆகும்.

720 **ந**யனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் 97 10 7

இன்சொல் ஒருவருக்கு நன்மையைத் தந்து எல்லா உதவிகளையும் உண்டாக்கும்.

721 **க**ண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல் 184 19 4

ஒருவன் எதிரில் அவன் குற்றத்தைச் சொல்லலாம். காணாதபோது சொல்லல் கூடாது.

722 **அ**ரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் 198 20 8

ஒன்றின் பயனை ஆராயும் அறிவுடையார் பயனில்லாச் சொற்களைச் சொல்லார்.

723 **சொ**ல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் 200 20 10

சொன்னாற் பயனோடு சொல். இல்லையேல் பேசாது விடுக.

724 **இ**ழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல் 415 42 5

வழுக்கும் நிலத்திற்கு ஊன்றுகோல் போல பெரியார் வாய்ச்சொல் வாழ்க்கைக்கு உதவும்.

725 **ம**னத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல் 453 46 3

மக்களுக்குப் பொது அறிவு மனப்பாங்கைப் பொறுத்தது. நல்லவன், கெட்டவன் என்னும் விசேட அறிவு சேரும் இனத்தைப்பொறுத்து உண்டாவது.

726 **கே**ட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் 643 65 3

எதிரிலிருந்து கேட்டவரை கவரக்கூடியதாய். பகைவரும் விரும்புவனவாய் பேசும் பேச்சே சிறந்த பேச்சாகும்.

727 **நி**லத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் 959 96 9

நிலத்தின் இயல்பை அதில் முளைத்த முளை காட்டும். குடிப்பிறப்பின் மேன்மையை அவர் வாய்ச்சொல் காட்டும்.

## 170. சொல்லாதார் – 2

728 **ப**ல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார் 728 73 8

நல்லவர் சபையில் நல்லதை அச்சத்தால் சொல்ல மாட்டாதவர் பல நூல் கற்றும் பயனில்லாதவர்.

729 **உ**ளரெனினும் இல்லாரோடு ஒப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார் 730 73 10

பயத்தால் தாம் கற்றவற்றை சபையில் சொல்ல முடியாதவர் இறந்தவரோடொப்பார்.

## 171. சொல்லுவார் – 2

730 **பு**ல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார் 719 72 9

நல்லவர் சபையில் நல்ல பொருளைத் திறமாகச்சொல்ல வல்லவர் புல்லவையில் மறந்தும் சொல்லாது விடுக.

731 கற்றருள் கற்றூர் எனப்படுவர் கற்றூர்முன்
கற்ற செலச்சொல்லு வார் 722 73 2

கற்றவர் சபையில் தாம் கற்றவற்றை அஞ்சாது சொல்லப்படுபவர் மதிக்கப்படுவார்.

## 172. சோர்வு – 3

732 இறந்த வெகுளியில் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு 531 54 1

மிக்க கோபத்தைக்காட்டிலும் அளவிறந்த மகிழ்ச்சியால் உண்டாகும் மறதி கொடியது.

733 ஆக்கமும் கேடும் அதனுல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு 642 65 2

ஒருவனுக்கு வாழ்வும் தாழ்வும் அவன் சொல்லால் உண்டாகும் ஆதலால் பிழைபடாமல் சொல்லைக் காத்தல் வேண்டும்.

734 கள்ளுண் ணுப் போழ்தில களித்தானைக் காணுங்கால்
உள்ளான் கொல் உண்டதன் சோர்வு 930 93 10

கள் உண்ணுதபோது உண்டவன் ஒருவனைக் காணில் அவன் நிலைமையிலிருந்து தான் உண்டபோது அடைந்த சோர்வும் இதுபோன்றதேயென்று எண்ணியறியான்போலும்.

## 173. தக – 1

735 கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக 391 40 1

கற்றற்குரிய நூல்களைக் குற்றமறக் கற்கக்கடவன். கற்ற பிறகு அக்கல்விக்கு ஏற்ப ஒழுகக் கடவன்,

## 174. தகைத்து – 2

736 எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து 125 13 5

அடக்கம் எல்லார்க்கும் நல்லது. செல்வமுடையார்க்கு அடக்கம் பெரும் சிறப்பாம்.

737 ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து 486 49 6

வலியுடைய அரசன் போர்மேற் செல்லாதது, ஆட்டுக்கடா பகைமேற் பாய பின்செல்லும் தன்மையை ஒத்தது.

## 175. தக்கதுடைத்து – 4

738 ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து 220 22 10

பிறருக்கு உதவுவதனால் ஏற்படும் வறுமை நிலையை ஒருவன் விரும்பிப் பெறல் வேண்டும்.

739 புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து 780 78 10

தம்மைக் காப்பவன் தம்மைக் குறித்துக் கண்ணீர் விட்டு வருந்துமாறு சாவும் சாவு, ஒரு வீரன் வரவேற்க வேண்டிய சாவாகும்.

740 பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்க துடைத்து 1018 102 8

பிறர் நாணத்தக்க செயலை ஒருவன் செய்வானாகில் அறம் அவனை விட்டு நீங்கும்.

741 கதுமெனத் தாம்நோக்கி தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து 1170 117 10

மனத்தைப்போல வேகமாய் காதலர் உள்ளவிடம் செல்லக்கூடுமாயில் கண்கள் வருந்தவேண்டியதில்லை.

## 176. தக்கனள் – 1

742 உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென் [னைப்
புல்லாள் புலத்தக் கனள் 1316 132 6

பிரிந்திருந்தபோது இடையறாது உன்னை நினைந்தேன் என்ற கருத்தில், உள்ளினேன் என்றேன். அதனை, மறந்து பின் நினைந்ததாகக்கொண்டு அணைய வந்தவள் பிணங்கினின்றாள்.

## 177. தந்து – 2

743 பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து 1089 109 9

பெண்மான் பார்வையும் நாணும் உடைய இவளுக்கு அழகு செய்ய பிற அணிகலன் ஏன் ?

744 சாயலும் நாணும் அவர்கொண்டார் கைமாறு
நோயும் பசலையும் தந்து 1183 119 3

தலைவர் என்னைப் பிரியும்போது காம நோயும் பசலையையும் தந்து என் மேனி அழகையும் நாணத்தையும் கொண்டு போனார்.

## 178. தம – 1

745 **ப**ரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம 376 38 6

வினைப்பயனால் ஆகாதவற்றை வருந்தினாலும் பெற முடியாது; தமக்குரியதை வீசியெறிந்தாலும் இழக்க முடியாது.

## 179. தரற்கு – 2

746 **இ**கல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு 859 86 9

ஒருவன் தனக்குச் செல்வம் வரும்போது மாறுபாடு கொள்ளான்; கேடு வருவதற்கான போது மாறுபாடு கொள்வான்.

747 **க**னவினால் உண்டாகும் காமம் நனவினால்
நல்காரை நாடித் தரற்கு 1214 122 4

நனவில் வந்து அன்பு செய்யாத காதலரைத் தேடிச் சென்றுகொண்டுவருவதால் கனவு எனக்கு இன்பம் தருவதாகின்றது.

## 180. தரும் – 33

748 **அ**ன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் 71 8 1

அன்பை மறைக்கமுடியாது. அன்புக்குரியவர்கள் துன்பம் கண்டபோது கண்ணீர் வெளிப்படுத்திவிடும்.

749 **சி**றுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் 98 10 8

இன்சொல் இம்மை, மறுமை இரண்டிலும் இன்பந் தரும்.

750 **ந**டுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும் 171 18 1

பிறர் பொருளை விரும்புவார் குலம் நாசமடைவதோடு பாவமும் விளையும்.

751 **பு**றங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும் 183 19 3

புறங்கூறி வாழ விரும்பாது ஒருவன் இறந்தால் அச்சாவு அவனை அறம் வழுவாத வீரனாக்கிச் சிறப்பைக் கொடுக்கும்.

752 **ப**ற்றற்றேம் என்பார் படிற்றெழுக்கம் ஏற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும் 275 28 5

பற்று விட்டேம் என்னும் வஞ்சகத் துறவிகளின் தீய ஒழுக்கம் பிறகு துன்பம் தரும்.

753 **க**ளவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும் 284 29 4

பிறர் பொருளை வஞ்சிக்கவேண்டும் என்னும் விருப்பம் முடிவில் தீராத் துன்பமாகும்.

754 **பொ**ய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும் 296 30 6

பொய் சொல்லாமையாகிய அறத்தைப்போல இம்மையில் புகழ் தரக்கூடியது வேறு இல்லை; அது மறுமைக்கு வேண்டிய புண்ணியத்தையும் கொடுக்கும்.

755 **செ**ய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும் 313 32 3

தாம் ஒரு தீமையும் செய்யாதிருந்து தம்மீது பகை கொண்டவர்க்கும் தீமையைச் செய்வது துறவிக்கும் பெருந் துன்பமாம்.

756 **அ**றவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும் 321 33 1

கொல்லாமையே தலைசிறந்த அறமாகும்; கொலைப் பாவம் கொடியது.

757 **ஆ**ரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் 370 37 10

ஆசை நீங்கினால் ஒருவனுக்கு மாறுபாடற்ற உண்மை நிலை (கடவுள் நிலை)யைக் கொடுக்கும்.

758 **எ**னைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் 416 42 6

ஒருவன் சிறிதளவு நல்ல கேள்வியறிவைப் பெற்றிருப்பினும் பெரும் பயனைத் தரும்.

759 **ம**னநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் 457 46 7

மக்களுக்கு மனநலம் செல்வத்தைக் கொடுக்கும்; இனநலம் புகழைக் கொடுக்கும்.

760 முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும் 492 50 2

மிக்க வலியுடையவர்க்கும் காவலோடு கூடிய இடம் பெரு நன்மையைக் கொடுக்கும்.

761 காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும் 507 51 7

அன்பினுல் தகுதியில்லாதாரை அரசன் தேர்ந்தெடுத்தால் அறிவிலி என்ற பட்டம் கிடைக்கும்.

762 விருப்பறுச் சுற்றம் இயையின் அருப்பறு
ஆக்கம் பலவும் தரும் 522 53 2

எக்காலத்தும் அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்கு வாய்த்தால் செல்வங்கள் பெருகும்.

763 அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் 611 62 1

நாம் இக்காரியத்தை முடித்தல் அருமை என்று தளராமை வேண்டும். முடித்தற்கேற்ற பெருமையை முயற்சி உண்டாக்கும்.

764 தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் 619 62 9

முயன்ற காரியம் விதி வலியால் எண்ணிய பலனைத் தராவிடினும் முயற்சி வருத்தத்தின் அளவு பயன் தரும்.

765 துணைநலம் ஆக்கம் தரும் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும் 651 66 1

ஒருவனுக்குத் துணையிருக்குமாயின் செல்வத்தைக் கொடுக்கும்; செயல் நல்லதாயின் எல்லாச் சிறப்பையும் கொடுக்கும்.

766 கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும் 658 66 8

அறிஞர்கள் ஆகாது என விலக்கிய செயல்களைச் செய்வார்க்கு செயல் முடிந்தாலும் முடிவில் துன்பத்தையே கொடுக்கும்.

767 கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்
ஏற்று விழுமம் தரும் 663 67 3 [கின்

மேற்கொண்ட காரியம் முடிந்தபின் பிறருக்குத் தெரிய வேண்டுமேதவிர இடையில் தெரிந்தால் துன்பமுண்டாகும்.

768 மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கம் தரும் 692 70 2

அரசர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பககூடாது. அரசரைச் சேர்ந்தார்க்கு அதுதான் நிலையான செல்வமாகும்.

769 பழையம் எனக்கருதிப் பண்பலல செய்யும்
கெழுதகைமை கேடு தரும 700 70 10

அரசனுக்கு நாம் மிகப் பழக்கம் உடையேம் என நினைத்து தகுதியற்ற காரியம் செய்தால் கேட்டினை உண்டாக்கும்.

770 புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் 785 79 5

ஒருவனோடு ஒருவன் நட்பாவதற்குச் சேர்ந்து பழக வேண்டியதில்லை. ஒத்த உணர்ச்சியே நட்புரிமையை உண்டாக்கும்.

771 ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் 792 80 2

ஒருவன் குணம் செயல் முதலிய ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன் துன்பமடைவான்.

772 கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் 845 85 5

அற்ப அறிவினர் கற்றவர் போலக் காட்டி ஒழுகுதல் அவர் நன்கு கற்றதிலும் பிறர்க்கு ஐயத்தை உண்டாக்கும்.

773 இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும் 853 86 3

மாறுபாடான நோயை விலக்கில் அஃது அவனுக்கு அழியாத புகழைக் கொடுக்கும்.

774 மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும் 884 89 4

மனத்தில் நல்லெண்ணம் இல்லாத உட்பகை, அவன் சுற்றத்தை சேரவொட்டாத குற்றமாம்.

775 உறல்முறையான் உட்பகை தோன்றில் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும் 885 89 5

உறவுமுறை பாராட்டும் உட்பகை, அவனுக்கு சாவுக் கேதுவாகிய குற்றமுண்டாக்கும்.

776 இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும் 903 91 3

மனைவியிடம் பணிதற்குரிய அச்சம், நல்லவர்கள் முன் னிலையில் வெட்கத்தை உண்டாக்கும்.

777 பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும் 902 91 2

பெண்மைக்கு அடங்குபவன் செல்வம், மற்றவர்கட் கும் தனக்கும் நாணத்தை உண்டாக்கும்.

778 அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும் 911 92 1

அன்பில்லாமல் பொருளுக்காக ஒருவனை விரும்பும் வேசையர் இன்சொல் குற்றமாம்.

779 இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும் 1044 105 4

நல்ல குடியிற் பிறந்தவரையும், வறுமைநிலை, இழிவான சொற்களைக் கூறச் செய்யும்.

780 காத்தலும் ஆற்றேன் இந்நோயை நோய்செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும் 1162 117 2

இக் காம நோயை மறைத்தலும் வலியிலேன்; நோய் செய்தவர்க்கு தூதுவிடவும் நாணுகின்றேன்; என்செய்வேன்?

## 181. தலை – 21

781 கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை 9 1 9

இறைவனை வணங்காத தலை பயனற்றதாகும்

782 தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்
ஐம்புலத்தா றோம்பல் தலை 43 5 3 [ருங்கு

பிதுரராம் பேரறிவினர், கடவுளர், விருந்தினர், உறவி னர், தான் என்ற ஐந்து பிரிவினரையும் போற்றுதல் இல்வாழ் வான் கடமையாகும்.

783 இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை 47 5 7

உரிய முறையில் இல்வாழ்க்கை நடத்தினால் மேல்நிலை அடைய முயல்பவர்களைவிடச் சிறந்தவனாவான். (துற வுடையார்)

784 சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை 57 6 7

பெண்களைச் சிறை செய்து காப்பதில் பயனில்லை; அவர் தம் மன உறுதியால் காப்பதுவே சிறந்தது.

785 அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை 151 16 1

தம்மை இகழுபவர்களையும் பொறுத்துக்கொள்ளும் குணம் சிறந்த குணமாம்

786 மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானம்செய் வாரில் தலை 295 30 5

தம் மனமறிய உண்மை கூறுபவன், தவம், தானம் செய்பவரினும் சிறந்தவனும்.

787 எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணுசெய் யாமை தலை 317 32 7

தம் மனமறிய ஒரு தீமையை சிறிதளவும் யார்க்கும் செய்யாமலிருத்தல் சிறந்த அறமாம்.

788 பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை 322 33 2

பசித்த உயிர்களுக்கு உணவைப் பங்கிட்டு உண்டு, எல்லா உயிர்களையும் கொல்லாது காத்தல் சிறந்த அறமாகும்.

789 நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை 325 33 5

பிறப்பிற்குப் பயந்து துறந்தவர்களுள், கொல்லா அறத்தை மேற்கொண்டவன் சிறந்தவனுவான்.

790 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை 411 42 1

கேள்விச் செல்வமே ஒருவன் அடையவேண்டிய செல்வங்களுள் சிறந்ததாம்.

791 தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை 444 45 4

பெரியவர்கள் வழிநின்று நடத்தல் ஒருவர்க்குப் பெரு வலிமையாம்.

792 செறுநரைக் காணில் சுமக்க இறுவரை
காணில் கிழக்காம் தலை 488 49 8

பகைவரை வெல்லல் வேண்டுமாயில் அவர் காலம் முடியும் வரை பணிக; அதனால் அவர் காலம் வந்தபோது தலைகீழாவார்.

793 ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ஓடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை 579 58 9

தம்மைத் தண்டிப்பவர் குற்றம் செய்தபோதும், தாம் அவர் குறறத்தைப் பொறுத்துக்கொள்ளும் தாட்சண்யமே சிறந்ததாகும்.

794 பழிமலைந்து எய்திய ஆக்கத்தில் சான்றோர்
கழிநல் குரவே தலை 657 66 7

பழிப்பினால் கீழ்மக்கள் பெற்ற செல்வத்தைவிட பழிப்பில்லாத மேன்மக்கள் அடைந்துள்ள வறுமை நிலையே சிறந்ததாம்.

795 கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை 687 69 7

அயல் அரசரிடம் தான் நடந்துகொள்ளவேண்டிய முறைமையறிந்து சந்தர்ப்பமும் இடமும் தெரிந்து சொல்ல வேண்டியதை ஆராய்ந்து சொல்லுபவனே தூதருள் சிறந்தவன்.

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை 736 74 6

பகைவரால் கெடாததாய் ஒருக்கால் கெட்டாலும் வளமுடையதாகும் நாடே சிறந்தது.

797 உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை 761 77 1

யானை முதலிய நால்வகை உறுப்புக்களும் நிறைந்து போரில் துன்பத்து அஞ்சாது நின்று வெல்லும்படை அரசன் சிறந்த செல்வமாம்.

798 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரில் தனிமை தலை 814 82 4

போர் வராதபோது தாங்குவது போன்று இருந்து போர்வந்தவிடத்து களத்தில் வீழ்த்திச் செல்லும். கல்வியில்லாத குதிரைபோல்வாரது நட்பைக்காட்டிலும் தனிமையே சிறந்தது ஆம்.

799 பகல் கருதிப் பற்ரு செயினும் இகல்கருதி
இன்ஞ செய்யாமை தலை 852 86 2

தம்முடன் கூடாததால் வெறுக்கும் செயல்களை ஒருவன் செய்தாலும் தாம் மாறுபட்டுத் தீமை செய்யாதது நல்லது.

800 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை 891 90 1

வல்லவர் வலிமையை அவமதிக்காதது தம்மைக் காத்துக்கொள்ளும் காவலைக்காட்டிலும் சிறந்தது.

801 சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை 1031 104 1

வருத்தத்தைக் கருதி வேறு தொழில்களைச் செய்து திரிந்தாலும் முடிவில் உலகம் உழவரையே அடுப்பதாகும் அதனுல உழவுத் தொழிலே உலகில் சிறந்தது

## 182. தவம் – 2

802 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் 263 27 3

துறவிகளைப் போற்றும் கடமையைச் செய்ய மற்றவர் தவத்தை மேற்கொள்ளவில்லை போலும் ?

803 அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம் 842 85 2

அறிவிலாதவன் மற்றவனுக்கு ஒன்றை மனமகிழ்ந்து கொடுத்தல் பெறுகின்றவன் தவப்பயனேயாகும்.

## 183. தவறு – 1

804 அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு 1154 116 4

அன்புசெய்து அஞ்சாதே என்றவர் பிரிந்து செல்லில் அதனுல் அவர் சொல்லை நம்பினவருக்குக்குற்றம் உண்டோ?

## 184. தனக்கு – 1

805 அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு 847 85 7

அரிய உபதேசத்தைக் கொள்ளாத சிற்றறிவினன் தனக்குத்தானே துன்பம் உண்டாக்கிக்கொள்வான்.

## 185. தாய் – 1

806 **ஈ**ன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் 69 7 9

தன் மகனை நல்லவன் என்று பிறர் கூறக் கேட்ட தாய் அவனைப் பெற்றபோது கொண்ட மகிழ்ச்சியைவிடப் பெரு மகிழ்ச்சியடைவாள்.

## 186. தார்க்கு – 1

807 **நா**ண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு 924 93 4

கள்ளுண்ணும் பெருங் குற்றமுடையாரைக் காண நாணம் என்னும் மகள் அஞ்சுவாள்.

## 187. தால் – 1

808 **அ**லர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால் 1141 115 1

இவளுக்கும் எனக்கும் உள்ள நட்புப்பற்றி ஊரில் பேச்சு உண்டாதலால் என்உயிர் நிலைபெறுகின்றது. அதனைப் பிறர் அறியார்.

## 188. தாழ்வு 1

809 **கெ**டுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு 117 12 7

நடுவு நிலைமையுடையவன் வறுமையை, அறிஞர்கள் வறுமையாக் கொள்ளார்.

## 189. தான் – 1

810 **தீ**ப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல் வேண்டா தான் 206 21 6

பிறனுக்குத் துன்பம் செய்யாதவன் பிறரால் துன்புறுத்தப்படமாட்டான்.

## 190. திரு – 5

811 **அ**றனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு 179 18 9

பிறன் பொருளை விரும்பாதானிடம் செல்வம் தானே சேரும்.

812 **ஊ**ருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு 215 22 5

பிறருக்கு உதவுபவனுடைய செல்வம் ஊர்க்குளத்தில் நீர் நிறைந்திருப்பது போலாம்.

813 **ந**ல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு 408 41 8

கற்றவர்களிடத்து வந்த வறுமையைவிட கல்லாதவரிடம் வந்த செல்வம் மிகக் கொடியது.

814 **வி**னைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு 519 52 9

*தன் காரியம் செய்யும் ஒருவன் தன்னிடத்துப் பாராட்டும் உரிமையை வேறாக நினைப்பவனைவிட்டுத் திருமகள் நீங்குவாள்.*

815 **இ**னத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறில் சிறுகும் திரு 568 57 8

*ஒரு காரியத்தை அமைச்சருடன் கூடி ஆராய்ந்து செய்யாது காரியம் தப்பியபோது அவரைக் கோபிக்கும் அரசன் செல்வம் சுருங்கும்.*

## 191. தினல் – 1

816 **அ**ருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல் 254 26 4

*கொலைத் தொழில் அருளுக்கு மாறான செயல். ஊன் உண்ணுதல் பாவச்செயல்.*

## 192. தின்பவர்க்கு – 1

817 **பொ**ருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு 252 26 2

*போற்றிக் காவாதார் பொருளை இழப்பர்; ஊன் உண்பார் அருளை இழப்பார்.*

## 193. தீ – 1

818 **தொ**டில்சுடின் அல்லது காமநோய் போல
விடில்சுடல் ஆற்றுமோ தீ 1159 116 9

*நெருப்பு தொட்டால் சுடும்; காமநோய் விட்டாலும் சுடும்.*

## 194. தீது – 2

819 பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது 192 20 2

*நண்பர்களிடம் தீமை செய்வதைக்காட்டிலும் பலர் முன்னிலையில் பயனற்ற சொற்களைப் பேசுவது தீங்காகும்.*

820 சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது 671 68 1

*ஆராய்ச்சியின் முடிவு தெளிவான உறுதியைப் பெறுவதாகும். உறுதி பெற்றபின் காரியத்தைச் செய்யாமல் தாமதிப்பது குற்றமாகும்.*

## 195. துகில் – 1

821 கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில் 1087 109 7

*இந்நங்கையின் இளமுலைகளின்மேல் இட்ட ஆடை அவைகள் என்னைக் கொல்லாமற் காத்ததாதலின் அது யானையின்மீது இட்ட முகபடாத்தை ஒக்கும்.*

## 196. துணிவு – 2

822 ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு 21 3 1

*துறந்தவர்களின் பெருமையையே நூல்கள் உயர்ந்ததாகப் போற்றும்.*

823 பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு 533 54 3

*மறதி உள்ளவர்களுக்கு உலகத்திலே புகழ் இல்லை.*

## 197. துணை – 12

824 அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை 36 4 6

*உடல் அழியும்போது அழியாத உயிர்த்துணை தருமமேயாம்.*

825 இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை 41 5 1

*மாணவர், தவத்தர், துறவினர் மூவருக்கும் இல்வாழ்வான் துணை.*

826 அறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை 42 5 2

*துறந்தவர்கட்கும் ஏழைகட்கும் அனுதையாக இறந்தவர்கட்கும் இல்வாழ்வான் துணை.*

827 மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை 51 6 1

*நற்குண நற்செய்கை உடையவளாய், கணவன் வருவாயறிந்து செலவு செய்பவள் நன்மனைவியாவாள்.*

828 அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை 76 8 6

*நன்மை செய்யவும், தீமையை விலக்கவும், இரண்டிற்கும் அன்பே துணையாகும்.*

829 பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை 132 14 2

*ஒழுக்கமே உயிருக்குச் சிறந்த துணையாகும்.*

830 நல்லாற்ருன் நாடி அருளாள்க பல்லாற்ருன்
தேரினும் அஃதே துணை 242 25 2

*அருள் வழியையே ஒருவன் தனக்கு உரியதாகக் கொள்ளுக; அது உயிருக்குச் சிறந்த துணை.*

831 இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை 310 31 10

*கோபம் உடையவர் இறந்தவர்க்கும், கோபத்தை விட்டவர் சாவைத் தவிர்த்தவர்க்கும் சமமாம்.*

832 கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்ரும் துணை 414 42 4

*தான் கற்காவிடினும் கற்றறிந்தாரிடம் கேட்பானயில் அக்கேள்வி அவன் வாழ்க்கையில் பற்றுக்கோடாக நின்று துணைபுரியும்.*

833 அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை . 635 64 5

*அரசன் செய்தற்குரிய அறங்களை அறிந்து, கல்வி கேள்விகளிற் சிறந்த அமைச்சன் அரசனுக்குத் தக்க துணையாவான்.*

834 மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை 1168 117 8

*இவ்வுலகையெல்லாம் உறங்கச்செய்துவிட்டதால் இவ் இரவிற்கு என்னையன்றி வேறு துணையில்லை.*

835 புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை 1222 123 2

*மாலைப்பொழுதே, நீயும் துயர் அடைகிறாய்; நின் கணவர்போல அன்பில்லாதவரோ ?*

## 198. துப்பு – 1

836 அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு 862 87 2

*அன்பு, துணை, வலிமை இல்லாதவன் பகைவரை அழித்தல் எவ்வாறு கூடும் ?*

## 199. துயர் – 2

837 தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர் 1135 114 5

*மாலை நேரத்தின் துன்பத்தையும், மடல் ஊர்தலையும் முன் அறியேன்; இந்நங்கை அவற்றைத் தந்தாள்.*

838 செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர் 1256 126 6

*என்னை வெறுத்தார்பின் செல்லத் தூண்டுதலால் இக்காம நோய் மிக்க நல்லதாயது (கொடியது).*

## 200. தூண் – 2

839 இன்பம் விழைவான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண் 615 62 5

*தன் இன்பத்தை விரும்பாது காரியத்தை முடிப்பவன் உறவினரைத் தாங்கும் தூண்.*

840 அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் 983 99 3

*அன்பு, நாணம், ஒப்புரவு, தாட்சண்யம், உண்மை என்பன சால்பு என்னும் பாரத்தைத் தாங்கும் தூண்களாம்.*

## 201. தூது – 3

841 தொகச்சொல்லி தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது 685 69 5

*காரியங்களை முறைப்படுத்தி கடுஞ்சொலின்றி பிறர் மகிழச் சொல்லுபவன் தூதனாவான்.*

842 கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது 686 69 6

*நீதி நூல்களைக் கற்று பிறர் மனத்தில் பதியுமாறு கூறி மற்றவர் கோபத்துக்கு பயப்படாது காலத்திற்கேற்ப காரியம் முடிப்பவன் தூதனாவான்.*

843 இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது 690 69 10

*தன் உயிருக்கு முடிவு தருமாயினும் பயப்படாமல் தன் அரசனுக்குச் சிறப்புத் தருவனவற்றை அயல் அரசரிடம் சொல்லுபவனே தூதனாவான்.*

## 202. தெரிவார் – 1

844 தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் 104 11 4

*அறிஞர் பிறர் செய்த சிறிய உதவியையும் பெரிதாகப் பாராட்டுவார்.*

## 203. தெளிவு – 2

845 அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு 513 52 3

*அரசனிடம் அன்பும், அறிவும், தெளிவும், ஆசை இல்லாமையுமாகிய நான்கும் உடையவனையே அரசன நம்புதல் வேண்டும்.*

846 குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு 502 51 2

*உயர்குடியிற் பிறந்து குற்றம், பழிக்கு அஞ்சும் நாணம் உடையவனையே அரசன் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.*

## 204. தெறும் – 2

847 **வி**னைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் 674 68 4

*குறைவாக விடப்பட்ட காரியமும், அழிக்காது விட்ட பகையும் அவியாது விட்ட தீப்போலாம்.*

848 **உ**ட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும் 883 89 3

*உள்ளிருந்து பகைவராய் ஒழுகுவாரைக் குறிக் கொண்டு தன்னைக் காத்துக்கொள்க; இல்லையேல் தமக்குத் தளர்ச்சி வந்தபோது குயவன் மட்பாண்டத்தை அறுக்கும் கருவிபோலத் தம்மை அவர் கெடுப்பார்.*

## 205. தேற்றாதவர் – 1

849 **ப**கச்சொல்லி கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர் 187 19 7

*பிறர் மகிழப் பேசி எல்லாரையும் நண்பராக்கிக் கொள்ளும் இயல்பு தெரியாதவர் கோள்சொல்லி நண்பரைப் பிரிப்பார்.*

## 206. தொக்கு – 1

850 **இ**யல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு 545 55 5

*அரசன் முறைப்படி செங்கோல் செலுத்தில் பருவ மழையும் நல்ல விளைவும் உண்டாகும்.*

## 207. தொடர்பு – 7

851 **அ**ன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு 73 8 3

*அன்பு செய்தலே மக்கள் உடம்பு பெற்ற பயனும்.*

852 **ந**வில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு 783 79 3

*நற்குணமுடையார் நட்பு, படிக்குந்தோறும் இன்பம் தரும் நூலைப்போல் இன்பம் தரும்.*

853 **எ**ல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு 806 81 6

*நட்பின் முறை தெரிபவர், நண்பரால் பொருளழிவு செயலழிவு வரினும நட்பினை விடார்.*

854 **க**னவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு 819 82 9

*செயலும் சொல்லும் பொருந்தாது வேறுவேறாய் இருப்பவர் நட்பு கனவிலும் துன்பந்தரும்.*

855 **எ**னைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு 820 82 10

*தனியே மனையிடத்து இருந்தபோது நட்பு பாராட்டி பலர் முன்னிலையில் பழித்துப் பேசுபவர் நட்பை விடல் வேண்டும்.*

856 **வா**ள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு 882 89 2

*வெளிப்படையான பகைவர்களுக்கு அஞ்சாதே. உள்பகைவரின் நட்புக்கு அஞ்சு.*

857 **இ**ருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப்பட்டார் தொடர்பு 920 92 10

*வேசையர், கள், சூது இம்மூன்று தொடர்பால் திருமகள் நீங்கும்.*

## 208. தொழில் – 6

858 **உ**வப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் 394 40 4

*பிறர் மகிழுமாறு கூடி, அவர், எங்கனம் பிரிவது என்று எண்ணி வருந்துமாறு பிரிதல் கற்ற புலவர்க் குரிய செயல்.*

859 **அ**ஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் 428 43 8

*பழி பாவங்களுக்கு பயப்படாது செய்தல் அறிவில் லார் செயல். பயப்பட்டுத் தவிர்தல் அறிவுடையார் செய லாம.*

860 **கு**டிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் 549 55 9

*குடிகளைப் பிறர் துன்புறுத்தாது காப்பாற்றி குற்றம் கண்டபோது தண்டித்தல் அரசன் கடமை.*

861 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில் 582 59 2

எல்லாரிடத்தும் நாளும் நிகழ்வனவற்றை அவர் அறியாமல் தெரிந்துகொள்ளல் அரசன் தொழிலாம்.

862 நாணுமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில் 833 84 3

வெட்கம், ஆராய்ச்சி, அன்பு, கல்வி, ஒழுக்கம் இவைகளைப் போற்ருததது அறிவிலியின் தொழிலாம்.

863 காமம் எனஒன்ரே கண்இன்று என்நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில் 1252 126 2

நள்ளிரவிலும் என் மனம் வருத்துகிறது; இக் காமம் தாட்சண்யம் அற்ற ஒன்று.

## 209. தொழும் – 2

864 கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் 260 26 10

பிற உயிர்களைக் கொல்லாமலும் புலாலை உண்ணு மலும் உள்ளவனை எல்லா உயிரும் வணங்கும்.

865 தன்னுயிர் தானறப் பெற்ருனை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும் 268 27 8

தவம் செய்து தன் உயிரைத் தனக்கு உரியதாக்கிக் கொண்டவனை எல்லா உயிர்களும் வணங்கும்.

## 210. தோயாதார் – 1

866 நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்
பிறர்க்குரியாள் தோள் தோயாதார் 149 15 9

பிறன் மனைவியைக் கூடாதவரே உலகில் எல்லா நன்மைகளையும் பெறுவார்.

## 211. தோள் 7

867 தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள் 916 92 6

தம் கீழான இன்பத்தை விலை கொடுப்பாரிடம் பரப்பும் வேசையர் தோள்களை புகழாளர்கள் தீண்டார்.

868 **நி**றைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள் 917 92 7

*பொருள் கொடுப்பாரை விரும்பும் வேசையரை திருந்திய உள்ளம் இலாதவரே சேர்வர்.*

869 **வேட்ட** பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் 1105 111 5

*இனிபொருளால் எண்ணியபோது இன்ப முண்டாகுவது போல இந்நங்கையின் தோள்கள் எப்போது கூடினும் இன்பம் செயயும்.*

870 **உ**றுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் 1106 111 6

*வாடிய என் உயிர் தளிர்க்குமாறு தீண்டும் தன்மையில் இந்நங்கையின் தோள்கள் அமிழ்தத்தால் ஆனவையாம்.*

871 **த**ணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள் 1233 124 3

*பூரித்த நின் தோள்கள் இன்று காதலர் பிரிவை உரைப்பன போல மெலிந்தன.*

872 **ப**ணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் 1234 124 4

*காதலர் பிரிவால் வாடிய தோள்கள் மேலும் மெலிவடைந்து வளைகழல நின்றன.*

873 **கொடி**யார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள் 1235 124 5

*தலைவர் பிரிவுக்கொடுமையை வளைகழன்று தோள்கள் வெளிப்படுத்தின.*

## 212. நகும் - 6

874 **வ**ஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் 271 28 1

*துறவு நெறியில் நின்று தீய வழியில் ஒழுகுபவனை அவன் உடம்பால் அமைந்த பூதங்கள் சிரிக்கும்.*

875 கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் 774 78 4

*தன் கை வேலே யானைமீது எறிந்து பின் வந்த யானைக்கு உடம்பில் தைத்த வேலேப் பிடுங்கி மகிழ்வான்.*

876 இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் 1040 104 10

*யாம் வறுமை உடையேம் என்று சோம்பியிருப்பாரை நிலமகள் தனக்குள் சிரிப்பாள்.*

877 யான்நோக்கும் காலே நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் 1094 110 4

*யான் நோக்கும்போது தரையைப் பார்ப்பாள்; பாராதபோது என்னேப்பார்த்து சிரிப்பாள்.*

878 குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் 1095 110 5

*நேரே பாராது ஒரு கண்ணேச் சுருக்கிப் பார்த்து மகிழ்வாள்; ஆதலால் என்மேல் அன்புடையாள்.*

879 அசைஇயற்கு உண்டு ஆண்டோர் ஏஎர்யான்நோக்கப்
பசையினள் பைய நகும் 1098 110 8

*யான் பரிந்து நோக்கில், மகிழ்ந்து முறுவல் செய்வாள்; அது ஓர் குறிப்பினே உடையது.*

## 213. நகை – 1

880 அறனழீஇ அல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை 182 19 2

*தருமத்தை அழித்துப் பாவம் செய்வதைவிட புறங்கூறுதல் கொடுமையாம்.*

## 214. நசை – 2

881 தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை 1043 105 3

*வறுமை பழங்குடிப் பிறப்பையும் நற்சொல்லேயும் ஒருசேர அழிக்கும்.*

882 பிரிவுஉரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை 1156 116 6

*கூடியிருக்கும்போதே தம் பிரிவை சொல்லில் விரைந்து வந்து கூடுவர் என்னும் ஆசை வீணும்.*

## 215. நடை - 2

883 புகழ்புரிந் தில்லில்லோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை 59 6 9

*நன் மனைவியை இல்லாதார்க்கு பகைவர் முன் சிங்கம்போல் கம்பீர நடை இல்லை.*

884 அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை 1014 102 4

*மேன்மக்களுக்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃதில்லையேல் பெருமித நடை கண்டார்க்கு விருப்புறு வெறுப்பைத் தரும்.*

## 216. நட்பு - 15

885 மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு 106 11 6

*மாசிலாருறவை மறக்கலாகாது; ஆபத்தில்உதவியவருடைய நட்பை என்றும் விடலாகாது.*

886 எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு 107 11 7

*மேன்மக்கள், தம் துன்பத்தைப் போக்கியவர்களை ஏழேழ் பிறவிக்கும் மறக்கார்.*

887 குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு 338 34 8

*உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு, முட்டைக்கும் அதனுள் இருந்த பறவைக்கும் அமைந்த தொடர்பினை ஒக்கும்.*

888 நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு 782 79 2

*அறிவுடையார் நட்பு வளர்பிறைபோலும், அறிவிலார் நட்பு குறைபிறை போலுமாம்.*

889 முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு 786 79 6

*கண்டபோது முகத்தில் மலர்ச்சி காட்டுவது நட்பாகாது; மனமும் மலருமாறு அமைந்ததே நட்பு,*

890 அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு 787 79 7

*கேடுதரும் வழிகளிலிருந்து விலக்கி நல்வழியிற் செலுத்தி விதி வகையால் கேடு நேரும்போது உட னிருந்து அனுபவிப்பதே நட்பாம்.*

891 உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு 788 79 8

*சபையில் ஆடை குலைந்தவனுக்கு உடனே கை உதவி காப்பது போல நண்பனுக்கு துன்பம் வந்தபோது விரைந்து சென்று காப்பதே நட்பாகும்.*

892 இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு 790 79 10

*இவர் நம்மிடம் இவ்வளவு அன்புடையர், யாம் இவ ரிடம் இத்தன்மை உடையேம் என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து கூறினும் நட்பின் பெருமை குறையும்.*

893 குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு 793 80 3

*ஒருவன் குணம், குடிப்பிறப்பு, குற்றம், சுற்றம் எல்லாம் ஆராய்ந்து நட்புக்கொள்ளுக,*

894 குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு 794 80 4

*உயர்குடியில் பிறந்து பழிக்கு அஞ்சுபவனை சில பொருள் கொடுத்தாயினும் நட்புக்கொள்ளுக.*

895 உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு 798 80 8

*தன் மனக்கிளர்ச்சி குன்றுத செயல்களை செய்தல் வேண்டும். அதுபோல துன்பம் வந்தபோது கைவிடார் நட்பைக் கொள்ளல் வேண்டும்,*

896 மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு 800 80 10

*உலகுடன் ஒத்துக் குற்றமற்றவர் நட்பைக் கொள் ளுக; உலகுடன் ஒத்தல் இல்லார் நட்பை அவர் வேண் டியதொன்றைக் கொடுத்துத் தள்ளுக.*

897 பழமைஎனப் படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு 801 81 1

*பழமை பாராட்டும் இயல்பு பழகியவர் உரிமையால் செய்வனவற்றை ஒப்புக்கொள்ளுதல்.*

898 சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு 821 83 1

*மனத்தால் கூடாதே, தமக்கு வாய்ப்புக் கிடைத்த போது (கொல்லர் துண்டுசெய்யும் உலோகங்களைத் தாங்கும் கல்) பட்டடைக்கு ஒப்பாகும்.*

899 உடம்பொடு உயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு 1122 113 2

*உடம்புடன் கூடிய உயிரின் நட்புப்போல் இந் நங்கையுடன் கூடிய நட்பு.*

## 217. நணித்து – 1

900 இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து 856 86 6

*பிறரோடு மாறுபடுவதையே தனக்கு இனிதாகக் கொண்டவன் வாழ்க்கை சிறுமையுறுதலும் அழிதலும் விரைவில் பெறும்.*

## 218. நன்கு – 1

901 அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு 534 54 4

*மனத்தில் அச்சம் உடையார்க்குப் பாதுகாவலால் பயனில்லை. அதுபோல மறதி உடையார்க்குச் செல்வங்களால் பயனில்லை.*

## 219. நன்று – 15

902 அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று 49 5 9

*அறம் என்று சிறப்பித்துச் சொல்லுதற்குரியது இல்லறமேயாகும்.*

903 நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று 108 11 8

*பிறர் செய்த நன்மையை என்றும் மறத்தலாகாது. தீமையை உடனே மறந்துவிடவும்.*

904 **அ**றன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று 150 15 10

*ஒருவன் வேறு அறங்களைக் கடைப்பிடிக்காது விடினும் பிறன் மனைவியை விரும்பாத அறத்தைக் கடைப்பிடித்தல் மிகவும் நல்லது.*

905 **பொ**றுத்தல் இறப்பினை யென்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று 152 16 2

*பிறர் செய்த தீமையைப் பொறுப்பதைக் காட்டிலும் மறப்பது மேல்.*

906 **தி**றனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று 157 16 7

*தனக்குத் தீமை செய்தவர் மறுமையில் துன்பம் அடைவார்களே என்று வருந்துதல்வேண்டும். திருப்பித் தீமை செய்தல் கூடாது.*

907 **ந**யனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று 197 20 7

*மேன்மக்கள் நீதியற்றதை ஒருக்கால் சொன்னாலும் சொல்லுக; பயனற்றவை சொல்லல் ஆகாது.*

908 **ந**ல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று 222 23 2

*நல்லதானாலும் பிறரிடம் ஒன்று வாங்குவது கூடாது. தேவருலக இன்பம் இழக்க நேருமெனினும் கொடுப்பது நல்லது.*

909 **தோ**ன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று 236 24 6

*மக்களாய்ப் பிறந்தால் புகழுடன் வாழவேண்டும். புகழில்லார் பிறவாமையே நல்லது.*

910 **அ**விசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று 259 26 9

*கொலைக்காரணமாகிய யாகங்கள் ஆயிரம் செய்வதைவிட ஓர் உயிரைக் கொன்று தின்னாத அறம் உயர்ந்ததாகும்.*

911 பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று 297 30 7

*ஒருவன் பொய்யாமை என்னும் அறத்தைக் கடைப்பிடித்தால் வேறு அறம் செய்யவேண்டியதில்லை.*

912 இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று 308 31 8

*தீப்பந்தத்தால் சுடுவதை ஒத்த தீமையைச் செயினும் அவனைக் கோபிக்காதது நல்லது.*

913 ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று 323 33 3

*ஒப்பற்ற அறம் கொல்லாமை. அடுத்தபடியானது பொய்யாமையே யாகும்.*

914 எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று 655 66 5

*செய்தபிறகு வருந்தக்கூடிய செயல்களை செய்யாது ஒழிக. தவறிச் செய்தால் அதற்கு இரங்குவது ஒழிக.*

915 செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று 815 82 5

*துன்பத்தில் உதவி செய்யாத கீழ்மக்கள் நட்பைப் பெறுதலினும் பெறாமை நன்று.*

916 ஒட்டார்பின்சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று 967 97 7

*தன்னை இகழ்பவரை அடுத்துப் பொருள் பெற்று வாழ்வதிலும் இறத்தல் நல்லது.*

## 220. நாடு – 7

917 தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு 731 74 1

*உணவுப் பொருள்களை விளைவிப்போரும், பெரியவர்களும், செல்வரும் உடையதே நாடாம்.*

918 பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு 732 74 2

*மிக்க பொருளால் பிறநாட்டார் விரும்பக்கூடியதாகியும், எவ்வகைக் கேடுமின்றியும் நன்கு விளையக் கூடியது நாடாகும்.*

919 **பொ**றை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறை ஒருங்கு நேர்வது நாடு 733 74 3

*மற்ற நாடுகள் தாங்கவேண்டிய பாரங்களைத் தாங்க வேண்டிவந்தாலும் தாங்கி அரசனுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்கவல்லதே நாடாகும்.*

920 **உ**றுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு 734 74 4

*பெரும் பசியும், தீரா நோயும், பகையும் இல்லாமல் அமைந்தது நாடு ஆம்.*

921 **ப**ல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு

*கொள்கையால் மாறுபட்ட பல கூட்டமும் உட்பகையும், கொலைஞரும் இல்லாததே நாடாகும்.*

922 **நா**டென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு 739 74 9

*வருந்தாமல் செல்வம் தரக்கூடியதே நாடாகும், அல்லது நாடாகா.*

923 **ஆ**ங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு 740 74 10

*எல்லாக்குணமும் நிறைந்த நாடாயினும் அரசனோடு பொருந்தாதது பயன் அற்றது.*

## 221. நாணுபவர் – 2

924 **ப**டுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணுபவர் 172 18 2

*நடுவு நிலைமை தவறிய செயல்புரிதற்கு நாணும் அறிவுடையார் பிறர்பொருளை விரும்பார்.*

925 **தி**னைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணுவார் 433 44 3

*பழியைக்குறித்துப் பயப்படுபவர் தம்மிடத்து தினையளவு குற்றம் உண்டானாலும் அதன் பலனைப் பனையளவாகக் கொள்ளுவார்.*

## 222. நிரப்பு – 1

926 இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு 1048 105 8

*நேற்றுக்கொன்றது போன்ற வறுமைநிலை இன்று என்னிடம் வரக்கூடுமோ? வந்தால் என் செய்வேன்.*

## 223. நிலம் – 2

927 வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம் 239 24 9

*புகழ் இல்லாத மக்களைத்தாங்கும் நிலம் தன் வளத்தை இழக்கும்.*

928 காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் 386 39 6

*பிறர் தன்னைக் காண்பதற்கு எளியவனுகவும் கண்ட போது இன்சொல் கூறுபவனுகவும் உள்ள அரசன் உலக மக்களால் போற்றப்படுவான்.*

## 224. நிலத்து – 3

929 செவியுணவின் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்ருரோடு ஒப்பர் நிலத்து 413 42 3

*செவி உணவாகிய கேள்வியுடையவர் தேவர்களுக்குச் சமமாவர்.*

930 கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து 496 50 6

*நிலத்தில் ஓடும் தேர்கள் கடலில் ஓடாது, கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது (மாருன இடத்தில் வலிமை செல்லாது.)*

931 குன்றன்னுர் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னுர் மாய்வர் நிலத்து 898 90 8

*மலையை ஒத்த மாதவர் அழியவேண்டும் என்று நினைத்தால் நிலைபெற்ற செல்வமுடைய அரசரும் குடியோடு அழிவார்.*

## 225. நிலை – 4

932 **மு**தலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை 449 45 9

*முதற்பொருள் இல்லாத வணிகருக்கு இலாபம் இல்லை, பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலையான வாழ்க்கை இல்லை.*

933 **பு**கழ் இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை 966 97 6

*தன்னை அவமதிப்பவர் பின்சென்று நிற்கும் மான மற்ற நிலை ஒருவனுக்கு இவ்வுலகில் புகழ்தராது. மறுமையில் தேவர் உலகினும் செலுத்தாது.*

934 **ந**ட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை 789 79 9

*மாறுபாடில்லாது முடிந்தவரை உதவி செய்வதே நட்புக்குச் சிறப்பாம்.*

935 **உ**ழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை 1036 104 6

*பயிரிடுவார்கை அதனைச் செய்யாது நின்றால் உணவைவிரும்புவதையும் விட்ட துறவிகளுக்கும் அத்துறவு நிலை வாய்ப்பது அரிது.*

## 226. நிறுத்து – 2

936 **நோ**ன உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து 1132 114 2

*காம இன்பம் பெருமையால் உடம்பும் உயிரும் மடல் ஏறக்கருதுகின்றன.*

937 **பெ**யலாற்றா நீர்உலந்த உண்கண் உயலாற்றா
உய்வில் நோய் என்கண் நிறுத்து 1174 118 4

*இக்கண்கள் எனக்குத் துன்பைத் தந்து தானும் நீர்வற்றப்பெற்றன.*

## 227. நினைந்து – 1

938 **வி**ளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்றநினைந்து 1209 121 9

*நாம் இருவரும் வேறல்லர் என முன் கூறியவரது அன்பு இல்லாததால் உயிர் வருந்துகின்றது.*

## 228. நீடுவாழ்வார் – 2

939 **ம**லர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் 3 1 3

*இறைவன் திருவடிகளை இடையறாது நினைப்போர் உலகில் நீடூழி வாழ்வார்.*

940 **பொ**றிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார் 6 1 6

*இறைவன் அருள்பெற்றவர் விதித்த முறையில் ஒழுகி வாழ்வார்கள்.*

## 229. நீர் – 2

941 **நோ**க்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர் 1093 110 3

*யான்பாராதபோது பார்த்துத் தலைகுனிந்தாள் அது எங்கள் அன்புப் பயிரை வளர்த்த நீர்போலும்.*

942 **பா**லொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வா லெயிறு ஊறிய நீர் 1121 113 1

*மென்மொழியினளாகிய என் காதலியின் பற்களிடையிற் சுரக்கும் நீர், பாலும் தேனும் கலந்ததுபோல் சுவையுடையது.*

## 230. நீர்த்து – 4

943 **செ**ருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து 431 44 1

*மதம், கோபம், காமம் இல்லாதார் செல்வம் வளர்ச்சியடையும்.*

944 உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது.
தள்ளினும் தள்ளாமை நீர்த்து 596 60 6

*உயர்ச்சியை யேகருதுவார் முயற்சி தவறினும் பிறரால் போற்றப்படும்.*

945 சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்தது 777 78 7

*புகழைவிரும்பி உயிரைநீக்கும் வீரருக்கு வீரக்கழல் அவசியம இல்லை.*

946 உறுஅதோ ஊர் அறிந்த கௌவை யதனைப்
பெறுஅது பெற்றன்ன நீர்த்து 1143 115 3

*எங்கள் கூட்டுறவை அறிந்து இவ்வூர் கூறும் அலர் மொழியால் இன்பமேயாம்.*

## 231. நீத்து – 1

947 இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து 1262 127 2

*தோழி! இன்றுயான் காதலரை மறந்தால் மறுமையிலும் அவரைப்பிரிந்து அழகிழந்து வளைகழல நிற்பவளாவேன்.*

## 232. நுதல் – 1

948 முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல் 1238 124 8

*தன்னை இறுக அணைத்த கைகளை இவளுக்கு நோகும் என்று கருதி சிறிது நெகிழ்த்தேன். இப்பிரிவுக்கு யாதாகுமோ என அவள் நெற்றி பசப்படைந்தது.*

## 233. நுழைந்து – 1

949 கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து 130 13 10

*கோபம் இன்றி அடங்கியவனுக்குத்தானே புண்ணியம் வளரும்.*

## 233. நூல் – 3

950 **கா**தல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் 440 44 10

*தான் விரும்பிய பொருள்களைப் பகைவர் அறியாமல் அனுபவிப்பவன் அவரால் வஞ்சிக்கப்படான்.*

951 **ப**கையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன்கற்ற நூல் 727 73 7

*சபையைக்கண்டு பயப்படுபவன் கற்றநூல் பகைவன்முன் பேடிகைவாளாகும்.*

952 **உ**யர்வு அகலம் திண்மை அருமை யிந்நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல் 743 75 3

*உயர்ச்சி அகலம் உறுதி கடத்தற்கு அருமை ஆகியவை அமைந்த மதில் சிறந்தது.*

## 234. நெஞ்சு – 13

953 **எ**ள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு 281 29 1

*பிறர் இகழாதிருக்க விரும்புபவன் பிறர் பொருளை வஞ்சிக்கக் கருதாது மனத்தைக்காக்க,*

954 **உ**றுஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறுஅஅய் வாழிய நெஞ்சு 1200 120 10

*நெஞ்சே, உறவில்லாத தலைவருக்கு உன் துன்பம் உரைப்பதிலும் துன்பம் செய்யும் கடலைத்தூர்க்க முயல்வது நல்லது.*

955 **அ**ணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு 1081 109 1

*இவள், தெய்வமகளோ, மயிலோ மானிட மகளோ, எனத்துணிய முடியாது மனம் மயங்குகின்றது.*

956 **கா**த லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு 1242 125 2

*மனமே வாழ்க, அவர் வருகையை எதிர்பார்த்து வருந்துவது அறியாமையேயாகும்.*

957 கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க் காய்வு காய்தியென் நெஞ்சு 1246 125 6

மனமே, நம்புலவியைக் கலவியால் போக்கும் காதலரைக்கண்டபோது நீ பொய்யாகவேனும் ஓர்கால் புலத்தல் செய்யமாட்டாய், ஆனநீ, இப்போது பொய்யாக வெறுக்கின்றாய்,

958 பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் நெஞ்சு 1248 125 8

மனமே, நம் துன்பத்தை அறியாமல் அவர் அன்பு செய்யவந்திலர் என்று நம் துனபத்தை அவருக்கு அறிவிக்க எண்ணும் நீ அறிவிலியாவாய்.

959 உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யார்உழைச் சேறிஎன் நெஞ்சு 1249 125 9

மனமே, காதலர் நின் அகத்திருக்க நீ அவரைப் புறத்து சென்று எங்கு காண்பாய்.

960 கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு 1264 127 4

பிரிந்த தலைவர் மிக்க காமத்துடன் வந்து நம்மைக் கூடும் என எண்ணி மனம் செழிக்கும்.

961 ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு 1284 129 4

காதலரைக் காணுமுன் பிணங்கியிருந்த மனம் கண்டவுடன் அதனைமறந்து கூடலை நாடிற்று.

962 உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறிஎன் நெஞ்சு 1292 130 2

நெஞ்சே, நம்மேல் அன்பில்லாத காதலரைக் கண்டால் கோபியார் என்று நீ அவரிடம் செல்கின்றாய், இது நன்றோ ?

963 பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு 1295 130 5

காதலரைப் பெறாதபோதும் அஞ்சும் பெற்றால் பிரிவார் என அஞ்சும் இடையறா துன்பம் உடையது என் மனம்.

964 தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு 1296 130 6

*என் மனம் காதலரைப்பிரிந்து இங்கிருப்பது, என்னைத்தின்று தீர்ப்பதற்கே.*

965 எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு 1298 130 8

*உயிரை விரும்பியமனம் நம்மை இகழ்ந்தாரை நாமும் இகழ்வது இழிவெனக்கருதி அவர்க்கு உடம்பாடாயிற்று.*

## 236. நெறி – 3

966 நல்லாறுஎனப் படுவது யாதெனில் யாதொன்றும்
கொல்லாமை சூழும்நெறி 324 33 4

*வீடுபேற்றுக்கு நல்லவழியாவது கொல்லாமையேயாம்.*

967 கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி 356 36 6

*நூல்களைக்கற்று உண்மைப் பொருளைக் கண்டவர் பிறவாப் பெருநிலை அடைவார்.*

968 ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி 477 48 7

*பொருளைச் செலவுசெய்யும் வழிகளில் தம் அளவுக்கு ஏற்பச் செலவு செய்யவேண்டும்.*

## 237. நேர் – 2

969 கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் 550 5 10

*அரசன் கொலைத் தண்டனையால் கொடியவரை ஒழித்து நல்லவரைக் காத்தல் உழவன் களையைபபோக்கிப் பயிரைக்காத்தல் போலாம்.*

970 உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர் 813 82 3

*அடையும்பயனைக் கருதும் நண்பரும், வேசையரும், கள்வரும், ஒப்பாவார்.*

## 238. நொந்து – 1

971 **தொ**டியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து 1236 124 6

*யான் பொறுத்திருக்கவும் என் தோள்கள் என்னை மீறி வளைகழல மெலிந்தன, அவற்றால் நீ தலைவரைக் கொடியவர் என்று கூறுவது குறித்து நான் வருந்துகிறேன்.*

## 239. நோக்கு – 1

972 **சி**றியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு 976 98 6

*பெரியாரைப் போற்றி அவர் இயல்பினையாம் பெறுவேம் என்னும் கருத்து சிறியவர் மனத்தில் தோன்றாது.*

## 240. நோய் – 8

973 **சா**ர்புணர்ந்து சார்புகெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் 359 36 9

*தனக்கு உறுதியாகும் பொருள்தெரிந்து அதைப் பற்றிப் பற்றுக்களைக் கெடுத்தவனைப் பிறவித் துன்பங்கள் பற்றாது.*

974 **கா**மம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் 360 36 10

*ஆசை, கோபம், அறியாமை மூன்றும் அற்றால் பிறவித்துன்பம் நீங்கும்.*

975 **எ**திரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய் 429 43 9

*பின்வரக் கடவதனை முன்னதாக அறிந்து காக்க வல்ல அறிவுடையார்க்கு திடுக்கிடத் தக்கதாக வரக் கூடிய துன்பம் இல்லை.*

976 **ஏ**வவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் 848 85 8

*அறிவுடையார் கூறியும் செய்யாதவனாய்த் தானாகவும் அறியாதவனாக உள்ள புல்லறிவாளன் உயிர் உடலை விட்டு நீங்கும்வரை உலகத்துக்கு ஓர் நோய் போல்வதாகும்.*

977 **இ**கல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய் 851 86 1

*எல்லா உயிர்களுக்கும், பிற உயிர்களோடு கூடாத குற்றத்தை உண்டாக்குவது மாறுபாடு என்னும் உணர்ச்சியேயாகும்.*

978 **இ**ழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய் 946 95 6

*அளவில் சிறிது குறைவாக உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். பெருந்தீனி தின்பானிடத்து நோய் நிலைத்துநிற்கும்.*

979 **ஊ**ரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய் 1147 115 7

*இக்காம நோயாகிய பயிருக்கு ஊரவர் பழியெருவாகவும்; தாயின் கடும்சொல் நீராகவும் வளர்கின்றது.*

980 **கா**லை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய் 1227 123 7

*காமநோயாகிய பூ காலையில் அரும்பிப் பகலில் பேரரும்பாகி மாலைப்பொழுதில் மலர்வதாகும்.*

## 241. நோற்கிற்பவர் – 2

981 **து**றந்தாரில் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற்ப வர் 159 16 9

*முறைகடந்தவர் கூறும் கடுஞ்சொல்லை பொறுத்துக் கொள்பவர் துறவிகளைக்காட்டிலும் சிறப்புடையவர்.*

982 **சு**டச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற்பவர்க்கு 267 27 7

*நெருப்பிலிட்டுச் சுடச்சுட பொன் ஒளிமிகும். அதுபோல தவம் செய்வார்க்குத் துன்பம் வருத்தவருத்த உள்ளொளி (அறிவு) பெருகும்.*

## 242. நோற்பாரிற்பின் – 1

983 **உ**ண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின் 160 16 10

*பிறர் கூறும் கடுமொழிகளைப் பொறுத்துக்கொள்பவர் பசியைப் பொறுத்துக்கொள்ளும் தவசிகளைக்காட்டிலும் பெரியர்.*

## 243. பகை – 5

984 **கு**ற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம் பகை 434 44 4

*குற்றமே ஒருவனுக்கு முடிவை உண்டாக்கும் பகையாம். ஆதலால் அக்குற்றம் வராமல் தன்னைக்காத்துக் கொள்ளுக.*

985 **வ**லியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை 861 87 1

*தன்னை விட வலியவர் பகையைக்கொள்ளாது விடுக மெலியவர்களுக்கு நீ பகையாகாதே.*

986 **கொ**டுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை 867 87 7

*காரியத்தைத்தொடங்கி அதற்குப்பகையாச் செய்பவனுடைய பகையை சில பொருள் கொடுத்தேனும் கொடுத்து தீர்த்துக்கொள்ளல் நலம்.*

987 **வி**ல்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை 872 88 2

*வீரரோடு பகைகொண்டாலும், அறிஞரோடு பகை கொள்ளலாகாது.*

988 **கா**லைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை 1225 123 5

*யான் காலைக்குச் செய்த நன்மையாது? மாலைக்குச் செய்த கொடுமை யாது?*

## 244. பகைக்கு – 1

989 **அ**ஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு 863 87 3

*பயமுடையவனாய், அறியாதவனாய், பிறரோடு பொருந்தாதவனாய், உலோபமுடையவனாய் உள்ளவன், பகைவர்க்கு மிக எளியானாவான்.*

## 245. பசந்து – 1

990 **நெ**ருநற்றுச் சென்றார் எங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து 1278 128 8

*காதலர் பிரிந்தது நேற்று ஆனால் எம்மேனி பசப்புற்று ஏழுநாள்களாயின. (ஐயத்தால் முன்னே பசப்புற்றது)*

## 246. பசப்பு – 5

991 **அ**வர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு 1182 119 2

தலைவர் உண்டாக்கிய பசப்பு ஆனதால் என் மேனியைப்பற்றி ஆட்சி செய்கின்றது.

992 **உ**ள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு 1184 119 4

யான் தலைவர் புகழையும் சொற்களையும் மனத்தால் நினைவேன், அப்படியிருந்தும் பசப்புவந்தது வஞ்சனையே.

993 **வி**ளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு 1186 119 6

விளக்கு மறையில் இருள் தொடரும், அதுபோல தலைவன் அணைப்பின் நெகிழ்வுகண்டு பசப்பு உடனே தொடரும்.

994 **பு**ல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு 1187 119 7

காதலரை அணைத்திருந்த நான் சிறிது நெகிழ்ந்தேன், அவ்வளவில் பசப்பு வந்துற்றது.

995 **கா**ண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு 1265 127 5

என் கண்களாரத் தலைவரைக் கண்டபின் என் தோளின் பசப்பு நீங்கும்.

## 247. பசி – 1

996 **வி**ண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி 13 2 3

மழை பெய்யத்தவறில், கடலால்சூழ்ந்த உலகம் பசியால் வருந்தும்.

## 248. பசித்து – 1

997 **அ**ற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து 944 95 4

முன் உண்டது அற்றால், மறுபடி அறும் அளவு தெரிந்து மிகப்பசித்து மாறுபாடு இல்லாத உணவுகளை குறிக்கொண்டு உண்க.

## 249. படாதார் – 1

998 பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படாதார் 88 9 8

*விருந்தினரைப் போற்றாதார் செல்வத்தை இழப்பார்*

## 250. படின் – 5

999 பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடையான்கட் படின் 216 22 6

*உதவி செய்பவனுடைய செல்வம் நல்லமரம் ஊர் நடுவில் பழுத்தது ஒக்கும்.*

1000 மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின் 217 22 7

*பிறர்நலம் நாடுபவனிடம் உள்ள செல்வம், எல்லா உறுப்புகளும் மருந்தாகிப் பயன்படும் மரம் ஒப்பாகும்.*

1001 வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தானறி குற்றப் படின் 272 28 2

*தன் மனமறிந்து குற்றம் செய்யும் துறவி வேடத்தால் பயனில்லை.*

1002 இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின் 558 56 8

*முறையாக ஆட்சி செய்யாத அரசன்கீழ் குடிகளாயினவர்களுக்கு வறுமையைக் காட்டிலும் செல்வம் துன்பமாம்.*

1003 இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின் 977 98 7

*சிறப்புக்குரிய தன்மைகள் சிறியவர்கட்கு வாய்க்குமாயின் அவை அவரைச் செருக்குடையவராக்கிவிடும்.*

## 251. படும் – 42

1004 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் 50 5 10

*முறைப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் தேவருக்குள் ஒருவனாக அறிஞர் மதிப்பார்.*

1005 தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் 114 12 4

*ஒருவர் நடுவுநிலைமை உடையவர் என்பதை அவ ரவர் மக்கள் தகுதியால் அறியலாம்.*

1006 ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் 131 14 1

*ஒழுக்கம் மேன்மை தருவதால் உயிரைவிடச் சிறந் தது.*

1007 நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும் 154 16 4

*பொறுமை யுடையவரே மனச்செம்மை யுடையவ ராவார்.*

1008 அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும் 169 17 9

*பொறாமையுடையவன் வாழ்வும் செம்மையாளன் வறுமையும் இயல்பு அல்ல. சீக்கிரம் மாறுபடும்.*

1009 அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்
புன்மையாற் காணப்படும் 185 19 5 [சொல்லும்

*புறங்கூறுபவன் தர்ம வழியைச் சிந்தியாதவனும்.*

1010 பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும் 186 19 6

*பிறர் குற்றங்களை மறைவில் கூறித்திரிபவன் மற்ற வனால் அடாப்பழி கூறப்பட்டுப் பெருந்துன்பத்துக்கு ஆளாவான்.*

1011 பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும் 191 20 1

*வெறுக்கத்தக்கனவற்றை பலர்முன் பேசுபவன் எல் லாராலும் இகழப்படுவான்.*

1012 தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் 202 21 2

*தீயசெயல்கள் தீமையேதரும், அவை நெருப்பை விட அஞ்சுதற்குரியவை.*

1013 **ஒ**த்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும் 213 22 4

*உலக மக்களுக்கு உதவி செய்பவனே உயிர்வாழ் பவனுவான், அல்லாதவன் செத்தவனுவான்.*

1014 **பு**றந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் 298 30 8

*உடல் நீரினுல் சுத்தமுடையதாம், அதுபோல் உள் ளம் உண்மையால் சுத்தமுடையதாம்.*

1015 **நா**ச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும் 335 34 5

*பேசமுடியாத வண்ணம் நாக்கு உள்ளிழுத்துக்கொள் ளும் நிலைவருமுன் அறத்தைச் செய்.*

1016 **வே**ண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும் 265 27 5

*தவவலியால் விரும்பியவற்றை அடையக்கூடும், ஆதலால் தவம் செய்க.*

1017 **ப**ற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும் 349 35 9

*பொருள்களின் நிலைமையைத் தெரிந்து அவைக ளின்மீதுள்ள பற்றை விடுவாளுனல் அப்போதே வீட்டு லகை அடைந்தவனுவான்.*

1018 **மு**றைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் 388 39 8

*நீதிவழங்கிப் பசியில்லாமல் மக்களைக்காக்கும் அர சன் கடவுளுக்குச்சமம்.*

1019 **க**ல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும் 405 41 5

*கல்வியறிவு இல்லாதவன் கொண்டுள்ள மதிப்புக் கற்றறிந்தவன் கண்டு உரையாடக்கெடும்.*

1020 **செ**விக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் 412 42 2

*சுவையும் நன்மையும் தரும் செவி யுணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிது உணவு அறிஞர்களால் இடப்படும்.*

1021 **ஆ**ற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும் 468 47 8

*உரிய வழியில் செய்யாத காரியம் பலர் துணையானு லும் குறையுடையதுவாகும்.*

1022 **அ**றம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும் 501 51 1

*அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம் இவைகளில் மாறுபடாதவனையே அரசன் தன்வேலைக்கு உரியவனாகக் கொள்ளல் வேண்டும்.*

1023 **ந**ன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் 511 52 1

*தன் பொறுப்பில் விடப்பட்ட காரியத்தை நல்ல முறையில் செய்து முடித்தவனையே அரசன் பெரிய காரி யங்களுக்கு உரியவனாகக் கொள்ளல்வேண்டும்.*

1024 **கொ**டுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும் 525 53 5

*உறவினருக்கு வேண்டுவன கொடுத்தலும் இன் சொல் பேசுதலும் உடையவன் பல்வகை உறவினராலும் சூழப்படுவான்.*

1025 **க**ண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ∴தின்றேல்
புண்ணென்று உணரப் படும் 575 58 5

*ஒருவன் கண்ணுக்கு ஆபரணம் தாட்சண்யமே, அஃதில்லாதகண் புண்ணாம்.*

1026 **ஒ**ற்றொற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும் 589 59 9

*ஓர் ஒற்றன் மற்றோர் ஒற்றனை அறியாமல் ஆள வேண்டும், அத்தகைய ஒற்றர் மூவரை தனித்தனி ஒரு பொருளை ஒற்றிட்டு மூவர் சொல்லும் ஒத்ததாயின் கொள் ளல் வேண்டும்.*

1027 **அ**டுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும் 625 63 5

*மேல்மேல்வரினும் உறுதியை விடாதவனை அடைந் ததுன்பங்கள் துன்பப்பட்டு அழியும்.*

1028 **வீ**றெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப்படும் 665 67 5

*தீர எண்ணிச் செயலாற்றும் உறுதியுடைய அமைச்சர் அரசனால் மதிக்கப்படுவார்.*

1029 **இ**ளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும் 698 70 8

*இவ்வரசர் இளையவரென்றும் சொந்த முடையவர் என்றும் அலட்சியம் செய்யாது அவர் பெருமைக்கு ஏற்ற மரியாதையுடன் நடந்துகொள்ளல் வேண்டும்.*

1030 **இ**னம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும் 822 83 2

*சேர்ந்தார்போன்று சேராதார் நட்பு சந்தர்ப்பம் வாய்த்தபோது மகளிர் மனம்போல வேறுபட்டுத் தீமை விளைக்கும்.*

1031 **மு**கத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும் 824 83 4

*முகத்தால் சிரித்து மனத்தால் தீயவராக உள்ளார் நட்பு பயப்படவேண்டியதே.*

1032 **ந**ட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும் 826 83 6

*நண்பர்போன்று நல்ல சொல்களைச் சொன்னாலும் பகைவர் சொல்லும் சொற்கள் நன்மைதராததை விரைவில் அறியப்படும்.*

1033 **உ**லகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் 850 85 10

*உயர்ந்தவர் கூறும் ஒன்றை இல்லை என்பவன் உலகத்தில் பேயாம்.*

1034 **கா**ணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும் 866 87 6

*கோபத்தையுடையவன் காமத்தையுடையவன் பகைமையை விரும்பிக்கொள்க.*

1035 **உ**ருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும் 933 94 3

*பந்தயம்கூறி இடைவிடாது சூதாடுபவனுடைய பொருளும் வருவாயும் பகைவனிடம் போய்ச்சேரும்.*

1036 **தீ**யள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவு இன்றிப் படும் 947 95 7

*தன் உடம்பின் இயல்பு தெரியாது அளவுக்குமேல் உண்பவன் நோய்க்கு ஆளாவான்.*

1037 **ந**லத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப்படும் 958 96 8

*உயர்குடிப் பிறந்தவனிடம் அன்பு இல்லாமை காணப்படின் அவனுடைய குடிப்பிறப்பில் ஐயம் கொள்ளுவர் அறிஞர்.*

1038 **தொ**டிப்புழுதி கஃசா உணக்கில் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் 1037 104 7

*ஒரு நிலத்தினை உழுதவன் பல உழவுகள் காயவிடில் அந்நிலத்திற்கு ஒரு பிடி எருவும் இடாமலே மிக்கு விளையும்.*

1039 **ந**ல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும் 1045 105 5

*வறுமைத் துன்பத்திலிருந்து பல துன்பங்களும் விளையும்.*

1040 **ந**ற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் 1046 105 6

*வறுமையாளன் உண்மைப் பொருளைச் சொன்னாலும் பொருளற்றதாகவே முடியும்.*

1041 **அ**றம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் 1047 105 7

*வறுமையாளனை, பெற்ற தாயாரும் அயலான் போலக் கருதுவாள்.*

1042 **உ**றாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும் 1096 110 6

*அன்புடையார் கடும் சொற் சொன்னாலும் அவர் சொல் நன்மை தரும். அதைக் குறையுடையவர் விரைவில் தெரிவார்கள்.*

1043 **நி**றைஅரியர் மன்னளியர் என்னாது காமம்
மறை இறந்து மன்று படும் 1138 114 8

*இவர் மனத்திண்மையுடையவர் என்று அஞ்சாது, அன்புக்கு உரியவர் என்று இரங்காது, மகளிர் காமமும அவர் மனத்தைக் கடந்து வெளிப்படுவதாயிற்று.*

1044 **நி**றைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும் 1254 126 4

*இதுவரை உறுதியுள்ளவளாக இருந்தேன். இன்று என் காமம் மறைத்தலைக் கடந்து அம்பலத்து வெளிப்படுகின்றது.*

1045 **ஊ**டலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப்படும் 1327 133 7

*காமம் அனுபவித்தற்குரிய இருவருள் ஊடலில் தோற்றவரே வென்றவராவார். அது கூடும்போது அறியலாகும்.*

## 252. படுவார் – 2

1046 **ஊ**ழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார் 989 99 9

*சால்பு ஆகிய கடலுக்குக் கரையென்பவர், கடல் கரைபுரண்டாலும, தாம் தம் நிலையில் மாறார்.*

1047 **ம**லரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார் 1289 129 9

*காம இன்பம் மலரினும் மெல்லிது, பக்குவம் தெரிந்து அனுபவிப்பவர் சிலரேயாம்.*

## 253. படை – 8

1048 **அ**ல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் நீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை 555 56 5

*வருத்தத்தால் குடிகள் அழுத கண்ணீர் அரசன் செல்வத்தைக் குறைக்கும் ஆயுதமாம்.*

1049 ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை 985 99 5

*ஒருவருடைய வலிமையாவது துணைவரைப் பணிந்து கூட்டிக்கொள்ளல். அது பகைவருடைய பகைமையைப் போக்கிவிடும்.*

1050 அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை 764 77 4

*போரில் தளர்வின்றி, பகைவரால் பேதப்படுத்தப் படாதவனாய் பரம்பரை வீரத்தையுடையதே படையாகும்.*

1051 கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை 765 77 5

*இயமனுக்கும் அஞ்சாது எதிர்நின்று தாங்கும் வல்லமை உடையதே படையாகும்.*

1052 சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை 769 77 9

*அளவில் குறைதலும், மன வெறுப்பும், வறுமை நிலையும் இல்லாத படையே வெல்லும்.*

1053 அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை 1228 123 8

*முன் இனிமையான புல்லாங்குழல் இப்போது கொடிய மாலைக்காலத்துக்குத் துணையாகி எனக்குத் துன்பம் செய்கிறது.*

1054 பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை 1258 126 8

*பல மாயங்கள் கற்ற கள்வனாகிய காதலன் பணிவு மொழிகளே நம் மனத்திண்மையை அழிக்கும் படையாகின்றது.*

1055 புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை 1324 133 4

*காதலரை அணைத்துப் பின் விடாமைக்குக்காரணமாகிய என் புலவியை உடைக்கும் படைக்கலம் அப்புலவி நிகழும்போது வெளிப்படும்.*

## 254 படைக்கு – 1

1056 மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு 766 77 6

*வீரமும், மானமும், முன்னைய வீரர் நடந்த நல்வழியில் நடத்தலும், அரசன் நம்பிக்கையைப் பெறுதலும் இந்நானகும் படைக்கு உறுதி தருவதாகும்.*

## 255. பட்டார் – 1

1057 அகடாரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப் பட்டார் 936 94 6

*சூதாகிய மூதேவியடையப்பட்டவர் இம்மையில் வயிறுார உண்ணுமலும் மறுமையில் நரகத்திலும அழுந்துவார்கள்.*

## 256. பட்டு – 3

1058 யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு 127 13 7

*பேச்சிலே பிழை நேராது நாவைக் காக்கவும். இல்லையேல் பெருந்துன்பமாம்.*

1059 தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு 266 27 6

*தவம் செய்வாரே உரிய காரியம் செய்பவர், அல்லார் வீண் காரியம் செய்பவராம்.*

1060 நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணு மடநெஞ்சில் பட்டு 1297 130 7

*அவர் மறந்தும் அவரை மறக்காத என் இளமனத்துடன் நாணமும் துறந்தேன்.*

## 257. பணிந்து 1

1061 உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து 680 68 10

*வலி குறைந்தவர் வலியரால் எதிர்க்கப்பட்டபோது சமாதானத்தையே ஏற்றுக்கொள்வார்.*

## 258. பணிவு – 1

1062 **ந**லம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்
வேண்டுக யார்க்கும் பணிவு 960 96 10 [டின்

*ஒருவன் தனக்குப் புகழ், புண்ணியம் முதலிய நலங்கள் வேண்டினால் நாணம்உடையவனாதல் வேண்டும். குடிப்பிறப்பின் சிறப்பு வேண்டினால் வணக்கம் உடையவனாதல் வேண்டும்.*

## 259. பண்பு – 3

1063 **அ**ன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு 681 69 1

*அன்பு, நற்குடிப்பிறப்பு, அரசர் விரும்பும் குணம் உடையவனே தூதுவனாவான்.*

1064 **நூ**லாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு 683 69 3

*அயல் அரசரிடம் தூது செல்பவன் நீதி நூல் வல்லவனாதல் வேண்டும்.*

1065 **தூ**ய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு 688 69 8

*எதையும் விரும்பாத மனத்தூய்மையும் அமைச்சர் துணையும், மன உறுதியும் தூது செல்வாருக்கு வேண்டியனவாம்.*

## 260. பயன் – 4

1066 **இ**னைத்துணைத்து என்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் 87 9 7

*விருந்தோம்பலின மதிப்பு விருந்தினர் தகுதியைப் பொறுத்ததாகும்.*

1067 **வே**ண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன் 177 18 7

*பிறர் பொருளை விரும்பி அடையும் செல்வம் நல்ல பயனைக் கொடுக்காது.*

1068 **சு**ற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன் 524 53 4

*செல்வம் பெற்றவன் அதனால் அடையும் பயன் உறவினர் சூழ வாழ்தலாம்.*

1069 **ஊட**ல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் 1109 111 9

*சிறிதளவு பிணங்குதல், அதை விடுதல், அதன் பின் கூடுதல் என இவை அன்பினூற் பிணிக்கப்பட்டார் அடையும் பயனும்.*

## 261. பல – 2

1070 **ஒரு**பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல 337 34 7

*ஒருநாள் முழுமையும் தம் உயிர் உடம்பில் நிலைத் திருக்கும் என்பதையும் அறியக்கூடாத மக்கள் அறியா மையால் கோடி கோடி எண்ணுவார்கள்.*

1071 **வேண்டி**ன் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல 342 35 2

*பற்றுவிட்டபின் ஒருவன் இம்மையில் அனுபவிக்க வேண்டிய இன்பங்கள் பலவுள்ளன. அவற்றை அனுப விக்க விரும்புபவன் இளமையிலேயே துறக்கவேண்டும்.*

## 262. பலர் – 5

1072 **ம**னத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர் 278 28 8

*மனத்து அழுக்கு நீங்காது நீரில் பலகால் முழுகி தூயவர் வேடத்தில் மறைந்து திரியும் வஞ்சகத் துறவியர் பலர்.*

1073 **பொ**துநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் 528 53 8

*அரசன் அவரவர் தகுதிக்கேற்பக் கருதுவானுனல் அச்சிறப்புக்காக பலர் அவனைச் சுற்றி வாழ்பவராவார்.*

1074 **உ**டைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர் 473 48 3

*தம் வலிமையை அறியாது ஒரு காரியத்தைத் தொடங்கி இடையில் வரும் எதிர்ப்பைத் தாங்கமாட் டாது கெட்டவர் பலர்.*

1075 **எ**னைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறுகும் மாந்தர் பலர் 514 52 4

*எல்லா வகையிலும் தெளியப்பட்டவரானாலும் காரியத்தில் மனம் வேறுபடுபவர் பலர் உளர். (அவரைச் சிறிய காரியத்தில் வைத்து அறிந்து விலக்குக.)*

1076 **அ**ரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர் 1160 116 10

*காதலர் பிரிவைப் பொறுத்துத் துன்பங்களைத் தாங்கி உலகத்து வாழும் மகளிர் பலர்.*

## 263. பவன் – 1

1077 **ஏ**முற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன் 873 88 3

*தான் தனியனாக இருந்து பலரோடு பகை கொள் பவன் பித்தரைக்காட்டிலும் அறிவில்லாதவன்.*

## 264. பழம் – 1

1078 **அ**னிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் 1120 112 10

*அனிச்சப்பூவும் அன்னத்தின் சிறகும் என் காதலியின் பாதங்களுக்கு நெருஞ்சி முள்போல் உறுத்துவன வாகும்.*

## 265. பழி – 5

1079 **செ**யற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி 40 4 10

*ஒருவன் செய்வதற்குரியது தருமம். நீக்கற்குரியது பழிச்செயல்.*

1080 **அ**ற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி 506 51 6

*சுற்றம் இல்லாதவர் உலகத்தோடு தொடர்பில்லாத காரணத்தால் பழிக்கு அஞ்சார். ஆகையால் அரசன் அத்தகையாரைத் தேர்ந்தெடுத்தல் கூடாது.*

1081 **பொ**றியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி 618 62 8

*பயன் தரும் விதி இல்லாமை யார்க்கும் பழியாகாது. அறியவேண்டியதை அறிந்து முயலாமையே பழியாம்.*

1082 ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி 137 14 7

ஒழுக்கத்தால் மேன்மையையும், ஒழுக்கம் இன்மை யால் அடாப்பழியையும் அடைவார்.

1083 எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி 145 15 5

மிக எளிதாக முடிவது கருதி பிறன் மனைவியைக் கூடு பவன் பெரும் பழிக்கு ஆளாவான்.

## 266. பறை – 1

1084 அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை 1115 112 5

அனிச்சப்பூவை காம்பு நீக்காது சூடினுள். ஆதலால் இவள் இடை முறிந்துபோவதாம்.

## 267. பாடு – 1

1085 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு 409 41 9

கல்லாதார் உயர்ந்த சாதியிற் பிறந்தாலும், தாழ்ந்த சாதியிற் பிறந்து கற்றவர்க்குள்ள பெருமை அவர்க்கு கிடை யாது.

## 268. பால் – 1

1086 தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால் 209 21 9

தனக்கு நன்மையை விரும்புபவன் எவ்வகைத் தீமை யையும் செய்யலாகாது.

## 269. பாற்று – 2

1087 வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று 11 2 1

மழையால் உலகம் நிலைபெறுமாகையால் அம்மழையே உலகத்துக்கு அமுதமாகும்.

1088 மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று 829 83 9

வெளிக்கு நட்புக்காட்டி மனத்தில் இகழ்வாரை தாமும் அவ்வாறே நட்புக்காட்டி மனத்துக்கொள்ளாதிருக்க வேண்டுவது முறையாம்.

## 270. பிரியாதார் – 1

1089 **வி**ழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பில் தலைப்பிரியா தார் 810 81 10

பழைய நண்பர் பிழைசெய்தாலும் அவரிடத்து மாறுபாடு கொள்ளாதவர் பகைவராலும் விரும்பப்படுவார்.

## 271. பிரிவு – 1

1090 **இ**ன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு 1158 116 8

மகளிர்க்குத் தங்குறிப்பறியும் தோழியர் இல்லாத ஊரில் வாழ்தல் துன்பம்; காதலரைப் பிரிதல் அதனினும் துன்பமாகும்.

## 272. பிற – 12

1091 **ம**னத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற 34 4 4

மனதில் குற்றமில்லாதிருப்பதே அறத்தின் அடிப்படையாகும்.

1092 **பெ**றுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற 61 7 1

மாந்தர்கள் நல்ல மக்களைப் பெறுதலைப்போன்ற பேறு யாம் கண்ட அளவில் வேறு இல்லை.

1093 **ப**ணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற 95 10 5

அடக்கமும் இன்சொல்லுமே ஒருவனுக்கு ஆபரணங்களாகும்.

1094 **பு**த்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற 214 22 4

பிறருக்கு உதவிசெய்யும் செயல்போல சிறந்த செயல் தேவ உலகிலும் மண்ணுலகிலும் வேறு இல்லை.

1095 **யா**மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற 300 30 10

யாம் அறிந்தமட்டில் உண்மை பேசுவதைக்காட்டிலும் உயர்ந்த அறம் வேறு இல்லை.

1096 **செ**ல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற 302 31 2

வலியவர்மீது கோபம் கொண்டால் அவரால் தனக்கு தீமையுண்டாகும்; மெலியவர்மீது கோபம்கொண்டால் பழி பாவங்களால் தீமையுண்டாகும்.

1097 **ந**கையும் உவகையும் கொல்லும் சினத்தில்
பகையும் உளவோ பிற 304 31 4

கோபம் முக மலர்ச்சியையும் மன மகிழ்ச்சியையும் கெடுக்கும்; ஆதலால் அதைவிடப் பகை ஒருவனுக்கு வேறு இல்லை.

1098 **நெ**டும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற 495 50 5

ஆழமுடைய நீரில் முதலை, மற்றவற்றையெல்லாம் வெல்லும்; நீரைவிட்டு வெளியில் வந்தால் முதலையை மற்ற வெல்லாம் வெல்லும் (வெற்றிக்கு இடம் இன்றியமையாதது).

1099 **வி**னைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற 661 67 1

ஒருவன் கொண்ட செயலை முடிப்பதற்கு உறுதியாவது மன உறுதியேயாம்.

1100 **நு**ண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற 710 71 10

யாம் நுண்ணறிவுடையேம் என்னும் அமைச்சர் அரசர் கருத்தை அளந்தறிவதற்கு உரிய கோலாவது, அவ் வரசர் கண்களேயாம்.

1101 **க**ருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற 1011 102 1

இழிசெயல் புரிய நாணுவதே ஆண்மக்களுக்குரிய நாணமாகும்; எதற்கும் நாணுவது பெண்களுக்குரிய இயல்பு.

1102 **ந**யந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க்கு உரைக்கோ பிற 1181 119 1

என்னிடம் அன்புடன் கேட்டவர்க்கு அப்போது பிரிவை உடம்பட்ட நான் இப்போது அதனை ஆற்றாது பசப் புற்ற தன்மையை யாரிடம் சொல்லுவேன். (பசப்பு – நிற வேறுபாடு.)

## 273. பிறந்தார் – 1

1103 ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார் 952 96 2

ஒழுக்கம், உண்மை, நாணம் இவற்றிலிருந்து சிறிதும் விலகார் நல்ல குடியிற் பிறந்தவர்.

## 274. பிறப்பு – 4

1104 உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு 339 34 9

ஒருவனுக்கு சாவு வருதல் உறக்கம் வருவதுபோலாம்; பிறப்பு வருதல் விழிப்பு வருதல் போலாகும். (இறப்பும் பிறப்பும் மாறி மாறி வரக்கூடியவை)

1105 பொருளல் லவற்றைப் பொருளென்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு 351 36 1

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்யென நம்பும் மயக்கமே பிறவித் துன்பத்துக்குக் காரணமாம்.

1106 ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு 357 36 7

பொருள்களை ஆராய்ந்து உண்மையை உணர்ந்தவன் மீட்டும் பிறவி அடையான்.

1107 பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு 1002 101 2

பொருளினால் எல்லாம் விளையும் என்பதையறிந்து அதனை ஈட்டி பிறர்க்கு ஈயாது உலோபம் காட்டும் மயக்கத்தால் ஒருவனுக்கு பேய்ப்பிறப்புண்டாகும்.

## 275. பிறர்க்கு – 1

1108 அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு 72 8 2

அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தம் நன்மைக்கே பயன்படுத்துவார்; அன்புடையவர் தம் உடம்பையும் பிறர் நன்மைக்குப் பயன்படுத்துவார்.

## 276. பிறர் – 1

1109 அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர் 1009 101 9

கொடாமலிருக்கும் பொருட்டு பிறரிடம் அன்பு செய்தலை விட்டு தன்னையும் வருத்தி அறமும் செய்யாதவனுடைய செல்வத்தை அயலார் கொள்வார்.

## 277. பின் – 1

1110 ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் 225 23 5

பசியைப் பொறுத்துக்கொள்பவர் வலிமையைக் காட்டிலும் பசியைப் போக்குவார் வலிமை சிறந்தது ஆகும்.

## 278. பீடு – 1

1111 ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு 1088 109 8

பகைவர் அஞ்சும் என் வலிமை இந்நங்கை நெற்றியின் முன் வெற்றி காணாது கெட்டதே! ஈதென்னை ?

## 279. பீழிப்பது – 1

1112 நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என் எம்மைப் பீழிப்பது 1217 122 7

ஒருநாளும் நனவில் வந்து அன்பு செய்யாதவர் கனவில் வந்து நம்மை வருத்துவது எத்தொடர்பினால் ?

## 280. புகல் – 3

1113 எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல் 144 15 4

பிறன் மனைவியை விரும்புவார் வேறு எவ்வகைப் பெருமையுடையவரானாலும் இல்லாதவரே யாவார்.

1114 அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல் 243 25 3

அருளுடையார் துன்ப உலகம் என்னும் நரகம் புகார்.

1115 கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல் 840 84 10

அறிஞர் சபையில் அறிவிலி புகுவது தூய்மையற்ற காலினைப் படுக்கையில் வைத்தது போலாம்.

## 281. புகழ் – 2

1116 ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் 156 16 6

குற்றம் செய்தாரைத் தண்டிப்பது சிறிது மகிழ்ச்சி; பொறுப்பது உலகமுள்ளளவும் புகழ்.

1117 உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கு
ஈவார்மேல் நிற்கும் புகழ் 232 24 2 [ஒன்று

புலவர் சிறப்பித்துக் கூறுபவை எல்லாம், ஏற்பார்க்கு இல்லை என்னாது ஈவாரின் புகழ் பற்றியதுவேயாம்.

## 282. புகின் – 1

1118 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின் 937 94 7

நல்லது செய்யவேண்டிய காலம் சூதாட்டத்தில் கழிந்தால் அவன் பழைய செல்வமும் நற்குணங்களும் அழியும்.

## 283. புகும் – 1

1119 யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் 346 35 6

யான், எனது, என்ற பற்றினை விட்டவன் வீட்டுலகை அடைவான்.

## 284. புணர்வு – 2

1120 இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு 1152 116 2

அன்று (கனவில்) பார்த்த பார்வை இனித்தது, புணர்ச்சி குறித்து. இன்று, புணர்ச்சி அச்சத்தை உண்டாக்குகிறது, பிரிவைக்குறித்து.

1121 ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு 1155 116 5

என் உயிரைக் காக்கவேண்டில் தலைவர் பிரிவைத் தடுப்பாய்; அவர் பிரிந்தால் அவரைக் கூடுதல் அரிதாம்.

## 285. புணை – 1

1122 காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை 1134 114 4

காம வெள்ளத்தைக் கடக்கும் தெப்பமாகிய நாணம், ஆண்தன்மை என்னும் இவற்றை அவ்வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டது.

## 286. புலம் – 1

1123 **வி**த்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் 85 9 5

விருந்தினரைப் போற்றுபவன் நிலம் மிகுந்த விளைவைக் கொடுக்கும்.

## 287. புலந்து – 1

1124 உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து 1287 129 7

தம்மை இழுக்கும் நிலை தெரிந்தும் நீரில் பாய்பவர் போல, கடைபோக நிலை தெரிந்தும் கணவனோடு பிணங்குவதால் யாது பயன்.

## 288. பெண் – 1

1125 **த**ற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் 56 6 6

கற்பும், கணவனைப்போற்றலும், புகழுடன் கடமையை மறக்காதவளே பெண்ணாவாள்.

## 289. பெயர்த்து – 2

1126 **இ**லனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து 201 21 5

வறுமையால் பாவச் செயல்களைச் செய்தால் அதிக வறியவனாவான்.

1127 **இ**யல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து 344 35 4

ஒரு பற்றும் இல்லாமையே துறவு ஆகும்; சிறிய பற்றும் மயக்கத்துக்கேதுவாகும்.

## 290. பெயல் – 1

1128 **மு**றைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் 559 56 9

அரசன் முறை தவறினால் மழை உரிய காலத்துப் பெய்யாது.

## 291. பெயின் – 1

1129 **பீ**லிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் 475 48 5

மயிலிறகு ஏற்றப்பட்ட வண்டியானாலும் அளவுக்கு மிஞ்சினால் அச்சு முறியும். (பகை எளியராயினும் பலராயில் வலியனாயினும் அழிவான்.)

## 292. பெரிது – 6

1130 **கா**லத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது 102 11 2

தக்க சமயத்தில் ஒருவர் செய்த உதவி சிறிதாயினும் பூமியினும் மிகப்பெரிதாய் மதிக்கப்படும்.

1131 **ப**யன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது 103 11 3

பயன் கருதாது செய்த உதவி கடலினும் மிகப்பெரிய தாம்.

1132 **நி**லையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது 124 13 4

தமக்குரிய நிலையில் அடங்கி வாழ்பவர் மலையைக் காட்டிலும் உலகில் விளக்கமாகத் தோன்றுவார்.

1133 **க**ண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது 1092 110 2

இவள் கண்கள் யான் காணுமல் என்மேல் செய்யும் சிறு பார்வை, புணர்ச்சி இன்பத்தில் பாதிக்குமேல் இன்பத் தைத் தருவதாகும்.

1134 **இ**ன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனில் பெரிது 1166 117 6

காமம் கூட்டுறவால் இன்பம் செய்யும்போது அவ் வின்பம் கடல்போலப் பெரிதாம்; அதுவே பிரிவால் துன் பம் செய்யும்போது அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம்.

1135 **க**ண்நிறைந்த காரிகை காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது 1272 128 2

என் கண் நிறைவடையும் நின் தலைவிக்கு மற்றை யோரைக் காட்டிலும் மடமை மிகுதியாயுள்ளது.

## 293. பெறின் – 19

1136 **பெ**ண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் 54 6 4

கற்புடைய மனைவியைக் காட்டிலும் சிறந்த பொருள் வேறு இல்லை.

1137 **எ**ழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் 62 7 2

நற்குணம் வாய்ந்த மக்களை ஒருவர் பெற்றால் அவரை ஏழு பிறவிக்கும் பாவங்கள் பற்றப்படமாட்டா.

1138 **அ**கனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் 92 10 2

பிறருக்கு ஒன்றைக் கொடுப்பதைக்காட்டிலும் இன் சொல் கூறுவது முக்கியம்.

1139 **த**குதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட்டு ஒழுகப் பெறின் 111 12 1

நீதியின்படி நடக்கும் நடுவு நிலைமையே மிகச் சிறந்த குணமாம்.

1140 **சொ**ற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின் 119 12 9

மனம் நடுவு நிலைமை உள்ளார்க்கே சொல் நடுவு நிலைமையுள்ளதாக அமையும்.

1141 **செ**றிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின் 123 13 3

அடக்கமுடையவர் பிறரால் சிறப்பிக்கப்படுவார்.

1142 **வி**ழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின் 162 17 2

பொறாமையை விடுவது ஒருவனுக்குச் சிறந்த பேறாகும்.

1143 **உ**ண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின் 257 26 7

தூய்மை உணர்வுடையார் புலாலைப் புண்ணாக நினைத்துத் தவிர்ப்பார்கள்.

1144 **நா**ளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின் 334 34 4

நாளாகிய வாளால் உயிர் தேய்ந்துகொண்டே செல்லும் தன்மை அறிஞர்களால் உணரக்கூடியதாகும். (காலண்டர் நோக்குக.)

1145 கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின் 403 41 3

கல்லாதவர் கற்றவர் முன் வாயடங்கிப் பேசாது நின்ருல் நல்லவராவார்.

1146 உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின் 540 54 10

மறதியில்லாமல் ஒன்றைத் தொடர்ந்து நினைப்பவன் அதனை எளிமையாகப் பெறுவான்.

1147 விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் 648 65 8

சொல்லை வரிசையாக இனிமையுடன் சொன்ஞல் உலகம் விரைந்து கைக்கொள்ளும்.

1148 எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் 666 67 6

தாம் எண்ணிய காரியத்தில் உறுதியுடையவர் எண்ணியபடியே யடைவார்.

1149 முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின் 708 71 8

தம் மனத்துள்ளதை குறிப்பறிந்து தீர்க்கவல்லவர் முன்னிலையில் குறையுடையான் அவர்தம் முகம் நோக்கும் வரைதான் அவர் முகம் நோக்கி, நிற்றல் போதும்.

1150 பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் 709 71 9

வேறுபட்ட பார்வையை உணர்பவர்கள் பிறர் மனத்துள்ள பகைமையையும் நட்பையும் அவர் கண்களாலே அறிந்துகொள்ளுவார்கள்.

1151 மையல் ஒருவன் களித்தற்ருல் பேதைதன்
கையொன்று உடைமை பெறின் 838 84 8

அறிவில்லாதவன் செல்வம் உடையவஞனல் இயற்கையாகவே மயக்கம் உடையவன் கள்ளுண்டு மயங்கியதைப் போலாவான்.

1152 செறுவார்க்குச் சேண் இகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின் 869 87 9

நீதியறியாத பயப்படும் இயல்புடைய பகைவரைப் பெற்றால் அவருடைய பகைவருக்கு உயர்ந்த இன்பமுண்டாகும்.

1153 இன்மை ஒருவர்க்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மை உண்டாகப் பெறின் 988 99 8

சால்பு என்னும் உறுதி ஒருவனிடம் நீங்காதிருந்தால் வறுமை இழிவைத் தராது.

1154 ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின் 1330 130 10

காம அனுபவத்துக்கு இன்பமாவது காதலர் தம்முள் ஊடுதல்; அவ்வூடலுக்கு இன்பமாவது அதனை அளவாய் விலக்கி கூடுதலாம்.

## 294. பெறும் – 2

1155 அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத் தகையால் பாடு பெறும் 768 77 8

மாற்றார் படையைத் தாக்கும் வலிமையும், தன்மேல் வந்தால் தாங்கும் வலிமையும் இல்லையானாலும் நல்ல தோற்றத்தால் ஒரு படை பெருமையடையும்.

1156 ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும் 1322 133 2

ஊடல் காரணமாக நம்மிடம் உண்டாகும் சிறிய வெறுப்பினால் காதலர் அன்பு சிறிது குறையினும் பின்னர்ச் சிறந்து நிற்கும்.

## 295. பேறு – 1

1157 மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு 60 6 10

நல்ல மனைவியே ஒருவர் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் நன்மையாகும்; அம்மனைவிக்கு அழகு தருவது நன்மக்கட் பேறும்.

## 296. பொதிந்து – 1

1158 ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து 155 16 5

பிறர் செய்யும் குற்றத்தைப் பொறுப்பவரை அறிஞர் பொன்போல் போற்றுவர்.

## 297. பொருட்டு – 4

1159 இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு 81 9 1

விருந்தினரைப் போற்றலே இல்லறத்தான் சிறந்த கடமையாகும்.

1160 தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு 212 22 2

நல்லவர் தம்பொருளைப் பிறர் நன்மையின்பொருட்டே செலவிடுவார்.

1161 ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு 725 73 5

சபையில் அஞ்சாது மறுமொழி கொடுக்க தருக்க நூலை முறையாகக் கற்றல் வேண்டும்.

1162 நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு 784 79 4

ஒருவனோடு நட்புச்செய்வது கூடிப்பேசி மகிழ்வதற்கு அன்று; ஆகாதன செய்ய முற்பட்டபோது வற்புறுத்தி அறிவு கூறுதலுக்கு ஆம்.

## 298. பொருள் – 6

1163 அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள் 178 18 8

தன்னுடைய செல்வம் குறையாதிருக்க விரும்புபவன் பிறன் பொருளை விரும்பாதிருக்க.

1164 தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள் 509 51 9

ஆராயாது யாரையும் கொள்ளலாகாது; கொண்ட பின் அவரிடம் ஐயம் கொள்ளலாகாது.

1165 ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள் 741 75 1

பகைமேற் சென்று தாக்குவார்க்கும், பகைக்கு அஞ்சி தம்மைக் காத்துக்கொள்பவருக்கும் காவல் சிறப்பைத் தருவதாம்.

1166 பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் 751 76 1

ஒரு பொருளாக மதிக்காதவரையும் மதிக்கக்கூடுபவராகச் செய்வது பொருளேயாம்.

1167 அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள் 754 76 4

நல்லவழியில் ஈட்டிய பொருள் ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் தரும்.

1168 உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் 756 76 6

தானே வந்த பொருளும், சுங்கப்பொருளும், பகைவரிடமிருந்து கொள்ளும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம்.

## 299. பொழுது – 2

1169 பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது 481 49 1

கூகையைக் காக்கை பகலில் வெல்லும்; அதுபோல பகைவரை வெல்ல காலம் இன்றியமையாதது ஆம்.

1170 மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது 1221 123 1

பொழுதே, நீ முன்னுள் வந்த மாலை; அல்லை, காதலரைப் பிரிந்தவர் உயிரைக்கொள்ளும் முடிவு காலம்.

## 300. பொறை – 7

1171 இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை 153 16 3

அறிவிலிகள் செய்யும் தீமையைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலே பேராற்றலாம்.

1172 அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை 189 19 9

புறங்கூறுபவனை நிலமகள் தன் கடமையின்பொருட்டு மனமில்லாமல் தாங்கிக்கொண்டுள்ளாள் போலும்.

1173 கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை 570 57 10

கொடுங்கோலரசன் கல்லாதவரைத் துணைசேர்த்துக் கொள்ளுவான்; அவன் பூமிக்குப் பாரம்.

1174 கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை 572 58 2

தாட்சண்யமே உலகுக்கு நல்லது; இல்லாமையே பயனற்றதுவாம்.

1175 சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை 990 99 10

நிறைகுணமுடையவர் இயல்பு குன்றினால் பூமி பாரம் தாங்காது.

1176 ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை 1003 101 3

பொருளை விரும்பிப் புகழை விரும்பாதார் பூமிக்குப் பாரமாம்.

1177 அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை 1027 103 7

போரைத்தாங்கும் பொறுப்பு வலிமையுடையவர்க்கே; அதுபோல் குடியினைத்தாங்கும் பொறுப்பு அக்குடிப் பிறந்தாருள் வல்லவர்க்கேயாம்.

## 301. பொறுத்து – 1

1178 உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து 1032 104 2

பிற தொழிலாளர்க்கு உணவு கொடுத்தலால் உழவர் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணி போல்வர்.

## 302. போழ்து – 2

1179 **ப**திமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து 1229 123 9

கண்டால் மயங்கும் வகை மாலைப்போது வருங்கால் இவ்வூரில் உள்ளார் அனைவரும் மயங்கி வருந்துவர், (யான் இறந்துபடுவேன்.)

1180 **இ**கழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து 539 54 9

ஒருவர் மகிழ்ச்சியில் ஆழ்ந்து செய்யவேண்டியதை மறந்தால் கெட்டுவிடுவார்.

## 303. மகற்கு – 1

1181 **எ**ந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு 110 11 10

பிறர் செய்த நன்றியை மறந்த பாவத்திற்குப் பரிகாரம் கிடையாது.

## 304. மடல் – 1

1182 **நா**ணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடை
காமுற்றார் ஏறும் மடல் 1133 114 3 [யேன்

நாணமும், ஆண் தன்மையும் முன் உடைய நான் இன்று மடலேறும் நிலையில் உள்ளேன்.

## 305. மடி – 1

1183 **ஆ**கூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி 371 38 1

ஒருவனுக்கு நல்வினையால் முயற்சியும் தீவினையால் சோம்பலும் உண்டாகும்.

## 306. மதி – 3

1184 **மா**தர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி 1118 112 8

மதியே, வாழ்க; என் காதலியின் முகம்போல் ஒளி வீசக்கூடுமாயின் நீயும் அன்புக்குரியை ஆவாய்.

1185 மலர்அன்ன கண்ணுள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி 1119 112 9

என் காதலியின் முகத்துக்கு நீ ஒப்பாகவேண்டு மெனில் மதியே, நீ, பலருக்குக் காணுதிருப்பாயாக.

1186 விடாஅது சென்ருரைக் கண்ணிஞல் காணப்
படாஅதி வாழி மதி 1210 121 10

மதியே, என் காதலரால் சேர்க்கப்பட்ட உன்னையாவது யான் என் கண்ணுல் கண்டு மகிழ்ந்திருக்குமாறு நீ மறையாதிருப்பாயாக,

## 307. மருண்டு – 1

1187 அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு 1139 114 9

அடங்கி நிற்பதனுல் பலரும் அறியவில்லையெனக் கருதி என் காமம் தெருவிடை வெளிப்பட்டுத் திரிகின்றது.

## 308. மருந்து – 4

1188 உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து 950 95 10

நோயாளன், மருத்துவன், மருந்து, செயல் ஆற்றுபவன் என நான்கு வகையாய் அமைந்ததே மருந்து.

1189 இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து 1091 110 1

இவள் கண்கள் இருவகையான பார்வை உடையன. ஒன்று, துன்புறுத்துவது; மற்ருென்று, அதற்கு மருந்து போல்வது.

1190 பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து 1102 111 2

வாத முதலிய நோய்கட்கு மருந்து, காரணத்துக்கு மாருன இயல்பையுடையன; இந்நங்கை தன்னுல் உண்டான (காம) நோய்க்கு மருந்து தானே.

1191 நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து 1241 125 1 [றும்

மனமே, தீராத என் காம நோயைத் தீர்க்கும் மருந்தாக யாதாவது ஒன்றை நீயாவது நினைத்துச் சொல்லமாட்டாயா?

## 309. மழை – 3

1192 துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை 12 2 2

*உணவுப் பொருள்களை உண்டாக்கித் தானும் உணவாக அமையும் சிறப்பினை உடையது மழை.*

1193 கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லாம் மழை 15 2 5

*ஆக்குவதும் அழிப்பதும் ஆகிய எல்லாம் வல்லது மழை.*

1194 தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை 55 6 5

*கணவனையே தெய்வமாகக் கொண்டவள் பெய் யென மழை பெய்யும்.*

## 310. மறை – 2

1195 சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை 590 59 10

*ஒற்றனுக்கு அரசன் வெளிப்படையாகச் சிறப்புச் செய்தல் ஆகாது. அவ்வாறு செய்தால் இரகசியத்தை வெளிப்படுத்துவதாகும்.*

1196 எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை 695 70 5

*அரசன் ஒருவரோடு மறைவாகப் பேசுவதனைக் காதுகொடுத்துக் கேட்டலும், அது என்ன என வினவலும் ஆகா; அவனே சொன்னால் கேட்டுக்கொள்க.*

## 311. மற்று - 2

1197 உடையர்எனப் படுவது ஊக்கம்அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று 591 60 1

*ஒருவருக்கு உடையது என்பது ஊக்கமேயாம்; இல்லாதவர் வேறு உடையரானாலும் உடையவராகார்.*

1198 இனியன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று 1294 130 4

*மனமே, நீ அவரைக் கண்டவுடன் இன்பம் அனுபவிக்கக் கருதுகிருய்; பிணங்குவாயல்லே; இத்தகைய உன்னேடு யான் இனி யோசியேன்.*

## 312. மனம் – 1

1199 படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம் 253 26 3

*கொலேக் கருவியைக் கையில் கொண்டவர் மனம் நன்மையை நாடாததுபோல் ஊன்உண்பார் மனம் அருளே நாடாது.*

## 313. மன் – 3

1200 பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் 996 100 6

*பண்புடைய பெரியார் துணேயிஞலேயே உலகியல் நடைபெறுகின்றது. இல்லேயேல் உலகம் சுடுகாடு ஆகி விடும்.*

1201 கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின்கலந் தார்க்கு
உயல்உண்மை சாற்றுவேன் மன் 1212 122 2

*கண்கள் என் வேண்டுதலுக்கிரங்கி உறங்கிஞல் கனவில் காதலரைக் காண்பேன்; கண்டால் யான் பொறுத்திருக்கும் வகையினே அவர்க்கு உரைப்பேன்.*

1202 நனவென ஒன்றில்லே யாயில் கனவிஞல்
காதலர் நீங்கலர் மன் 1216 122 6

*நனவு என்னும் பாவி இல்லேயாஞல் கனவில் கூடியவர் பிரியார்.*

## 314. மாட்டு - 5

1203 இருள்சேர் இருவினேயும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு 5 1 5

*இறைவனேப் போற்றுபவர்களேப் பாவ புண்ணியங்கள் பற்ரு.*

1204 **ந**கையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு 995 100 5

*விளையாட்டிலும் இகழ்ச்சி ஒருவனுக்குத் துன்பம் தருவதாகும். ஆதலால் பிறர் இயல்பு தெரிந்து ஒழுகுபவரிடத்து பகை உள்ளபோதும் பிறரை இகழும் குணம் உண்டாகாது. இனிய பண்புகளே உளவாகும்.*

1205 **து**ன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு 188 19 8

*நண்பரைப்பற்றியே குறைகூறுபவரிடம் அயலார் மிக விழிப்பாயிருக்கவும்.*

1206 **இ**ரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு 1054 106 4

*தமக்குள்ளதை மறைத்தலை கனவிலும் கருதாத இயல்புடையாரிடத்துச் சென்று ஒன்றை யாசித்தாலும் கொடுத்தலே போன்ற சிறப்புடைத்தாம்.*

1207 **அ**றிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு 1110 111 10

*நூல்களாலும் அறிவாலும் பொருள்களை அறிய அறிய முன்பு தனக்கிருந்த அறியாமை புலனாவது போல, இந்நங்கையை நெருங்க நெருங்க முன் பெற்ற இன்பம் சிறிதாகி அப்போதைய இன்பம் வளர்கின்றது.*

## 315. மார்பு – 2

1208 **இ**ளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு 1288 129 8

*இழிவைத்தரினும் கள் உண்பவர்க்கு இனிதாவது போல, கள்வனே, நின் மார்பு எனக்கு இனிதாயிற்று,*

1209 **பெ**ண்ணியலார் எல்லாரும் கண்ணில் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு 1311 132 1

*பரத்தமை உடையவனே, பெண்ணென உள்ளவரெல்லாம் கண்ணினால் உன் அழகை பொதுவாக உண்பார்கள். ஆதலால் எச்சிலாகிய உன் மார்பினைக் கூடேன். (பரத்தமை — பிறரை விரும்பும் தன்மை.)*

## 316. மிகை – 1

1210 **ம**ற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்ருர்க்கு உடம்பும் மிகை 345 35 5

*பிறப்பை ஒழிக்கத் துறவு பூணடவர்க்கு உடம்பே ஒரு சுமை. ஆகவே வேறு பற்றுக்கொள்ளுதல் விபரீத மாகும்.*

## 317. மிகும் – 3

1211 **நு**ண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் 373 38 3

*எவ்வளவு உயர்ந்த நூல்களை ஒருவன் கற்ருலும் அவனுக்கு இயற்கையில் அமைந்த அறிவே வலிமை யுடையதாகும்.*

1212 **க**ளித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும் 928 93 8

*கள்ளுண்டறியேன் என்று உண்ணுதபோது கட் குடியன் கூறுதலை தவிர்க; உண்டபோது குற்றமென்பது மறக்கப்பட்டு அதனை வெளிப்படுத்திவிடும்.*

1213 **ம**றைப்பேன்மன் யானி:்தோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும் 1161 117 1

*என் காமத்தை பிறர் அறிதலுக்கு நாணி மறைப்ப தானேன்; அஃதோ, இறைப்பார்க்கு ஊற்று நீர் போல மிகுவதாயிற்று*

## 318. மீன் – 1

1214 **ம**தியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன் 1116 112 6

*வானத்து நிலவிற்கும் காதலியின் முகத்திற்கும் வேறுபாடு காணுது, விண்மீன்கள் நிலைகலங்கின.*

## 319. முகத்து – 1

1215 **அ**றுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து 1117 112 7

*குறைவு, நிறைவு மதியிடம், அமைந்துள்ளதுபோல இந்நங்கையின் முகத்தில் மறு உண்டோ? இல்லை.*

## 320. முகம் – 1

1216 அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் 706 71 6

*தன்னைச்சார்ந்த பொருளைக் காட்டும் கண்ணாடி போல ஒருவன் மனத்துள்ளதை அவன் முகம் காட்டும்.*

## 321. முந்து – 1

1217 மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து 603 61 3

*சோம்பலுடையவன் குடி அவனுக்கு முன்பே அழியும்.*

## 322. – முயக்கு – 3

1218 ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு 918 92 8

*வடிவு, சொல், செயல் இவைகளால் வஞ்சிக்கும் விலைமகளிர் கூட்டுறவு, ஆராயும் அறிவில்லார்க்கு காமத்தால் உயிர் கவரும் தெய்வமகள் கூட்டுறவு போல். (அணங்கு — காமவெறியால் களவிடை தாக்கும் தெய்வ மகள்.)*

1219 தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு 1107 111 7

*இந்நங்கையின் கலவி இன்பம், தம் உரிமை வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளை பிறர்க்குப் பங்கிட்டு உண்டு வாழ்வதால் அடையும் இன்பத்தை ஒத்ததாகும்.*

1220 வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு 1108 111 8

*ஒத்த அன்புடைய இருவர்க்குப் பிரியாத கூட்டுறவு பேரின்பம் தருவதாகும்.*

## 323. முறை – 1

1221 ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை 541 55 1

*குற்றம் செய்தாரை ஆராய்ந்து தாட்சண்யமின்றி எல்லாரிடமும் நடுவு நிலைமையுடன் உரிய தண்டனையை விதிப்பதே முறையாகும்.*

### 324. – மூன்று 2

1222 **அ**ன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றியமை யாத மூன்று 682 69 2

*அன்பும், அறிவும், பேச்சுத்திறமும் தூதுவர்க்கு இன்றியமையாததுவாம்*

1223 **மி**கினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா யெண்ணிய மூன்று 941 95 1

*உணவு, செயல் ஒருவன் உடம்பிற்கு ஏற்றவாறன்றி மிகுந்தாலும் குறைந்தாலும் வாத பித்த சிலேத்துமங்களால் நோய் உண்டாகித் துன்பம் செய்யும்.*

### 325. மேல் 1

1224 **இ**லக்கம் உடம்பு இடும்பைக்குஎன்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதாம் மேல் 627 63 7

*உடம்புகள் துன்பத்துக்குரியவை என்பதைத் தெரிந்து, அறிவுடையார் துன்பம் வந்தபோது வருந்தார்.*

### 326. யாங்கு 1

1225 **அ**ருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு 247 25 7 [லார்க்கு

*பொருளில்லாருக்கு இவ்வுலக இன்பம் இல்லை; அருளில்லாருக்கு மேல் உலக இன்பம் இல்லை.*

### 327. யான் – 4.

1226 **பி**றப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் 972 98 2

*பிறப்பினுல் எல்லா மக்களும் ஒத்த தன்மையுடையவர்களே; ஆனுலும் அவரவர்கள் தொழில் வேறுபாட்டால் சிறப்பில் ஒப்புடையராகார்.*

1227 **சொ**ல்வணக்கம் ஒன்னுர்கண் கொள்ளற்க வில்வணக்
தீங்கு குறித்தமை யான் 827 83 7 [கம்

*வில்லினது வணக்கம், தீமையின் அறிகுறி; பகைவரது சொல், தீமைக்கு அறிகுறி.*

1228 **இ**ரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான் 1062 107 2

*இவ்வுலகத்தைப் படைத்த கடவுளும், சிலரை யாசித்துப் பிழைக்குமாறு படைத்தான் என்றால் அக் கொடிய கடவுளும் அவ்வியாசகர் போன்று வருந்திக் கெடுவானாக.*

1229 **அ**ரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோர் இடத்துண்மை யான் 1153 116 3

*தம் சொல்லும், நம் துன்பமும் அறிந்த தலைவரிடமும் பிரியும் செயல் ஓரளவு நிகழ்தலால் அவர் அன்பை நம்புதல் அரிதாகின்றது.*

## 328. வடு – 1

1230 **தீ**யினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு 129 13 9

*தீயாற் சுட்ட புண் ஆறும்; நாவாற் பிறரை வருத்திய வருத்தம் ஆறாது.*

## 329. வரல் – 1

1231 **த**ம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல் 1205 121 5

*தம் மனத்தில் யாம் புகாமல் காவல் செய்தவர் எம் மனத்தில் இடைவிடாது வருதலைக் குறித்து நாணுவரோ?*

## 330. வரின் – 4

1232 **ம**யிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் 969 97 9

*தன் மயிர்த்தொகையிலிருந்து ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாது கவரிமான்; தம் மானத்துக்கு கேடு வந்தபோது உயிர்விடுவார்கள் அறிஞர்கள்.*

1233 **இ**ன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின் 1052 106 2

*யாசித்த பொருள்கள் துன்பம் இன்றி வரக்கூடுமாயினும் அதுவும் ஓர் இன்பமாம்.*

1234 புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்
கண்ணன்ன கேளிர் வரின் 1267 127 7 [கொல்

*என் கண்ணை ஒத்த காதலர் வந்தால் பிணங்குவேனோ? அணைப்பேனோ? இரண்டையும் செய்வேனோ? யாது செய்யக் கடவேன்.*

1235 திணைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின் 1282 129 2

*மகளிர்க்கு காமம் மிகுதியாயின், சிறிதும் பிணங்காதிருத்தல் வேண்டும்.*

## 331. வரும் – 13

1236 தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும் 63 7 3

*நன்மக்களே ஒருவர்க்குச் சிறந்த பொருளாகும்.*

1237 ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தால் வரும் 264 27 4

*பகைவரை அழித்தலும், நண்பரை ஆக்கலும் ஆகிய ஆற்றல் தவமுடையானுக்கு உளதாம்.*

1238 மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனல் வரும் 303 31 3

*கோபத்தினல் தீமை உண்டாகும். ஆதலால் வலியார், மெலியார், ஒப்பார் எவரிடத்தும கோபம கொள்ளாது விடுக.*

1239 பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும் 319 32 9

*ஒருவன் பிறருக்குத் தீமைகளை நாளின் முற்பகலில் செய்தால் தனக்கு பிற்பகலில் அத்தீமையே வரும்.*

1240 வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் 362 37 2

*அறிவுடையவன் விரும்பினல், பிறவாமையையே விரும்புவான். அங்கிலை, ஒன்றையும் விரும்பாமையையே கொண்டால் வாய்க்கும்.*

1241 **தூ**உய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும் 364 37 4

*ஆசை இல்லாமையே மனத்தூய்மையின் அடையாளம். அங்கிலே, உண்மையைக் கடைப்பிடிக்க வரும்.*

1242 **அ**வாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும் 367 37 7

*ஆசையை அறவே ஒழித்தால் மேற்கொண்ட செயல் எண்ணியபடியே கைகூடும்.*

1243 **அ**வாவில்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் 368 37 8

*ஆசையில்லையேல் துன்பம் இல்லை; ஆசை உண்டானால் துன்பம் மேன்மேல் வரும்.*

1244 **ம**னந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் 455 46 5

*ஒருவனுக்கு மனத் தூய்மையும் செயல் தூய்மையும் சேரும் இனத்தைப் பொறுத்தது.*

1245 **த**மராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும் 529 53 9

*உறவினராய் இருந்து தம்மைவிட்டுப் பிரிந்தவர், அப்பிரிவுக்கான குற்றம் நீங்கியவுடன் மீட்டும் வந்து சேர்வார்.*

1246 **இ**ன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் 1042 105 2

*வறுமையாகிய பாவி, ஒருவனை அடைந்தால் இம்மை, மறுமை இன்பங்கள் இல்லை.*

1247 **ப**னிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும் 1223 123 3

*காதலர் கூடியிருந்தபோது குளிர்ச்சி தந்த மாலைக் காலம் இப்போது துன்பத்தைத் தருகிறது.*

1248 **கா**தலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும் 1224 123 4

*காதலர் உள்ளபோது யான் மகிழ வந்த மாலை இப்போது கொலைஞர்போல் வருகின்றது.*

### 332. வரைத்து – 1

1249 உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து 105 11 5

*உதவியின் மதிப்பு, ஏற்றுக்கொள்பவர் தகுதியைப் பொறுத்தது.*

### 333. வலி – 1

1250 காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி 1131 114 1

*இன்பத்தை மகளிரிடம் அடைந்து பின் அதுபெற முடியாததற்கு மடலேறுதலை விட்டு வேறு வழியில்லை.*

### 334. வழக்கு 2

1251 எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு 991 100 1

*யாவர்க்கும் எளிய நிலை உடையனக வாழ்வதால், பண்புடைமையைப் பெறலாம்.*

1252 அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு 992 100 2

*அன்புடைமையும், உயர்குடிப் பிறந்தார் செயலும் பண்புடையாருக்கு உண்டாகும்.*

### 335. வழி – 4

1253 அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி 846 85 6

*தம் குற்றம் தெரிந்து விலக்காவிடில் சிற்றறிவுடையார், ஆடையால் தம் மானத்தை மறைத்தவராகக் கருதுவது அறிவுக் குறையேயாகும்.*

1254 துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி 1299 130 9

*தம்முடைய மனம் துணை செய்யாவிடில் துன்பத்தைப் போக்க பிறர் துணையால் முடியாது.*

1255 தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமர்அல் வழி 1300 130 10

*தம்முடைய மனம் ஒருவருக்கு உறவாகாதபோது அயலார் உறவாகாமை வியப்பன்று.*

1256 **நோ**தல் எவன்மற்று நொந்தாரென்று அஃதறியும்
காதலர் இல்லா வழி 1308 131 8

இவர் நம்பொருட்டு வருந்தினர் என்று உணரும் அன்புடையாரைப் பெறுதபோது ஒருவர் வருந்துவதிற் பயன் என்ன ?

## 336. வளை – 2

1257 **து**றைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை 1157 116 7

தலைவன் என்னைப் பிரிந்த தன்மையை என் முன் கையை விட்டு கழலும் வளைகளே அறிவிக்குமே; நீ அறிவித்தல் வேண்டுமோ ?

1258 **த**ண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை 1277 128 7

தலைவன் உடம்பால் நம்மைக் கூடியிருந்தே மனத்தால் நம்மைப் பிரிந்தமையை நமக்கு முன்னே கைவளைகள் அறிந்துகொண்டன.

## 337. வன்கணவர் – 1

1259 **ஈ**த்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் 228 23 8

பிறருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாதவரே பொருளைச் சேர்த்துவைத்து மடிவார்.

## 338. வாறு – 4

1260 **ந**யனுடையான் நல்கூர்ந்தான் ஆதல்செயும் நீர
செய்யாது அமைகலா வாறு 219 22 9

பிறருக்கு இதம்புரியும் இயல்புடையானுக்கு அது செய்யமுடியாத நிலையே வறுமை நிலையாகும்.

1261 **யா**தானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு 397 40 7

கற்றவனுக்கு எந்த நாடும் எந்த ஊரும் சொந்தமாகும். இங்ஙனமாகவும் ஒருவன் கல்லாது கழிவது எதனால் ?

1262 **கா**ணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு 849 85 9

பிறர் கூறி அறியும் இயல்பு இல்லாத புல்லறிவாளனுக்கு அறிவுகூறப் புகுவான், அறியாதவனாவான். அப்புல்லறிவாளன் அறிந்தவனாவான்.

1263 யாம்கண்ணில் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு 1140 114 10

யாம் பட்ட துன்பத்தை தாம் அடையாததால் அறி வில்லாதவர் எம் கண்ணிற்படுமாறு சிரிக்கின்றனர்.

## 339. விடல் – 18

1264 இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் 314 32 4

துன்பம் செய்தவருக்கு நன்மையைச் செய்து, அத் துன்பத்தையும் தான் செய்த நன்மையையும் மறப்பதே, துறந்தார் தீமைசெய்தாரைத் தண்டிக்கும் வழியாகும்.

1265 இதனை இதனுல் இவன்முடிக்கும் என்றுய்ந்து
அதனை அவன்கண் விடல் 517 52 7

இச்செயலை இன்ன காரணத்தால் இவன் செய்து முடிப்பான் என்பது தெரிந்து அச்செயலை அவனிடத்து விடல் வேண்டும்.

1266 வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல் 697 70 7

அரசன் விரும்புவனவற்றை அவன் கேளாதிருப்பினும் சொல்லி பயனில்லாதவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுதல் வேண்டும்.

1267 நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் 113 12 3

நடுவு நிலைமை தவறிப் பெறக்கூடிய செல்வத்தைக் கொள்ளலாகாது.

1268 மிகுதியால் மிக்கவை செய்தாரை தாம்தம்
தகுதியால் வென்று விடல் 158 16 8

நெறி தவறித் தமக்குத் தீமை செய்தாரைத் தண்டித்த லாவது தாம் நெறி தவருது ஒழுகுதலாம்.

1269 அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் 203 21 3

பகைவருக்கும் தீமை செய்யாமலிருப்பதே தலைசிறந்த அறிவாகும்.

1270 **ப**ல்லார் பகைகொளலில் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல் 450 45 10

பெரியவருடைய நட்பைக் கொள்ளாது விடுதல் பலருடைய பகைமையைக் காட்டிலும் பத்து மடங்கு தீமையுடையதாம்.

1271 **அ**ருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் 755 76 5

தம் குடிகளிடம் செலுத்தும் அருளுடனும் அவர் தம்மிடம் செலுத்தும் அன்புடனும் வாராப் பொருளை அரசர் கொள்ளாது விடுக.

1272 **ஊ**தியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 797 80 7

அறிவில்லாதவருடன் கொண்ட நட்பை விட்டு விலகுவது பெரும் பேருகும்.

1273 **ஒ**ல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல் 818 82 8

தம்மால் முடியும் காரியத்தை முடியாமற் செய்வார் நட்பை அவரிடம் சொல்லாமலே விடுக.

1274 **ப**கைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல் 830 83 10

தம் பகைவர் தம் நண்பராக நடக்கும் காலத்து தாமும் அவரோடு முகத்தால் நட்புக்காட்டி மனத்தால் தவிர்க.

1275 **பே**தைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல் 831 84 1

தனக்குக் கேட்டைக் கைக்கொண்டு நன்மையைக் கைவிடுவதே பேதைமையாகும்.

1276 **தே**றினும் தேரு விடினும் அழிவின்கண்
தேருன் பகாஅன் விடல் 876 88 6

பகைவனை, முன்பு ஆராய்ந்து தெளிந்தவனாயினும் தெளியாதவனாயினும் தனக்குத் தாழ்வு வந்தபோது கூடாமலும் விலக்காமலும் இடைநிலையில் வைக்க.

1277 **ப**யன்தூக்கி பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல் 912 92 2

நற்குணமில்லாத வேசையரை சேராது விடுக.

1278 இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல் 961 97 1

செய்யாமல் தீராத சிறப்பினையுடைய செயல்களாயினும் தம் குடிப்பிறப்பின் பெருமைக்கு ஏலாதனவற்றைச் செய்தல் ஆகாது.

1279 பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல் 979 98 9

காரணம் உண்டானபோதும் செருக்கு இல்லாமல் இருப்பதே பெருமைக் குணமாம்; செருக்குக் கொள்வது சிறுமைக் குணமாம்.

1280 உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் 1302 131 2

ஊடல் கலவி இன்பத்துக்கு உப்புப்போலும். அவ்வூடலை நீட்டுவது உப்பு மிக்கதுபோலுமாம்.

1281 அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல் 1303 131 3

தம்மிடம் ஊடல் கொண்ட மகளிரை அவர் ஊடல் நீக்கி அணையாது விடுதல் துன்பத்துக்குமேல் துன்பம் செய்வதாகும்.

## 340. விடற்கு — 1

1282 பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு 350 35 10

உலகப் பொருள்களின் மீதுள்ள பற்றினை விடுவதற்கு ஒரு பற்றும் இல்லாத இறைவனைப் பற்றுக்கோடாகக் கொள்ளல் வேண்டும்.

## 341. விடின் — 3

1283 நெடுங்கடலுந் தன்நீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின் 17 2 7

மேகம் மழை பெய்யாவிடில் பெரிய கடலும் தன் இயற்கை கெடும்.

1284 வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின் 238 24 8

உலக மக்களுக்குப் பிறரால் புகழ் பெறுமையே பழிக்கு உரிய நிலையாம்.

1285 மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

தீய ஒழுக்கம் இல்லாதிருந்தால் மொட்டையடித்தலும் சடை வளர்த்தலும் ஆகிய வேடங்கள் துறவிகளுக்கு வேண்டாவாம்.

## 342. விடும் – 17

1286 நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் 28 3 8

துறவிகள் பெருமையை உலகில் கூறப்பட்ட மந்திர மொழிகள் விளக்கிக் காட்டும்.

1287 அடக்கம் அமரருள் உயக்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் 121 13 1

அடக்கம் ஒருவரை தேவருலகிற் சேர்க்கும்; அடங்காமை நரகத்திற் சேர்க்கும்.

1288 ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும் 128 13 8

ஒருவன் பேசும் சொற்களில் ஒன்று குற்றமுடையதானாலும் அது தீமையை உண்டாக்கும்.

1289 ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் 133 14 3

ஒழுக்கமே உயர்ந்த குடும்பத்திற்கு அடையாளமாகும்.

1290 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும் 167 17 7

பொறாமையுடையவன் வறுமையடைவான்.

1291 அழுக்காறு என ஒருபாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் 168 17 8

பொறாமையுடையவன் இம்மையில் செல்வம் இழந்து மறுமையில் நரகம் அடைவான்.

1292 சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும் 451 46 1

பெரியார் கீழ்மக்களைச் சேர அஞ்சுவார்கள்; கீழ்மக்கள் அதனை விரும்பிச் சேர்வார்கள்.

1293 நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும் 476 48 6

ஒரு மரக்கிளையின் நுனியில் ஏறினவர் மேலும் ஏறினல் உயிருக்குக் கேடாய் முடியும். (பகைவர்மேற் செல்பவன் அளவறிந்து நில்லாது சென்ருல் அழிவான்.)

1294 சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும் 498 50 8

சிறு படையுடைய அரசனுக்குக் காவலான இடத்தில் பெரும் படையுடையவன் சென்ருல் பெருமையிழப்பான்.

1295 முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும் 535 54 5

துன்பங்கள் வருமுன் காக்க மறந்தவன் பின்னர் இரக்கப்படுவான்.

1296 உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும் 592 60 2

ஊக்கமே நிலைத்த உடைமை; பொருளுடைமை நிலைத்து நில்லாது.

1297 மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும் 608 61 8

சோம்பல் அடையுமாயின் அஃது பகைவருக்கு அடிமையாக்கிவிடும்.

1298 முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் 616 62 6

முயற்சி, செல்வத்தை வளர்க்கும்; முயற்சி இல்லாமை வறுமையை உண்டாக்கும்.

1299 செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் 1039 104 9

நிலத்துக்குரியவன் நாள் தோறும் சென்று பார்த்து வேண்டுவன செய்யானுயின் அந்நிலம் மனையாள்போல வெறுத்துப் பிணங்கிக்கொள்ளும்.

1300 அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும் 980 98 10

பெரியார், பிறர் அவமானத்தை மறைத்து மானத்தைக் கூறுவர்; சிறியார், பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தைக் கூறுவார்.

1301 இரவு என்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும் 1068 107 8

வறுமைக் கடலைக் கடப்பதற்கு ஒருவன் ஏறிய யாசகம் என்னும் தோணி, செல்வர் ஒளித்தல் என்னும் பார் நிலம் தாக்க அழிந்துபோகும்.

1302 மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும் 1253 126 3

காமத்தை யான் மறைக்க எண்ணுவேன். ஆயினும் இஃது அடங்காது வெளிப்பட்டுவிடுகின்றது.

## 343. வித்து – 2

1303 உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து 24 3 4

ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கியாள வல்லவன் வீட்டுலகில் இடம் பெறுவான்.

1304 அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து 361 37 1

ஆசையே எல்லா உயிர்களுக்கும் எக்காலத்தும் பிறப்பை உண்டாக்கும் விதையாகும்.

## 344. வியந்து – 1

1305 பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து 978 98 8

பெருமையுடையவர் எந்நிலையிலும் அடங்கி வாழ்வார் சிறுமையுடையவர் செருக்கி வாழ்வார்.

## 345. விரல் – 1

1306 வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல் 1261 127 1

தலைவர் பிரிந்த நாள்களைக் குறித்துச் சுவரின் கோடுகளைத் தொட்டுத்தொட்டு எண்ணி கை விரல்கள் தேய்ந்தன; வரும் வழி பார்த்துக் கண்களும் ஒளி இழந்தன.

## 346. விருந்து – 3

1307 மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து 90 9 10

அனிச்சப்பூ மோந்தால் வாடும்; விருந்தினரோ மாறு பட்ட பார்வையாலே வாடிவிடுவர், ஆதலால் விருந்தினரை பக்குவமாக உபசரிக்கவும்.

1308 காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து 1211 122 1

காதலர் விடுத்த தூதினைக் கொணர்ந்த கனவினுக்கு யான் எவ்வகை விருந்து செய்வேன்.

1309 வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து 1268 127 8

வேந்தன் போர் செய்து வெல்வானாக; வீட்டை யடைந்து அங்கு யானும் என் மனைவியுமாக மாலைப் பொழுதுக்கு விருந்து நடத்துவோம்.

## 347. விரைந்து – 2

1310 எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து 1080 108 10

ஏதேனும் துன்பம் தம்மை அடைந்தபோது விரைந்து தம்மை பிறர்க்கு அடிமையாக்குவர் கீழ்மக்கள்.

1311 துஞ்சுங்கால் தோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தார் ஆவர் விரைந்து 1218 122 8

என்காதலர் யான் உறங்கும்போது மார்பிடத்தாராய் விழிக்கும்போது விரைந்து மனத்தகத்தராவார்.

## 348. விளக்கு – 1

1312 எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு 299 30 9

துறவிகளுக்கு அகத்திருள் போக்கும் மெய்மை என்னும் விளக்கே விளக்காகும்; ஏனை உலகத்தார் விளக்குகள் விளக்காகா.

## 349. வினை – 10

1313 **ம**ன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை 244 25 4

பிற உயிர்களைப் போற்றி அருள் செய்வார் தம் உயிருக்கு அஞ்சவேண்டியதில்லை.

1314 **த**ன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை 327 33 7

தன்னுயிர் போவதாயினும் மற்றோர் இனிய உயிரைப் போக்கும் தொழிலை ஒருவன் செய்யாது விடுக.

1315 **வி**யவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை 439 44 9

தான் எவ்வளவு உயர்ந்தபோதும் செருக்கு கொள்ளலாகாது; நன்மை தராத செயல்களை எக்காரணத்தாலும் செய்யலாகாது.

1316 **ம**னந்தூயார்க்கு எச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லை நன்றாகா வினை 456 46 6

தூய மனமுடையார்க்கு நன்மக்கள் தோன்றுவர். அதுபோல தூயவர் இனத்தைச் சார்ந்தவர்க்கு எல்லாம் நல்லனவாகும்.

1317 **வா**ரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை 512 52 2

செல்வங்களை வளர்த்து அவைகளின் இடையூறுகளை நீக்க வல்லவனே அரச காரியத்துக்கு உரியவன்.

1318 **எ**ன்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை 652 66 2

புகழும் அறமும் தராத செயல்களை ஒருவன் செய்யாமை வேண்டும்.

1319 **ஈ**ன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை 656 66 6

தாயின் பசியைப் போக்கவும் ஒருவன் தவறான செயல்களைச் செய்யலாகாது.

1320 **து**ன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை 669 67 9

முதலில் துன்பம் தருமாயினும், இன்பம் தரக்கூடிய செயலையே செய்க.

1321 **தூ**ங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை 672 68 2

தாமதித்து செய்யவேண்டுவதை தாமதித்தும், விரைவில் செய்யவேண்டுவதை விரைந்தும் செய்க.

1322 **கு**ன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்
உண்டாகச் செய்வான் வினை 758 76 8 [தொன்று

பொருளுடையவன் மேற்கொண்ட செயல் மலைமேல் ஏறி நின்று யானைப் போரைக் காண்பவன் செயல்போல இனிதாக முடியும்.

## 350. வினைக்கு – 1

1323 **அ**றிவுருவு ஆராய்ந்த கல்வி யிம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு 684 69 4

இயற்கை அறிவும், தோற்றப் பொலிவும், ஆராய்ந்த கல்வியும், மூன்றும் உடையவனே தூது செல்ல ஏற்றவனும்.

## 351. வெளிறு – 1

1324 **அ**ரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு 503 51 3

நூல்களைக் கற்றுக் குற்றமற்றவர்களிடத்தும் ஏதேனும் குறை காணப்படும். ஆகவே நன்கு தேர்தல் வேண்டும்.

## 352. வேண்டாதார் – 1

1325 **உ**ண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா தார் 922 93 2

அறிவுடையார் கள்ளை உண்ணாது விடுக; நல்லவர் மதிப்பை வேண்டாதார் உண்பார்கள்.

## 353. வேந்து – 2

1326 **கொ**லைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற் கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து 551 56 1

பொருளை விரும்பிக் குடிகளைத் துன்புறுத்தும் அரசன் கொலை செய்வாரைவிடக் கொடியவனாவான்.

1327 **த**க்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து 561 57 1

மெலியவரை வருத்தப் புகுவானைத் தக்கவகையில் ஆராய்ந்து மேலும் அது செய்யாமல் தண்டிக்க வல்லவனே அரசனாவான்.

## 354. வேறு – 3

1328 **இ**ருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு 374 38 4

செல்வம் உடையவராவதற்கும், அறிவுடையவராவதற்கும் அமைந்த நிலைகள் வேறு வேறாக உள்ளன.

1329 **உ**ரம்ஒருவற்கு உள்ள வெறுக்கைஅஃது இல்லார்
மரம் மக்கள் ஆதலே வேறு 600 60 10

ஒருவனுக்கு ஊக்கம் மிகுதியே சிறந்த அறிவாகும் அல்லாதார் மரங்களாம்.

1330 **கு**றித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்போர் அனையரால் வேறு 704 71 4

ஒருவன் மனத்தில் எண்ணியதனை அவன் கூறாமல் அறிய வல்லவனோடு உறுப்பளவில் மற்ற மக்கள் ஒப்பாயினும் சிறப்பால் ஒப்பாகார்.

***தொகுப்புத் திருக்குறளும்***
***கருத்துரையும்***
***முற்றுப்பெற்றது.***

தமிழ்த்தாய் வாழ்க!

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

வள்ளுவர் வாய்மொழி வாழ்க!

# தொகுப்புத் திருக்குறள் சித்திர அகராதியின் பிற்சேர்க்கை.

கேள்வித் திருக்குறள் – 82

9 புலத்தலில் புத்
69 புறத்துறுப் பெல்
78 வாளொடென் வன்
105 அற்றேம் என் று
114 இழைத்தது இக
134 துப்பின் எவன்
135 யாமும் உளேம்
138 செற்றார் எனக்கை
139 இடிக்கும் துணை
143 எச்சமென் றென்
148 மதிநுட்பம்
211 அவர்நெஞ்சு
296 நீங்கில் தெறூஉம்
352 ஊடிப் பெறுகுவம்
357 சிறப்பீனும் செல்
360 ஏதிலார் குற்றம்
366 கரப்பவர்க்கு யாங்
374 பாடு பெறுதியோ
399 தாவீழ்வார் மென்
412 ஊழிற்பெருவலி
414 முகத்தின் முதுக்கு
425 அறத்தாற்றின்
426 புகழ்பட வாழா
427 நன்றாங்கால் நல்ல
428 தெரிந்துணரா
434 நிணந்தீயில் இட்
437 கற்றதனா லாய
457 செல்லிடத்துக்
458 செவியிற் சுவை
459 உறின்நட்டு
495 அறிவினால் ஆகுவ
502 பழகிய நட்பெவன்
507 ஈவார்கண் என்
508 அலர்நாண வல்வ
509 நாம்காதல் கொண்
512 குறிப்பில் குறிப்
513 பண்ணென்னாம்
514 உளபோல் முகத்
522 பேணாது பெட்டார்
544 ஈன்றாள் முகத்தே
553 செயற்கரிய யாவுள
556 பெறின் என்னாம்
596 ஒலித்தக்கால் என்
601 நினைப்பவர்
638 இன்னா செய்தார்க்
654 மறப்பின் எவன்
659 தன்னுயிர்க்கு
704 கெட்டார்க்கு நட்
709 வகைமாண்ட
743 பிணையேர்
748 அன்பிற்கும்
784 சிறைகாக்கும்
802 துறந்தார்க்குத்
804 அளித்து அஞ்சல்
818 தொடில் சுடின்
835 புன்கண்ணை வாழி
838 செற்றவர்பின்
933 புகழ்இன்றால்
957 கலந்துணர்ந்தும்
959 உள்ளத்தார்
988 காலைக்குச் செய்த
1001 வானுயர் தோற்றம்
1054 பன்மாயக் கள்வன்
1102 நயந்தவர்க்கு நல்
1112 நனவினால் நல்காக்
1113 எனைத் துணைய
1123 வித்தும் இடல்
1124 உய்த்தல் அறிந்து

1191 நினைத்தொன்று
1198 இனியன்ன நின்
1205 துன்னியார் குற்ற
1210 மற்றும் தொடர்ப்
1215 அறுவாய்
1231 தம்நெஞ்சத்து எம்
1234 புலப்பேன் கொல்
1254 துன்பத்திற்கு
1256 நோதல் எவன்
1257 துறைவன் துறந்
1259 ஈத்துவக்கும் இன்
1261 யாதானும் நாடா
1308 காதலர் தூதொடு
1310 எற்றிற்கு உரியர்

**சர்ப்பத் திருக்குறள் – 1**

596 ஒலித்தக்கால் என்

**உரைகல் திருக்குறள் – 2**

538 பெருமைக்கும்
626 சால்பிற்குக் கட்

**அதிகாரக் குறிக் குறள் – 2**

840 அன்பு, நாண், ஒப்
1103 ஒழுக்கமும், வாய்

**தாழ்ப்பாள்த் திருக்குறள் – 2**

530 காமக் கணிச்சி
748 அன்பிற்குமுண்

**மான் திருக்குறள் – 3**

340 கூற்றமோ கண்
743 பிணையேர் மட
1232 மயிர்நீப்பின்

**தாய்த் திருக்குறள் – 5**

544 ஈன்ருள் முகத்
806 ஈன்ற பொழுதில்
979 ஊரவர் கௌவை

1041 அறஞ்சாரா நல்கு
1319 ஈன்ருள் பசிகாண்

**விளக்குத் திருக்குறள் – 6**

195 களித்தானைக் கார
592 குடியென்னும
711 பொருளென்னும்
773 இகல் என்னும்
993 விளக்கற்றம்
1312 எல்லா விளக்கும்

**தும்மல் திருக்குறள் – 5**

164 ஊடியிருந்தேமா
453 வழுத்தினுள்
454 தும்முச் செறுப்ப
601 நினைப்பவர்
1302 மறைப்பேன் மன்

**பெரியார் திருக்குறள் – 11**

3 செவிச் சொல்லும்
229 பெரியாரைப்
482 எரியால் சுடப்படி
612 அரியவற்றுளெல்
695 செயற்கரிய செய்
724 இழுக்கல் உடையு
791 தம்மிற் பெரியார்
972 சிறியார் உணர்ச்
983 உண்ணது நோற்
1061 உறைசிறியர்
1200 பண்புடையார் பட்

**அலகைத் திருக்குறள் - 1**

331 அருஞ்செவ்வி

**அமிழ்தத் திருக்குறள் – 5**

202 விருந்துபுறத்ததா
568 அமிழ்தினும்
622 அங்கணத்துள்
870 உறுதோறும்
1087 வானின்றுலகம்

உ
கடவுள் துணை.

# தொகுப்புத் திருக்குறள்.

## பிழை திருத்தம்.

| கவி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 3 | செவிச்செல் | செவிச்சொல் |
| | சிறிப்பதை | சிரிப்பதை |
| 13 | நிலமை | நடுவுநிலைமை |
| 28 | பொறுத்தல் | பொருத்தல் |
| 38 | பற்றற்கு உரியது | பற்றற்கு அரியது |
| | நப்பிக்கை | நம்பிக்கை |
| 46 | குன்றேரி | குன்றேறி |
| 51 | வகையல்லான் | வகையல்லால் |
| 55 | சோர்விலான் | சோர்விலன் |
| 56 | தோற்றுதல் | தேற்றுதல் |
| 60 | இராவாமை | இறவாமை |
| 66 | 93 9 | 92 9 |
| | நரகமா | நரகமாகும் |
| 69 | பண்பிலவர்க்கு | அன்பிலவர்க்கு |
| 71 | இல்லாரும் | இல்லாகும் |
| 76 | பவர்க்கு | ஆள்பவற்கு |
| 82 | உயர்ச் | உயரச் |
| 83 | கொடிரு | கொடிறு |
| | கூன்ங்கை | கூன்கை |
| | மற்றவர்க்கு | மற்றவர்க்கு |
| 85 | அவட்டு | அவட்கு |
| 87 | வாழ்வர் | வாழ்வார் |
| 91 | மேலாவாம் | மேல்வாம் |
| 99 | மரத்தணையர் | மரத்தனையர் |
| 103 | 63 10 | 62 10 |
| 104 | படாதவர் | படாஅதவர் |
| 105 | அறரேும் | அற்றேம் |
| 106 | முறைபட | முறைப்படச் |
| | செய்வார் | செய்வர் |
| | இல்ாதவர் | இலாஅதவர் |
| 110 | சொல்லும் | சொல்லுக |
| 118 | எங்குச்சென்றும் | எங்குசென்றும் |

| | | |
|---|---|---|
| 123 | அவ்வாரே | அவ்வாறே |
| | 97 1 | 97 2 |
| 126 | மேலல்லர் | மேலல்லார் |
| 127 | மரம்போல்வார் | மரம்போல்வர் |
| | நன்மக்கட்குறிய | மக்கட்குரிய |
| 128 | ஊலகமே | உலகமே |
| 131 | கொண தற்குரியார் | கொணர்தற்கு |
| | யாம்யிமைப்பினும் | இமைப்பினும் |
| 140 | 12 1 | 112 1 |
| 143 | என எண்ணும் | என் எண்ணும் |
| 145 | 32 10 | 131 10 |
| 146 | ஒருவர்க்கு | ஒகுவற்கு |
| 152 | இனிதே | இனதே |
| 153 | அறன் | அறம் |
| 154 | ஒப்பம் | ஒட்பம் |
| | னுதடய | னுடைய |
| 161 | தார்தாங்சி | தார்தாங்கி |
| 163 | 113 7 | 113 8 |
| 166 | பேதமை | பேதைமை |
| 174 | ஒருவர்க்கு | ஒருவற்கு |
| | போலக | போலக் |
| 179 | மேயந்தற்கு | மேய்ந்தற்று |
| 192 | 101 10 | 100 10 |
| 194 | நச்சப்படாத | நச்சப்படா |
| 199 | முதல அரிந் | முதல் அரிந் |
| 201 | ஒன்ருர் | ஒன்னர் |
| | அமுதுசொரி | அழுதுசொரி |
| 204 | 52 6 | 52 5 |
| 205 | உள்ளதூம் | உள்ளதூஉம் |
| | பொருத்து | பொறுத்து |
| 213 | சோம்பலாள் | சோம்பலால் |
| 214 | தோருறு | தோராறு |
| 215 | தோருறு | தோராறு |
| | 95 2 | 94 2 |
| 217 | கிறது | கின்றது |
| 220 | உரோம்பும் | ஊனோம்பும் |
| 234 | வேலந்திய | வேலேந்திய |
| | 100 8 | 100 9 |
| 240 | கபுமுமில | புகழுமில |

| | | |
|---|---|---|
| 241 | கண்ணினை | கண்ணிணை |
| 248 | துன்பப்படுதல் | துன்பமுறுதல் |
| 256 | உலகத்தில்லை | உலகத்திலில்லை |
| 259 | பிறறை | பிறரை |
| 260 | பொச்சாப்பும் | பொச்சாப்புப் |
| 265 | அறம்பொருள் | அரும்பொருள் |
| 270 | கண்ணுடைவர் | கண்ணுடையவர் |
| 271 | அவறறின் | அவற்றின் |
| 272 | மகிச்சி | மகிழ்ச்சி |
| 273 | அதனின் ஊங்கு | அதனினூங்கு |
| 276 | செருநர் | செருநர் |
| ,, | செருக்கருக்கும் | செருக்கறுக்கும் |
| ,, | கூறிய ஆயும் | கூரிய ஆயுதம் |
| 281 | சூதிகன் | சூதின் |
| 285 | வன்மையுள் | வன்மையின் |
| 286 | தந்து | தந்தது |
| 291 | பொருக்க | பொறுக்க |
| 292 | வள்கணர் | வன்கணர் |
| 296 | தண்ணென்றும் | தண்ணென்னும் |
| | ஏதிலார் | ஏதிலர் |
| 298 | என்றும் | என்னும் |
| 328 | புறங்குன்றிக் | புறங்குன்றி |
| 331 | பேய்கண் | பேஏய்க்கண் |
| 335 | வரங்கூர் | வறங்கூர் |
| 341 | வினைவிக்கு | விளைவிக்கும் |
| | தரற்றி | தாற்றிப் |
| 342 | தோளைக்கூட | தோளைக்கூடப் |
| 429 | யாங்காணும | யாங்கணும் |
| 456 | எவர் | எவள் |
| 471 | தாயது | தாஅயது |
| 508 | வுல்வதோ | ஒல்வதோ |
| 510 | பேரமர்கட்கு | பேரமர்க்கட்டு |
| 587 | கெடு | கெடும் |
| 589 | ஒல்லை | ஒல்லைக் |
| 592 | சூழ | சூழக் |
| 826 | அறந்தார் | துறந்தார் |
| 963 | அஞசம் | அஞ்சும் |
| 989 | எளியானவா | எளியனவா |
| 1316 | தூயாற்கு | தூயார்க்கு |

## இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்

1. செல்லாண்டியம்மன் பதிகம்
2. ஷை பஞ்சரத்தினம்
3. நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு
   (கொலை மறுத்தல்)
4. கந்தன் சித்திரபந்தன மாலை
5. முற்றுமோனையமக வெண்பா
6. கந்தன் ஓரெதுகை வெண்பாமாலை
7. ஷை கவிப்பத்து
8. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் உபதேச மொழி
   வெண்பாமாலை
9. பழநி உயிர்வருக்க வெண்பாமாலை
10. திருச்செந்தூர் அடைக்கலப்பத்து
11. சத்துரு சங்காரப் பதிகம்
12. திருத்தல வெண்பாமாலை
13. பொன்மலை வேலவர் போற்றிப் பதிகம்
14. மாணிக்க விநாயகர் பதிகம்
15. வெங்கிட்டரமண சுவாமி உயிர்வருக்க மாலை
16. மதுரகாளியம்மன் பதிகம்
17. மாங்கரையம்மன் பதிகம்
18. மலர்ப்பத்து
19. கொங்குச் சிறப்பு
20. தண்டபாணி பதிகமும்,
    உயிர்வருக்க முற்றுமோனை வெண்பாவும்
21. சிலேடைப் பஞ்சகம்
22. கண்ணப்ப நாயனர் போற்றிப் பதிகம்
23. தொகுப்புத் திருக்குறள் உரை.

4 JUN 1975

விலை ரூ 2—8—0